
ஸ்ரீமத்
பிரமவைவர்த்த புராணம்
Y. Tharjini
– கே.வி. குணசேகரம் –



## என்னுரை

**ப**த்தொன்பது புராணங்களிலும் நான் இதுவரை எழுதிய நூல்களிலும் என்னைப் பற்றிக் குறிப்பிடப்பட்ட அனைத்தையும் “உங்கள் வாழ்நாள் பலனை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்” என்ற சோதிட நூலில் எழுதியுள்ளேன். அந்நூல் பல ஆயிரப் பிரதிகள் அச்சிடப்பட்டன. அத்துடன் அது சோதிடத்தை விரிவாக ஆராய்ந்த நூல். அதில் சோதிடத்தில் உள்ள அனைத்தையும் எழுதியுள்ளேன். அதை ஒவ்வொருவரும் மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். அதில் ஆறு பக்கங்களில் என்னைப் பற்றி எழுதியுள்ளேன். அதனால் எல்லோரும் அதை வாசித்திருப்பார்கள். அது எனக்கு மிக்க மகிழ்வைக் கொடுக்கிறது. எனது வரலாறு எங்கும் பரந்து வியாபித்துள்ளது.

**ப**தினெட்டு புராணங்களிலும் என்னுரையாக எனக்கும் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திற்கும் மகிழ்வுடன் தாராளமாக உதவியவர்களைப் பற்றியும், நாவலர் வித்தியாலயத்தில் நேரம் காலகத்தைக் கவனிக்காது தமது பிறவேலைகளையும் விடுதலை நாட்களையும் கவனிக்காது மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட சில ஆசிரியர்களைப் பற்றியும் எழுத விரும்புகிறேன். பொதுவாக ஆசிரியர்கள் மாதாந்தம் உயரிய சம்பளத்தையும், சலுகைகளையும் பெறுகின்றனர். ஆனால் பாடசாலையின் நலனுக்காகவோ அல்லது மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவோ உழைப்பவர்கள் மிகமிகச் சிலராவர். ஓர் ஆசிரியர் பாடசாலைக்கு வருமுன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கிறார். பாடசாலை விட்டபின்பும் இரவு எட்டு ஒன்பது மணிவரை தனியாள் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்பித்துப் பெருந்தொகையான வேதனத்தைப் பெறுகிறார். அப்படிப் பெற்ற போதும் மாணவர்களின் கல்வி முன்னேறவில்லை. முன்பு தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லாதபோது யாழ்ப்பாணக் கல்வி இலங்கையில் முதல் இடத்தில் இருந்தது. மாணவர்கள் தோட்ட வேலைகள் முழுவதையும் ஒழுங்காகச் செய்த பின்பே பாடசாலைக்கு வந்து முதலிடத்தைப்

பெற்றனர். இன்று நிலை அப்படியானதல்ல. முழத்துக்கு முழம் தனியார் கல்வி நிறுவனங்கள் வந்துள்ளன. பெற்றோர் தமது பிள்ளைகளை வேறு எந்தத் தொழிலையும் செய்யவிடாது கற்பிக்கின்றார். ஒரு மாணவன் அதிகாலை நான்கு மணியில் இருந்து இரவு பத்து மணிவரை பல ஆசிரியர்களிடம், பல இடங்களுக்கும் சென்று கல்விகற்ற போதும் கடந்த பல வருடங்களாகக் கடைசி நிலையிலேயே இருக்கின்றனர்.

**ஆ**சிரியர்கள் பாடசாலையில் கற்பிப்பதை விடத் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கவே விரும்புகின்றனர். பின் அதிபரும், ஆசிரியர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஆசிரியர் சேவை செய்கின்றனர் என்று கூறுகின்றனர். சேவை என்பது இலவசமாகச் செய்வது. மாதச் சம்பளம், சலுகைகள், ஓய்வூதியம் என்று பலவற்றைப் பெற்றுவிட்டு தாம் சேவை செய்கிறோம் என்றால் யார் நம்புவார்கள். எல்லா ஆசிரியர்களும் அப்படியானவர்கள் அல்ல.

**கோ**ப்பாய் நாவலர் வித்தியாலயத்திற்கு விஞ்ஞான உதவி ஆசிரியராக திருமதி ஜெயமணி சற்குணபாலன் அவர்கள் நான் அதிபராக நியமிக்கப்பட்டன்று அதாவது 01.10.1989 இல் நியமிக்கப்பட்டவர். 2014ஆம் ஆண்டு ஓய்வு பெறும்வரை சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் முழுமையான அர்ப்பணிப்புடன் கடமையாற்றியவர். விஞ்ஞானம் பயிற்சி பெற்ற ஆசிரியையானாலும், சங்கீதம், நடனம் போன்ற பாடங்களிலும் ஆசிரியர் சான்றிதழ் பெற்றார். நடனப் பயிற்சியும் பெற்றவர். உடற்கல்வியில் மிகுந்த ஆர்வம் உடையவர். அதனால் பாடசாலையின் கலைகளுக்கான பொறுப்பாசிரியராகக் கடமை ஏற்று ஏராளமான கோட்டமட்டப் பரிசுகளையும், மாவட்ட, மாகாணமட்டப் பரிசுகளையும் பெற்றுத்தந்தவர். சகலகலாவல்லவரான அவரைப் போன்றதோர் ஆசிரியரை நான் காணவே இல்லை நான் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கோப்பாய் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களில் பணிபுரிந்த அனுபவத்தால் தான் இதைச் செய்கிறேன். நாடகம், நடனம், கூத்து, விளையாட்டுப் போட்டிகள், உடற்பயிற்சி குழு ஆகியவற்றைப் பொறுப்பேற்றும், உதவியாளராக இருந்தும் பெரும் பங்காற்றியவர். அவர் ஒருபோதாவது பின்வாங்கியதும் இல்லை, சினத்ததும் இல்லை, சுயநலநோக்கும் இல்லை. அதிகாலை தொடக்கம் இரவு வரை மாணவ மாணவிகளோடு நின்று அவர்களது தேவைகளைக் கவனிப்பார்.

**உ**யர்ந்த கல்வித் தகமை உள்ள அவர், தான் கற்ற பாடசாலைகள் இரண்டில் ஒன்றிற்குக் கடமையாற்ற விரும்பியபோதும் அது குடும்ப நலனுக்காகக் கொடுக்கப்படவில்லை. இவருடைய தந்தையார் கந்தையா ஊரில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபராக மிக மிகச் சிறப்பாகக் கடமையாற்றியவர். இவரது தாயாரும் ஆசிரியர். இவர்களது அர்ப்பணிப்பான சேவையை வேறு சில ஆசிரியர்கள், அதிபர்கள் விரும்பாது பொறாமை கொண்டதன் விளைவுதான் அவர் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டமைக்குக் காரணமாகும். அதன்பின் அவர் அகில இலங்கை மட்டத்தில் புகழ் பூத்த ஆசிரியரான பின்

பெரிய பெரிய பாடசாலைகள் வற்புறுத்திக் கேட்டபோதும் அவர் மறுத்து நாவலர் பெருமான் நிறுவிய பாடசாலையிலேயே ஒய்வு பெற்றார்.

**இ**வரைப் போல அர்ப்பணிப்பு மிகுந்த ஆசிரியை திருமதி கமலராணி பாஸ்கரநாதசர்மா. பிராமணப் பெண்ணாக இருந்து பிராமண ஒழுக்கத்தை வழுவாது வாழ்ந்த போதும், தனது குலப்பெருமையையோ, கல்வித்தகமையையோ திறமையையோ வெளியே காட்டிக் கொள்ளாது மிகவும் நெருக்கமாக, அன்புடனும், பண்புடனும் மாணவர்களுடன் பழகி பல பரிசுகளைப் பெற்றுத் தந்தவர். சங்கீதப் பயிற்சி பெற்ற ஆசிரியரான இவர் ஏனைய பாட அறிவையும் உடையவர். தமிழ்த்தினப் போட்டியின் போது நடனம், பாடல், அபிநயம், கூத்து என்பவற்றை மாணவர்களுக்கு போதித்து பல கோட்டமட்ட, மாவட்டமட்ட, மாகாணமட்டப் பரிசுகளைப் பெற பெரிதும் உதவியவர். அத்துடன் கவிதைகளைப் புனைவதிலும் ஆற்றல் மிக்கவர். நூற்றுக்கணக்கான கவிதைகளை இயற்றியுள்ளார். பாடசாலையில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளிலும் அர்ப்பணிப்புடன் கலந்து மாணவர்களை ஊக்குவித்துப் பரிசுகள் பெறவைப்பதில் வல்லவர். நேர்மையானவர்கள், ஒழுக்கமுள்ளவர்கள் அதிகாரத்துக்கு அடிபணியமாட்டார்கள். ஒழுக்கக் கேடாகவும் நடக்கமாட்டார்கள். இவரையும் சிலருக்குப் பிடிக்காமையால் தான் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு இடம் மாற்றினார்கள். அவரின் அர்ப்பணிப்பான சேவையால் மாணவர்கள் பல பரிசுகளைப் பெற்றனர். பாடசாலை அகில இலங்கை ரீதியாகச் சிறப்பான இடத்தைப் பெற்றது.

**மா**ணவர்கள் வணங்குவதற்காக ஒரு பிள்ளையார் கோவிலை பாடசாலையில் கட்டியபோது அவர் தன்னாலான சகல உதவிகளையும் செய்தார். கோவிலைப் பொறுப்பேற்று நல்ல முறையில் பூசைகள் வழிபாடுகள் செய்ய வழிவகுத்தார். எந்தநேரமும் பூரித்த சிரித்த முகத்துடன் இனிமையாகப் பேசும் இவர் ஒருபோதும் யாருடனும் முரண்பட்டதில்லை.

**கோ**வில்கட்ட அத்திபாரமிட்ட நாள் தொடக்கம், அவர் ஓய்வு பெறும் வரை கோவிலை நல்லமுறையில் நிர்வகித்தவர். ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி திதியன்று மிக்க இனிமையான மோதகம், கொழுக்கட்டை, அவல் என்பவற்றைப் பிரசாதமாகவைப்பார். அத்துடன் பயபக்தியுடன் மாணவர்களைக் கொண்டு பசனை படிப்பிப்பார். கோவிலைக் கழுவி, அலங்கரித்து மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தவர்.

**இ**ரண்டு ஆசிரியைகளும் ஆசிரியர்களுக்கே ஒரு முன்னுதாரனமாக வாழ்ந்தார்கள். இவர்களின் சேவையைப் பாராட்டி இப் புராணநூலை வெளியிருகிறேன். அத்துடன் அருகில் இருக்கும் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் ஆனிமாதம் கொடியேறிப் பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும். 1990ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம் ஆண்டு வரை எமது பாடசாலையில் கற்கும் மாணவர்கள் தான் கோவிலைச் சுத்தப்படுத்தி பக்தர்களின் வழிபாட்டிற்கு உதவுவார்கள்

**ப**தினெண் புராணங்களைப் பற்றி இங்குள்ள எவருக்கும் தெரியாதென்று நினைக்கிறேன். ஏனென்றால் பிரசங்கிகள், பெரிய புராணத்தையும், கந்தபுராணத்தையும் தவிர வேறெந்த புராணம் பற்றியும் எந்த சமயம் பிரசங்கத்திலும் சேர்த்ததில்லை. எனது பேரன் பத்து வயது. அவன் சொல்வான் பெரிய புராணத்தில் உள்ள சம்பந்தர், அப்பர், சுந்தரர் போன்ற நாயன்மார்களின் வரலாறு பற்றிப் பாடசாலையில் கற்பிக்கின்றனர். பேசுவிக்கின்றனர். வானொலி, தொலைக்காட்சி, கோவில்கள் ஆகியவற்றில் அடிக்கடி உரை நிகழ்த்தப்படுகிறது. ஏன் தாத்தா வேறு கதைகள் இல்லையா என்று கேட்கிறான். அந்தளவில் பெரியபுராணம் தினமும் சொல்லப்படுகிறது.

**இ**தைவிட எத்தனை ஆயிரக்கணக்கான புராணக் கதைகள் உண்டு. இவற்றையெல்லாம் பேசாமைக்குக் காரணம் என்னவென்று புரியவில்லை.

**அ**தனால் தான் நாள் பதிணென் புராணங்களை எழுதி வெளியிட்டுள்ளேன். எத்தனையோ விதம் விதமான கதைகள் உண்டு. இதைவிட உப புராணங்கள் பதினெட்டு உண்டு. இவை இலங்கையில் இல்லை. காரணம் வாங்குவாரில்லை. பதிணென் புராண நூலும் இலங்கையில் இல்லை. எனது நண்பர் ஒருவரிடம் சொல்லித் தமிழ்நாட்டில் இருந்து பெற்றேன்.

**அ**தில் சமூகசேவையை அர்ப்பணிப்புடன் செய்தவர்களைப் பற்றி எழுதலாம் என்று நினைத்து அவர்களிடம் பெரும் உதவி பெற்றவர்களையும், இனத்தவர்களையும், ஊரவரையும் நாடினேன். முதல் முறை இவர்களுடன் பேச முடிந்தது. அடுத்து தொடர்பு கொண்டாலும் தொடர்பை ஏற்படுத்த அவர்கள் விரும்பவில்லை. கல்விக்காக வாழ்ந்த இரா. சுந்தராகங்கம், வே.தி செல்வரத்தினம் போன்ற பிரபலமாக கல்விப் பணிப்பாளரின் நண்பர்கள் என்று கூறியவர்களே தலைமறைவாகிவிட்டனர். இதுதான் யாழ்ப்பாணம் நான் தொடர்பு கொள்ளும் போது மகிழ்வுடன் கதைத்வர்கள். பின்பு தொடர்பு கொள்ளவில்லை. பலமுறை தொலைபேசியில் தொடர்புகொண்ட போதும் தொடர்புகொள்ளாது தொலைபேசியைப் பூட்டிவைத்து விட்டனர். அவர்கள் சேவையில் இருக்கும்போது அவர்களைப் புகழ்ந்தபடி அவர்களுக்கு வால்பிடித்தவர்கள் அவர்களில்லாதபோது மறைந்துவிட்டனர். இப்படி ஒரு நிலை யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஏற்படும் என நான் நினைக்கவில்லை. என்ன செய்வது என்று புரியவில்லை. பாவம் அவர்கள். அவர்களது ஆத்மா சாந்தியடையட்டும்

**இ**ந்நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த யோகநாதன் தர்ஜினி (ஆரியன் கிரியேஷன்ஸ் கோப்பாய்) அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## 1. தேற்றுவாய்



**பி**ரமாண்ட புராணம், மார்க்கண்டேய புராணம், பவிஷ்ய புராணம், வாமண புராணம், பிரம்ம புராணம் போன்று பிரமவைவர்த்த புராணமும் ஒரு ராஜச புராணமாகும். பிரமவைவர்த்த புராணம் பிரம்மகாண்டம், பிரகிருதி காண்டம், கணேச காண்டம், ஸ்ரீகிருஷ்ண காண்டம் என நான்கு பிரிவுகளை உடையது. இது பிரம்மனின் பரிநாம வளர்ச்சியைப் பற்றியும் மிகவும் விரிவாகக் கூறுவதால் இதற்குப் பிரமவைவர்த்த புராணம் என்ற பெயர் ஏற்பட்டது.

**ஸ்ரீ** கிருஷ்ணனது ஜனன காண்டத்தில் பிரம்மாவினுடைய சகுனம், நிர்க்குணம் ஆகிய இரு குணங்களையும் மிகவும் விரிவாகச் சொல்லப்படுகிறது. கல்வித் தெய்வமாக சரஸ்வதியைக் காமதேனுவாக உருவகித்தால், சுருதிகள் என்று சொல்லப்படும் வேதத்தின் கிரந்தங்கள் கன்றுகளாகும். சரஸ்வதி என்ற காமதேனுவில் இருந்து வேதவியாசர் பிரமவைவர்த்த புராணம் என்னும் பாலைக் கறந்தெடுத்தாகப் புராணங்கள் கூறுகின்றன. அந்தளவில் பால் என்று குறிப்பிடப்பட்ட இப் புராணம் பல சிறப்புகள் வாய்ந்தது.

**பி**ரளயத்தின் போது பாதிக்கப்பட்ட அறியாமை மிக்க மக்களுக்கு இடைவிடாது பாயும் பாலான பிரமவைவர்த்த புராணத்தை அறிமுகம் செய்து அருந்தவைத்தார். வேதவியாசர் தனது மகனான சூதமுனிவருக்கு இப் புராணத்தை விரிவாகக் கூற, சூதமுனிவர் ஏனைய முனிவர்களுக்கு நைமிசாரண்யம் என்ற புனித ஆச்சிரமத்தில் வைத்துக் கூறலானார்.




“**மு**னிவர்களே, பிரமவைவர்த்த புராணத்தின் முதலாவது காண்டம் மனிதர்களைப் பற்றியும், இரண்டாவது காண்டம் கடவுள்கள், தேவியர்கள் பற்றியும், அவர்களை வழிபாடு செய்யும் முறைகள் பற்றியும், சொர்க்கங்கள், நரகங்கள், நோய்கள், அவற்றிற்கான நிவாரண வழிகள் பற்றியும் கூறுகிறது. மூன்றாவது காண்டம் கிருஷ்ணனது அவதாரம் பற்றியும், அவனது லீலைகள் பற்றியும் சுவையாகக் கூறுகிறது.

## 2. படைப்பு

**பி**ரளயத்தின் போது பூலோகமும், சொர்க்கலோகமும், புவர்லோகமும் அழிந்துவிட்டன.

**இ**ம் மூன்று லோகங்களுக்கும் மேலே இருந்த வைகுந்தலோகமும், சிவலோகமும் வெற்றிடங்களாக இருந்தன. கிருஷ்ணன் தங்கியிருக்கும் கோலோகம் மட்டும் எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லாமல் முன்பு இருந்தது போலவே இருந்தது. அந்த லோகம் மட்டும் எதுவிதமான மாற்றமுமடையாமல் இருந்தது.



**பி**ரமவைவர்த்த புராணம் விஷ்ணுவைப் பற்றி மிகவும் விரிவாகவும், உயர்வாகவும் கூறுவதோடு, "விஷ்ணுவே பரப்பிரம்மம் என்றும் கூறுகிறது. இப் புராணம் கிருஷ்ணனது இருப்பிடம் கோலோகம் என்று கூறுவதோடு வைகுந்தத்தைப் பற்றி சிறப்பாக எதுவும் கூறவில்லை. கோலோகம் கிருஷ்ணனது இருப்பிடமாக இருப்பதால் அது மிகவும் ஒளியுடையதாகவும், அழகாகவும், மஞ்சள் நிறம் கொண்டதாகவும் விளங்குகிறது.



**அ**திசயமான பிரகாசமான ஒளியை உடைய கோலோகத்தில் கிருஷ்ணன் வனமாலி என்ற பெயருடன் தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். உடலெங்கும் சந்தனம் பூசி, கௌத்துவ மணி மாலையணிந்து, முடி தரித்து, காட்டு மலர்களால் ஆரை மாலைகள் சூடி என்றும் மாறாத இளந்தோற்றத்துடன் இடையனின் கோலத்தில் அமர்ந்திருக்கும் வனமாலியைச் சுற்றிக் கோபியர்கள் நிற்கின்றனர். இத் திருக்கோலத்தை அழியாத பிரம்மம் என்று பிரமவைவர்த்த புராணம் சிறப்பித்துக் கூறுகிறது.

## சிருஷ்டி

**கி**ருஷ்ணன் தனது விருப்பப்படியே பூலோகத்தைப் படைத்தார். பூலோகத்தைப் படைக்கும் போது அது முழுமையாக இருண்டிருந்தது. அங்கே நீரும், காற்றும் இருக்கவில்லை. கிருஷ்ணனது வலது புறத்தில் இருந்து நாராயணன் தோன்றினார். தோன்றும் போது அவர் சத்துவகுணம் நிறைந்தவராகவே இருந்தார். அவரது கைகளில் சங்கும், சக்கரமும், கதையும், தாமரை மலரும், கௌஸ்துப மணியும், வில்லும் இருந்தன. கருநீலநிறமுடையவராக இருந்தமையால் அவரை நாராயணன் என்று அழைத்தனர். கிருஷ்ணனது வலது புறத்தில்

இருந்து தோன்றிய நாராயணன் கிருஷ்ணரைப் போற்றி வணங்கிவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டார்.

**அ**டுத்துக் கிருஷ்ணனின் இடது புறத்தில் இருந்து தாமச குணத்தோடும், மூன்று கண்களுடனும், சடாமுடியுடனும், கையில் திரிசூலத்தை ஏந்தியவராகச் சிவன் தோன்றினார்.



**கி**ருஷ்ணனது நாபியில் இருந்து தாமரை வெளிப்பட்டது. அத் தாமரையில் இருந்து ராஜச குணத்தை உடைய பிரம்மன் தோன்றினான். அவன் ஒரு முதியவராக, நரைத்தலை முடியுடன், வெண்நிற ஆடை அணிந்து, கையில் கமண்டலத்துடன், நான்கு முகங்களுடனும் அவன் காட்சியளித்தான். அவன் கிருஷ்ணனை வணங்கித் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தான்.

**அ**ப்போது கிருஷ்ணனது மார்பில் இருந்து யமன் தோன்றினான். யமனும் கிருஷ்ணனை வணங்கிவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் சென்று அமர்ந்தான்.




**அ**வர்களைப் பார்த்துச் சிரித்த கிருஷ்ணனது வாயில் இருந்து வெள்ளை நிறப் பட்டுச்சேலை அணிந்து, கையில் வீணையும், புத்தகமும் கொண்டு சரஸ்வதி வெளிப்பட்டாள். அதேவேளை கிருஷ்ணனது மனதில் இருந்து பொன்நிறமுடைய மகாலட்சுமி தோன்றினாள். ராஜச குணத்தை உடைய அவள் சொர்க்கத்தில் வசிப்போர்க்கு சுவர்க்கலட்சுமி என்றும், அரசர்களுக்கு அவள் ராஜலட்சுமி என்ற இருவேறுபட்ட தோற்றங்களுடன் அவள் தோன்றினாள். கிருஷ்ணனின் சிந்தனையில் இருந்து போர்த் தெய்வமான துர்க்கை தோன்றினாள். கிருஷ்ணனின் நாவில் இருந்து மந்திரங்களுக்குரிய தெய்வமான சாவித்திரியும், மனதில் இருந்து காதல் தெய்வமான மன்மதனும், அவனது இடப்பாகத்தில் இருந்து அவனது மனைவியான ரதிதேவியும் தோன்றினர். அதன்பின் அக்கினி, வருணன், வாயு ஆகியோரும் அம் மூவரின் மனைவிமாரான ஸ்வாகா, வருணனி, வயாவி ஆகியோரும் தோன்றினர்.

**அ**டுத்துக் கிருஷ்ணரிடமிருந்து பேரண்டம் தோன்றிது. அப்பேரண்டம் நீரால் சூழப்பட்டு, நீரில் மிதந்து கொண்டிருந்தது. அந்த நீரில் மிதந்து கொண்டிருந்த பேரண்டத்தில் இருந்து ஒரு பெரிய உருவம் தோன்றிது. அவ்வுருவமே மகாவிஷ்ணுவாகும். மகாவிஷ்ணுவின் காதுகளில் இருந்து மது, கைடபர் என்ற இரு கொடிய அரக்கர்கள் தோன்றினர். அவர்கள் இருவரும் மிகவும் பயங்கரமான தோற்றத்துடன் தோன்றினர். அவர்களுக்கு எதிரே அமர்ந்திருந்த

பிரம்மாவை அவர்கள் கொல்ல முயன்றனர். அதை உணர்ந்த நாராயணன் அவர்களைக் கொன்று, அவர்களின் உடலில் இருந்து வெளிப்பட்ட கொழுப்பில் இருந்து பூமியைத் தோற்றுவித்தார். இப் புராணம் உலகில் உள்ளவையாவும் கிருஷ்ணனில் இருந்து தோன்றியவை என்று கூறுகிறது. அதனால் இப் புராணம் ஏனைய புராணங்கள் யாவற்றிலிருந்தும் முற்றாக மாறுபட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. முக்கியமாக சிருஷ்டி பற்றி இப் புராணம் மாறுபாடு கொண்டிருக்கிறது.

## காலம் உருவாதல்

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என ஏனைய புராணங்கள் யுகங்களை நான்காக வகுத்திருக்கின்றன. அதுபோல பிரமவைவர்த்த புராணமும் யுகங்களை நான்காக வகுத்தபோதும், இவ் நான்கையும் ஒன்று சேர்த்து மகாயுகம் என்று சொல்கிறது. முந்நூற்று அறுபது மகாயுகங்கள் ஒரு திவ்வியயுகமாகும். எழுபத்தொரு திவ்வியயுகங்கள் சேர்ந்து ஒரு மன்வந்திரம். பதின்நான்கு மன்வந்திரங்களைக் கொண்டது பிரமாவுக்கு ஒருநாள். அத்தகைய முந்நூற்று அறுபது நாட்களை உடையது பிரம்மாவுக்கு ஓர் ஆண்டு. அத்தகைய நூற்றெட்டு ஆண்டுகள் கிருஷ்ணனுக்கு ஒரு நிமிடம். இந்த ஒரு நிமிடத்தைக் கல்பம் என்று அழைக்கப்படுகிறது.



கல்பங்கள் பல உள்ளன. அவை பிரம்மகல்பம், வராககல்பம், பத்மகல்பம் போன்றவையாகும். பிரம்ம கல்பத்தில் தான் மது, கைடவர்களின் கொழுப்பில் இருந்து பூமி தோன்றிது. வராக கல்பத்தில் பூமியை இரணியாக்சன் என்ற அசுரன் கவர்ந்து சென்று கடலின் அடியில் மறைத்து வைக்கத் திருமால் வராக அவதாரம் எடுத்துத் தனது கோரப் பற்களால் அசுரனைக் குத்திக் கொன்றுவிட்டு பூமியை மீட்டு வந்து நிலைநிறுத்தினார். பத்ம கல்பத்தில் பிரம்மா, திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றி பூலோகம், புவர்லோகம், சுவர்லோகங்களைச் சிருஷ்டித்தார்.

## படைப்பு

கோலோகத்தில் உள்ள ராசமண்டபத்தில் கிருஷ்ணன் மிகவும் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தபோது, அவரின் இடதுபுறத்தில் இருந்து ராதை தோன்றினாள். இது பற்றிய

வரலாறு பிரமவைவர்த்த புராணத்திலும் பத்மபுராணத்திலும் மட்டும் உண்டு. ஏனைய புராணங்களில் ராதையின் வரலாறு கூறப்படவில்லை.



**கி**ருஷ்ணரின் இடப் பாகத்திலிருந்து தோன்றிய ராதையின் மயிர்க் கால்களில் இருந்து ஆயிரக்கணக்கான கோபிகைகள் தோன்றினார்கள். கிருஷ்ணனது உடலில் உள்ள துளைகளில் இருந்து ஆயிரக்கணக்கான கோபர்கள் தோன்றினர். அத்துடன் பசுக்கள், எருதுகள், கன்றுகள், குதிரைகள், சிங்கங்கள், அன்னங்கள் யாவும் கிருஷ்ணனின் உடலில் இருந்தே தோன்றின. இவை தோன்றியவுடன் கிருஷ்ணன் எருதைச் சிவனுக்கும், அன்னத்தைப் பிரம்மாவுக்கும், ஆண் குதிரையைத் தர்மனுக்கும், சிங்கத்தைத் துர்க்கைக்கும் வாகனங்களாகக் கொடுத்தார். அதன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து ஐந்து தேர்கள் வெளிப்பட்டன. அவற்றைக் கிருஷ்ணன் ராதைக்கு ஒரு தேரையும், நாராயணனுக்கு ஒரு தேரையும் பரிசாகக் கொடுத்துவிட்டு ஏனைய மூன்று தேர்களையும் தனது தேவைக்காக எடுத்துக் கொண்டார்.

**அ**தன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து குபேரன் தோன்றினான். குபேரனின் இடப்பாகத்தில் இருந்து அவனது மனைவியான மனோரமா தோன்றினாள். அதன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து குபேரனின் பணியாட்களாகிய குய்யர்கள்களும், சிவபெருமானின் கணங்களாகிய பூதங்களும், நாராயணனின் சேவகர்களாகிய பர்சூவதர்களும் தோன்றினர்.




**அ**தன்பின் கிருஷ்ணன் மகாலட்சுமியையும், சரஸ்வதியையும் நாராயணனுக்குத் துணைவியராகவும், சாவித்திரியைப் பிரம்மாவுக்குத் துணைவியாகவும், ரதிதேவியை மன்மதனுக்குத் துணைவியாகவும், மனோரமாவைத் துணைவியாகக் குபேரனுக்கும் கொடுத்துத் திருமணத்தை நடத்திவைத்தார். கிருஷ்ணன் சிவபெருமானுக்குத் துர்த்கையைத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்தபோது, துர்க்கை சிவபெருமானைத் திருமணம் செய்ய மறுத்தாள். அதனால் அவளைத் துறவியாக இருக்கும்படி கிருஷ்ணன் பணித்தான். பின் பல கல்பங்களுக்குப் பின் துர்க்கையைச் சிவபெருமான் மணந்தார். அதுவரை துர்க்கை கிருஷ்ணனது பாதுகாப்பிலேயே இருந்தாள்.

**அ**தன்பின் கிருஷ்ணன், பிரம்மாவுக்கு ஓர் அழகான மாலையை அணிவித்து, தவம் செய்யுமாறு கூறினான். தவத்தை உரிய முறைப்படி செய்து முடித்துவிட்டுப் படைப்புத்

தொழிலை ஆரம்பிக்குமாறும் கூறினான். பிரம்மன் தவம் செய்யச் சென்றபோது கிருஷ்ணர், கோபிகைகளையும், கோபாலர்களையும் அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்திற்குச் சென்றார்.

## பிரமனின் படைப்பு



**த**வத்தை முறைப்படி செய்து முடித்துவிட்டுக் கிருஷ்ணரிடம் வந்த பிரம்மன் அவரை வணங்கி ஆசிபெற்றுவிட்டுப் படைப்புத் தொழிலை ஆரம்பித்தார். முதலில் உலகைப் படைத்த பிரம்மன், அடுத்ததாகச் சுமேரு மலையையும், கைலாய மலையையும், மலயம் மலையையும், இமய மலையையும், உதயசல மலையையும், அட்சாசர மலையையும், கபேலம் மலையையும், கந்தமாதனம் மலையையும் படைத்தார். அதன்பின் பல ஆறுகளையும், நகரங்களையும், கிராமங்களையும் படைத்தார். அதன்பின் லவண சமுத்திரத்தையும், இச்சு சமுத்திரத்தையும், சுரா சமுத்திரத்தையும், சர்பி சமுத்திரத்தையும், ததி சமுத்திரத்தையும், துத்த சமுத்திரத்தையும் படைத்தார். அதன்பின் ஜம்புத்வீபம், சுகத்வீபம், குசத்வீபம், பிலக்சத்வீபம், சுகத்வீபம், பிலக்சத்வீபம் என்ற ஏழு நிலப் பிரிவுகளையும் படைத்தார்.

**அ**தன்பின் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்னும் ஏழு லோகங்களையும் படைத்தார். அதன்பின் அதல, விதல, சுதல, தலாதள, மகாதள, பாதாள, ரசதல் போன்ற நகரங்களையும் படைத்தார். இவையனைத்தையும் பிரமாண்டம் என்று சொல்லப்படும். இவையாவும் மாய உருவங்களாகும். அத்துடன் இவை அழியும் தன்மை வாய்ந்தன. விஷ்ணுலோகமும், சிவலோகமும், கோலோகங்களும் ஒருபோதும் அழியாது நிலைத்திருக்கும்.

**பி**ரம்மனின் மனைவியான சாவித்திரியிலிருந்து நான்கு வேதங்களும் தோன்றின. அது தவிர ஆறுராகங்கள், முப்பத்தாறு ராகினிகள், கால அளவு என்பவற்றைப் பிரமன் படைத்துத் தனது மனைவியான சாவித்திரியிடம் ஒப்படைத்தார்.



**தே**வலோகச் சிற்பியான விசுவகர்மா, பிரம்மனது நாபியில் இருந்து தோன்றினார். அவருடன் எட்டு வசுக்கள் தோன்றின. அதன்பின் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நால்வர் தோன்றினர். அவர்களைப் படைத்த பிரமன், “நீங்கள், கிருஷ்ணரை நோக்கித் தவம் செய்து படைப்புத் தொழிலை ஆரம்பியுங்கள்” என்றார். தவம் செய்யச் சென்ற நால்வரும் தவம் செய்தார்களே தவிரப் படைப்புத் தொழிலில்

அக்கறை காட்டவில்லை. அதனால் பிரம்மனுக்குக் கடுஞ்சினம் உண்டானது. அக் கோபத்தினால் பிரம்மனது நெற்றியிலிருந்து தீ கிளம்பியது. அத் தீயில் இருந்து ருத்திரன் தோன்றினான்.

**அ**தன்பின் பிரம்மனது வலது செவியில் இருந்து புலஸ்தியர் தோன்றினார். இடது செவியில் இருந்து புலகல் தோன்றினார். அவர்களுடன் பிரம்மனின் வலப்பக்கத்தில் இருந்து கிரதுவும், வலது நாசித்துவாரத்தில் இருந்து அரணியும், இடது நாசித்துவாரத்தில் இருந்து அங்கிரசரும், வலது பக்கத்தில் இருந்து பிருதுவும், இடது பக்கத்தில் இருந்து தசனும், அவரது நிழலில் இருந்து காத்தமரும், உந்தியில் இருந்து பஞ்சகிகாவும், மார்பில் இருந்து வதுவும், கழுத்தில் இருந்து நாரதரும், புஜங்களில் இருந்து மரீசியும், திரும்பவும் கழுத்தில் இருந்து அபத்தரதமனும், நாவில் இருந்து வசிட்டரும், கீழ் உதட்டில் இருந்து பிரதேசரும், இடது அக்குளில் இருந்து கம்சரும், வலது அக்குளில் இருந்து யதியும் தோன்றினர்.



**அ**வர்கள் எல்லோரையும் அழைத்து மக்களை உற்பத்தி செய்து பெருக்குமாறு பிரமன் கூறினான். நாரதரைத் தவிர ஏனையோர் பிரம்மன் கூறியதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நாரதர் அதை ஏற்காது தான் தவம் செய்யப்போவதாகக் கூறினார்.

**அ**தனால் பெருங்கோபங்கொண்ட பிரம்மன், “நாரதா, எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயத்தை நீ ஏற்காததால், நீ தீய துர்க்குணங்கள் நிரம்பிய கந்தர்வனாகப் பிறப்பாய். அப்போது நீ எந்தப் பிரம்மத்தை அடையத் தவம் செய்ய நினைத்தாயோ, அப் பிரம்மத்தைப் பற்றிய ஞானம் இல்லாதவனாக, ஒரு வேலைக்காரிக்கு மகனாகப் பிறந்து அலைவாய்” என்று சபித்தார். அதைக் கேட்டுக் கோபங்கொண்ட நாரதர் பிரம்மனைப் பார்த்து, “என்னைச் சபித்த உனக்குப் பூவுலகில் பூசைகள், ஆராதனைகள் நடைபெறாது. உனக்காக யாரும் கோவிலையும் கட்டமாட்டார்கள்” என்று சபித்தார்.

**பி**ரமனின் கட்டளையை ஏற்ற நாரதரைத் தவிர்த்த ஏனையோர் மகிழ்வுடன் படைப்பில் இறங்கினர். மரீசிக்குக் காசியபரும், அத்திரிக்குச் சந்திரனும், பிரதேசருக்குக் கௌதரும், புலஸ்தியருக்கு அகத்தியரும் பிறந்தனர்.

## 4. மனுவும் சதரூபையும்

**பி**ரம்மன், சுயம்புவ மனுவையும் அவனுக்கு மனைவியாக சதரூபையையும் தோற்றுவித்து அவர்களை ஆசீர்வதித்துப் படைப்புத் தொழிலைச் செய்யுமாறு பணித்தான். இருவரும்

பிரமனின் கட்டளையை ஏற்று அவர்கள் பிரியவிரதன், உந்தானபாதன் என்ற இரு புத்திரர்களையும், ஆகுதி, தேவகுதி, பிரகதி என்ற மூன்று புத்திரிகளையும் பெற்றெடுத்தனர்.

**ஆ**குதி ருசி முனிவரையும், தேவகுதி காத்தம முனிவரையும் பிரகதி தசனையும் திருமணம் செய்தனர்.

**த**சன், பிரகதி தம்பதிகளுக்கு அறுபது புத்திரிகள் பிறந்தனர். இவர்களில் இருபத்தேழு பேரைத் சந்திரன் மணந்தான். எட்டுப் புத்திரிகள் தர்மராஜனை மணந்தார். இப் புத்திரிகளில் பதினாறு புத்திரிகள் பதினொரு ருத்திரர்களை மணந்தனர். பதின்மூன்று பேர் காசியப முனிவரை மணந்தனர். ஒருத்தி சிவபெருமானை மணந்தாள்.



**த**ர்மனின் முதலாவது மனைவியான மிருதி என்பவள் நரன். நாராயணன் என்ற இரு புத்திரர்களைப் பெற்றெடுத்தாள். ஏனைய மனைவிகள் தைரியம், மகிழ்ச்சி, திருப்தி என்பவற்றைப் பெற்றெடுத்தனர். ருத்திரர்கள் பெற்ற புத்திரர்கள் சிவகணங்களாயினர். தசனின் மகளான சதி சிவபெருமானை மணந்தாள். அவள் தசன் யாகம் செய்யும் போது தனது கணவனான சிவபெருமானுக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை என்று சினங்கொண்டு அக்கினி குண்டத்தில் குதித்து இறந்துபோனாள். பின் சிவபெருமானின் அனுக்கிரகத்தால் அடுத்த பிறவியில் இமாவாணின் மகள் பார்வதி என்ற பெயரில் பிறந்து சிவபெருமானை மணந்து கொண்டாள்.

**கா**சியப முனிவரின் ஒரு மனைவியான அதிதி என்பவள் தேவர்களைப் பெற்றெடுத்தாள்.



முனிவரின் இன்னொரு மனைவியான திதி என்பவள் அசுரர்களைப் பெற்றெடுத்தாள். இன்னொரு மனைவியான கத்துரு பாம்புகளைப் பெற்றெடுத்தாள். வினதா என்ற காசியப முனிவரின் மனைவி பறவைகளைப் பெற்றெடுத்தாள். சுரபி என்ற மனைவி பசுக்களையும், எருமைகளையும் பெற்றெடுத்தாள். இன்னொரு மனைவியான சரம என்பவள் நான்கு கால்ப் பிராணிகளைப் பெற்றெடுத்தாள். தனு என்பவள் தானவர்களையும், ஏனைய மனைவியர் ஏனையோரையும் பெற்றெடுத்தனர்.

**கா**சியப முனிவரின் இருபத்தேழு புத்திரிகளைச் சந்திரன் திருமணம் செய்தபோதும் ரோகினியை மட்டுமே அவன் மோகித்தான். அவளுடனேயே எந்நேரமும் கூடிக்குலாவி இன்பமாக இருந்தான். அதனால் மிகவும் வேதனைப்பட்ட தசனின் புத்திரிகள் இருபத்தாறு

பேரும் சென்று தமது தந்தையான தசனிடம் கூறி வேதனைப்பட்டனர். தனது புத்திரிகளுக்கு நேர்ந்த கொடுமையை நினைத்துப் பெருங்கோபம் கொண்ட தசன், சந்திரனைத் தேயந்து அழிந்து போகுமாறு சாபமிட்டான். அதனால் மிக்க பயம் கொண்ட சந்திரன் சிவபெருமானிடம் சென்று முறையிட்டான். சந்திரனது நிலையைக் கண்ட சிவபெருமான், அவன் மீது இரக்கம் கொண்டு, தினம் தினம் தேய்ந்து போகும் நீ பின் தினம் தினம் படிப்படியாக வளர்ச்சியடைந்து பூரணமாவாய் என்று அருளினார். அதன் பின்பு சந்திரன் தனது இருபத்தேழு மனைவியர்களுடனும் சமமாக மதித்து நடந்து கொண்டான்.

**பி**ருகு முனிவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குப் பிருகு முனிவர் சியாவனன் எனப் பெயரிட்டார். சிரது முனிவருக்கு மிகவும் குள்ளமான பல குள்ளமான புத்திரர்கள் பிறந்தனர். அவர்களைப் பாலசில்ய முனிவர்கள் என்று மற்றவர்கள் அழைத்தனர். ஆங்கிரச முனிவருக்கு மூன்று புத்திரர்கள் பிறந்தனர். அவர்களுக்குப் பிருகஸ்பதி, உததிதீயன், சம்பரன் என ஆங்கிரச முனிவசர் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார். வசிட்ட முனிவரின் மகன் சகிரி. சகிரியின் மகன் பரராச முனிவர். பரராச முனிவரின் மகன் வியாசர். வியாசரின் மகன் சுகதேவன். விஷ்வகர்மாவும் குபேரனும் புலஸ்தியரின் புத்திரர்கள். புலஸ்தியரின் இரண்டாவது மனைவியின் புத்திரர்கள் இராவணனும் கும்பகர்ணனும். வீபீசனனுமாவர்.

**பு**லகருக்கு வடச்யன் பிறந்தான். ருசிக்கு சாண்டில்யன் பிறந்தான். கௌதமனுக்கு சவர்ணி பிறந்தான். பிரகஸ்பதிக்கு பரத்வாஜன் பிறந்தான். இவர்களது சந்ததியினர் அனைவரும் பிராமணர்களாவர். இவர்கள் காசியப பரத்வாஜ, வத்ச்ய, சவர்ணி, சாண்டில்ய கோத்திரத்தில் பிறந்தவர்களாவர். ஏனைய அந்தணர்கள் பிரம்மனின் முகத்தில் இருந்து தோன்றியவராவர்.



**சூ**ரியனும், சந்திரனும், மனுவின் புத்திரர்களும் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய சத்திரியர்கள் பிரம்மாவின் புஜத்தில் இருந்து தோன்றியவர்களாவர். வைசிகர்கள் பிரம்மாவின் தொடையில் இருந்தும், சூத்திரர்கள் பிரம்மாவின் பாதத்திலிருந்தும் தோன்றியவர்களாவர். இவர்களை விட மேலும் பல வம்சங்களைப் பற்றியும், இனங்களைப் பற்றியும் இப் புராணம் கூறுகிறது.

## 5. உறவு முறைகள்

**பி**ரம்மன் தான் உறவு முறைகளை வகுத்து உலகிற்கு அளித்ததாக இப் புராணம் கூறுகிறது. இப் புராணம் வடமொழியில் ஆக்கப்பட்டதால் அது கூறும் இனங்கள், வம்சங்கள், உறவு முறைகள் யாவும் வடமொழியிலேயே கூறப்பட்டுள்ளன. தந்தை, தாய், பாட்டன், பாட்டி, சித்தி, பெரியதாய், பெரியதாயின் மகன், மகள், கணவன், மனைவி, மாமனார், மாமியார்,


மருமகன், மருமகள், பேரன், பேர்த்தி போன்ற உறவுப் பெயர்களைப் பிரம்மன் கூறியதாக வேதவியாசர். இப் புராணத்தில் கூறியுள்ளார்.



ஒருவர் எந்தத் தொழிலைச் செய்கிறாறோ, அவர் அந்தத் தொழிற் பெயராலேயே அழைக்கப்படுகிறார் பொதுவாக மூத்தபெண்களைத் தாயாகக் கருத வேண்டும் என்று இப் புராணம் வலியுறுத்துகிறது. தாய், பெரியதாய், சிற்றன்னை, பாட்டி, எசமானின் மனைவி, ஆசிரியை போன்றவர்களைத் தாயாக நினைக்க வேண்டும் என்று இப்புராணம் கூறுகிறது. அத்துடன் நண்பர்களைப் பற்றியும் இப் புராணம் கூறுகிறது.

## ௬. உபவர்கனன்

திருமணம் செய்து பல காலமாகியும் பிள்ளைப்பேறு இல்லாமையால் கந்தமாதன் மலைச் சாரலில் ஒரு கந்தர்வனும் அவனது மனைவியும் இருந்து சிவபெருமானைத் தமக்கொரு புத்திரனைத் தருமாறு வேண்டினர். அவர்களின் அன்பான வேண்டுதலால் மகிழ்ந்த சிவபெருமான் நாரதரை அவர்களுக்குப் புத்திரனாகப் பிறக்குமாறு அருள் செய்தார். அப் புத்திரனைப் பார்த்து ஆசீர்வதித்த வசிட்ட முனிவர் அப் புத்திரனுக்கு உபவர்கனன் எனப் பெயரிட்டார்.



உபவர்கனன் வளர்ந்து திருமண வயதை அடைந்ததும் காந்தர்வ மன்னன் தனது ஐம்பது புத்திரிகளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். மிகவும் மகிழ்வுடன் தனது மனைவியரோடு வாழ்ந்த உபவர்கனன் பிரம்மாவைச் சந்திப்பதற்காகப் பிரம்மலோகத்திற்குச் சென்றான். பிரம்மலோகத்தில் ஏராளமான தேவமகளிர் இருந்தனர். அத் தேவமகளிரின் கூட்டத்தில் அழகான ரம்பை என்ற தேவமகள் ஒருத்தி இருந்தாள். அவளது அழகை ரசித்த உபவர்கனன் அவளின் மீது மோகங் கொண்டான். ரம்பையும் உபவர்கனன் மீது காதல் கொண்டாள். அதனால் உபவர்கனன் ரம்பையைத் திருமணம் செய்து கொண்டான். இதை அறிந்த பிரம்மா கடுங்கோபங் கொண்டு உபவர்கனன் உடனே மரணமடைவான் என்று சபித்தார். அதனால் உபவர்கனன் இறந்துவிட்டான்.

உபவர்கனனின் மிகவும் அன்புக்குரிய மனைவி மாலவதி. அவள் தனது கணவனின் மீது அளவில்லாத அன்பை வைத்திருந்தாள். அதனால் பிரம்மன் தனது கணவனைக் கொன்றதால் மிகுந்த கோபங்கொண்டாள். சிவபெருமானை நினைத்துக் கடுந்தவம் புரிந்தே உபவர்கனனை அவனது பெற்றோர் பெற்றெடுத்தனர். அதனால் அவனை யாராலும் கொல்ல முடியாது

அப்படியிருக்க எப்படிப் பிரம்மாவால் கொல்ல முடியும். சர்வவல்லமை பொருந்திய சிவபெருமானின் வரம் சக்தியற்றதால் தானே யமன் எனது கணவனைக் கவர்ந்தான் என்று கோபங்கொண்டு சிவபெருமானையும், திருமாலையும், யமனையும் சபித்துச் செயலிழக்கச் செய்வேன் என்று சபதம் செய்தாள்.

**அ**வளது கோபத்தையும் சபதத்தையும் அறிந்து கவலைப்பட்ட சிவபெருமானும், பிரமனும், யமனும் விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர்.



**மூ**வருக்கும் ஆறுதல் கூறிய விஷ்ணு, அந்தண இளைஞனின் உருவெடுத்து உபவர்கனனின் பிரியத்துக்குரிய மனைவியாகிய மாலவதிரின் வீட்டுக்குச் சென்றார். “மாலவதி, அவசரப்படாதே உனது கணவனின் விதிப்படி தான் அவனது மரணம் சம்பவித்தது. அதை உணராது நீ சிவபெருமானையும், பிரமனையும், யமனையும் சபிப்பது முறையல்ல. உனது கணவன் இறக்கவில்லை. இறந்ததாக நினைப்பது மாயையாகும். அதனால் அவன் உயிர்பெற்று உன்னிடம் வருவான்” என்று கூறிவிட்டுப் பிரம்மலோகம் சென்று பிரம்மனைச் சந்தித்தார்.

“**பி**ரமதேவரே, உபவர்கனன் செய்தது பிழையான செயல். அதற்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டுமே தவிர அவனது உயிரைப் பறிப்பது நியாயமானது அல்ல” என்று நீதியை எடுத்துரைத்தார். விஷ்ணு சொல்வது சரி என்று உணர்ந்த பிரமன் இறந்து கிடந்த உபவர்கனனின் உடலின் மீது நீரைத் தெளித்தார். உடனே அவன் உயிர்பெற்று எழுந்து பிரமனையும், விஷ்ணுவையும் வணங்கினான்.

**அ**ந்தண இளைஞனாக மாறிச் சென்று உபவர்க்கனனை உயிர்ப்பித்ததைக் கூறுவதற்காக விஷ்ணு மாலவதியிடம் வந்தார். மாலவதி அந்த அந்தண இளைஞனிடம், “பிராமணரே, மனிதர்களுக்கு நோய்கள் வரக் காரணம் என்ன என்று உங்களுக்குத் தெரிந்தால் கூறுங்கள்” என்று கேட்டாள்.

“**பொ**துவாக விதி முடித்தவர்களின் உயிரை யமதூதுவர்கள் கவர்ந்து செல்வார்கள். உயிரைப் பறிப்பதற்கு யமனுக்கு ஒரு காரணம் வேண்டும். அதற்காகத்தான் விஷ்ணு முதுமையையும், நோய்களையும் உண்டாக்கினார். முதுமை அடையாமல் இளைஞனாக இருப்பவர்களைக் கவர்வதால் பிரச்சினைகள் உண்டாகும். அதனால் தான் பலமுள்ளவர்களை நோய் பலவீனர்களாக்கும். முதுமை வந்தால் நோய்களும் கூட வரும். பொதுவாக எல்லா நோய்களுக்கும் முக்கிய காரணியாக அமைவது காய்ச்சல். அது உணவு சரியாகச் சமிபாடு அடையாததால் ஏற்படுகிறது. காய்ச்சலுக்குக் கபம், வாதம், பித்தம், சிலேத்துமம் என்பன காரணிகளாக அமைகின்றன. மானிடர்களுக்கு ஏற்படும் நோய்கள் அறுபத்து நான்கு


வகையானதாகும். இந்த அறுபத்து நான்கு வகையான நோய்களும் எவை எவையென்னும், அவை எதனால் உண்டாகின்றன என்றும், அவற்றைத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் ஆயுர்வேதம் என்ற சாத்திரம் மிகவும் விரிவாகக் கூறுகிறது. கிருஷ்ண பரமாத்மா நான்கு வேதங்களையும் உருவாக்கிய பின்பு பிரம்மா ஆயுர்வேதத்தை இயற்றினார். அதன்பின் தோன்றிய மருத்துவ நூல்களுக்கெல்லாம் மூலமாக விளங்குவது பிரம்மா இயற்றிய ஆயுர்வேதமாகும்".

"**பி**ராமணரே, நோய்கள் பற்றியும், அவற்றைத் தீர்க்கும் முறைகளைப் பற்றியும் கூறினீர்கள். ஆனால் நோய்கள் வராது இருக்க என்ன செய்யவேண்டும் என்று கூறவில்லை. அதையும் எனக்குக் கூறுங்கள்" என்றாள் மாலவதி.



"**நோ**ய்கள் இல்லாத வாழ்வு இல்லை. சாதாரணமான நோய்கள் ஆபத்தானவை அல்ல. அவற்றை வராது பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் மனம் தூய்மையாக இருத்தல் வேண்டும். தூய்மையான மனதைத் துன்பங்கள் அண்டாது. அத்துடன் உடல் முழுவதும் தூய்மையாக இருத்தல் வேண்டும். உடல் முழுவதும் எண்ணெய் தேய்த்தல், கண்களைத் தூய நீரால் கழுவுதல், தினமும் உடற்பயிற்சி செய்தல், சுத்தமான குளிர்ந்த நீரில் நீராடுதல், உடல் முழுவதும் சந்தணம் பூசிக் கொள்ளல், சமவிகித உணவை நேரம் தவறாது உண்ணல், இரவில் தயிர் சேர்த்த உணவுகளை உண்ணாது விடல், தூய்மையான உடைகளை அணிதல், ஒழுக்கமாக வாழுதல் போன்றவற்றைக் கடைப்பிடித்தால் சாதரணமான நோய்கள் இலகுவில் வராது" என்றான் அந்தப் பிராமண இளைஞன்.


**சி**ல நாட்கள் சென்ற பின் உபவர்கனன் இறந்துவிட்டான். அவனது மனைவியான மாலவதி அடுத்த பிறப்பிலும் அவன் தனது கணவனாக அமையவேண்டும் என்று பிரார்த்தபடி தனது உயிரை விட்டாள். அவளது பிரார்த்தனை வீணாகவில்லை. அவள் அடுத்த பிறவியில் மனுவம்சத்தைச் சேர்ந்த சிரிஞ்ஜயன் என்ற அரசனுக்கு மகளாகப் பிறந்தாள். அவளுக்கு முற்பிறப்பில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் நினைவில் இருந்தன.



**அ**தேவேளை உபவர்கனன் கன்யாகுப்ஜ இராணி காலாவதியின் மகனாகப் பிறந்தான். அவன் பிறக்கு முன் அந்த நாட்டில் பெரும் பஞ்சம் நிலவியது. மழை பெய்யவில்லை. அதனால் நீர் நிலைகள் யாவும் காய்ந்து வெடித்திருந்தன அவன் பிறந்தவுடன் பெருமழை பொழிந்தது. நீர் நிலைகள் யாவும் நிரம்பி வழிந்தன. பூமி செழித்தது. பயிர்கள் நல்ல விளைச்சலைக் கொடுத்தன. இவையாவும் அவன்

பிறந்தமையால் தான் நடைபெற்றன என்று ஞானிகள் கூறினர். அதனால் அவனுக்கு நீரைக் கொடுத்தவன் என்ற அர்த்தத்தைக் கொண்ட 'நாரதன்' என்ற பெயரைப் பெற்றான்.

## 7. நாரதரின் வரலாறு



**ஓ**ர் அடர்ந்த இருண்ட காட்டை அடைந்த நாரதர், கிருஷ்ணரை நினைத்துக் கடுந்தவம் செய்தார். அவரின் வலிமையான தவத்தால் மகிழ்ந்த கிருஷ்ணர் அவர்முன் தோன்றியவுடன் மறைந்து விட்டார். கிருஷ்ணரைக் கண்டு அவருடன் உரையாடி மகிழவென நினைத்திருந்த நாரதருக்கு மின்னல் போலத் தோன்றி மறைந்தது பெருங்கவலையைக் கொடுத்தது. நாரதர் அதை நினைத்து மிக்க வேதனையோடு இருந்தபோது, "நாரதனே, கவலை கொள்ளாதே. நீ மரணமடைந்த பின்பு ஒரு தெய்வீகமான உடலைப் பெறுவாய். அப்போது உனது புகழ் உலகெங்கும் பரவும். அவ்வேளையில் நான் உனக்குப் பூரணமாகக் காட்சி தந்து, தேவைப்படும் போதெல்லாம் உன்னுடன் உரையாடி மகிழ்வேன்" என்றொரு அசரீதி வாக்கு வானில் இருந்து ஒலித்தது. அதனால் நாரதர் மிக்க மகிழ்ச்சியடைந்தான். பிரமனால் சாபம் கொடுத்தவேளை இருந்த உடல் மரணமடைந்ததும் அற்றுப் போய்விடும். அத்துடன் சாபமும் அழிந்துவிடும். தெய்வீகமான உடலும் கிருஷ்ணனது சந்திப்பும் தனக்கும் பேரின்பத்தைத் தரும் என்று நாரதர் நம்பினார்.



**நா**ரதரைப் பிரம்மா தோற்றுவித்து அவரை படைப்புத் தொழிலை ஆரம்பிக்குமாறு கூற நாரதர் அதை மறுத்துத் தவம் செய்ய விரும்புவதாகக் கூறப் பிரமதேவர் சொன்னார், "மகனே, வாழ்வில் நான்கு படி நிலைகள் உள்ளன. பிரம்மச்சாரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்தியாசம் என்பவையே அவை. குழந்தைப் பருவம் முடிந்ததும் பிரம்மச்சாரியத்தை அனுஷ்டிக்க வேண்டும். இப் பருவத்தில் குருவினது ஆச்சிரமத்தில் தங்கியிருந்து கற்க வேண்டியவற்றையெல்லாம் கற்கவேண்டும். அதன்பின் கிரகஸ்தனாக வேண்டும். அதற்காக நல்ல குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து உனது வம்சத்தைப் பெருக்க வேண்டும். அதன்பின் தான் வானப் பிரஸ்தத்தைப் பேணி சந்நியாச வாழ்வை மனைவியுடன் மேற்கொள்ள வேண்டும். இது தான் உலகின் நடைமுறை. நீ பிரம்மச்சாரியத்தையும், கிரகஸ்தத்தையும் விட்டு விட்டுத் தவம் செய்யச் செல்வது புத்திசாலித்தனமானது அல்ல. வாழ்க்கையில் உள்ள அனுபவத்தால் தான் புனிதமான தவத்தை மேற்கொள்ள முடியும்.

இவற்றை அனுபவிக்காவிட்டால் மனம் குழம்பும். அதனால் தவ வாழ்வு குழம்பும் அதன்படி நடப்பதுதான் தர்மமான வாழ்க்கை" என்று கூறியது நினைவுக்கு வந்தது.

**வா**னத்தில் எழுந்த அசரீதியைக் கேட்டுத் தனது முற்பிறப்பை உணர்ந்த நாரதர் தவம் செய்வதை விட்டு விட்டுச் சிவலோகம் சென்றார். அங்கு அவர் சிவபெருமானைச் சந்தித்து அவரை வணங்கினார், "நாரதரே, யாராக இருந்தாலும் உலக நடைமுறைகளை ஏற்று அதன்படி வாழ்ந்தால் தான் செய்கின்ற செயல்கள் சித்திக்கும். இல்லாவிட்டால் எதைச் செய்தாலும் உரிய பலனைப் பெறமுடியாது. நீ கிருஷ்ணனின் அம்சமாக அவதரித்ததால் அவரை முழு மனதுடன் வணங்கி அவனது அருளைப் பெறு. வாழ்க்கையில் ஒருபோதும் பற்றுவைக்கக் கூடாது. ஒன்றில் பற்று வைத்தால் அப் பற்று பல ஆசைகளைத் தூண்டி அவற்றில் பற்றேற்பட வழிவகுக்கும். அதனால் மனம் குழம்பும். மனக்குழப்பமுடைய ஒருவரால் ஒரு சிறு செயலைக் கூட முறையாகச் செய்ய முடியாது. அதனால் மனம் குழம்பும்படியான செயல்களில் ஈடுபடாதே".



"**கி**ருஷ்ணனைப் பூசிக்கச் சிறந்த வழி சாலக்கிராம பூசையாகும். இப் பூசை மிகவும் உயர்ந்தது. சிறந்தது. கிருஷ்ணனைக் கவரவல்லது. அதைச் செய்யும் போது பற்றற்ற மனதால் அவனை ஆராதித்தல் வேண்டும். அத்துடன் உணவு முறையைச் சரியாகப் பேண வேண்டும். சுவையான எந்த உணவையும் தவிர்த்தல் நல்லது. உணவின் சுவையை நாக்கு அறிந்தால் அதையே நாடவைக்கும். சுவையான உணவுகள் மனதைக் குழப்பி உடலை வளர்க்கும். அதனால் இறைவனை அடைய விரும்புபவர்கள் உணவுவிடயத்தில் மிகமிக் கவனமாக இருத்தல் அவசியம். மாமிச உணவுகளை உண்ணக் கூடாது. உயிரைக் கொல்வதை விட கொன்ற உயிரின் மாமிசத்தைப் புசிப்பது மகாபாவத்தை உண்டாக்கும்".

"**த**வம் செய்து இறைவனை அடைய விரும்புவோர் படிப்படியாக உண்ணும் உணவைக் குறைத்தல் வேண்டும். காய்கறிகள், கிழங்குகள் இவைகளைப் பச்சையாக உண்ண வேண்டும். பின் அதைப் படிப்படியாகக் குறைத்து உண்பதைத் தவிர்க்க வேண்டும்" என்று உபதேசித்தார்.



**அ**தன்பின் நாரதர் யமனைச் சந்திப்பதற்காகச் சென்று அவனை வணங்கித் தனது எண்ணங்களை வெளிப்படுத்தினார், "நாரதரே, சிவபெருமான் உமக்குத் தவ வாழ்வு பற்றி உபதேசித்ததாகக் கூறினீர். தவ வாழ்விற்கு ஆதாரமாக இருக்க வேண்டியது ஆன்மாவாகும். ஆன்மாவை பரிசுத்தமாக்கிப் புனிதப்படுத்தல் வேண்டும். பற்றுக்களை அகற்றி, தவம் செய்யும் போது இறைவனை அடைய வேண்டும் என்ற

புனிதமான நோக்குடன் தவம் செய்தல் வேண்டும். இறைவனை முழுமையாக நம்ப வேண்டும். அவனின் மீது நீங்காத வலிமையான பக்தி கொள்ளல் வேண்டும். பக்தி அசையாத நம்பிக்கையால் உருவாகி, மாறாத தன்மையை அடைதல் வேண்டும். எப்பொழுதும் உண்மையைப் பேச வேண்டும். ஆசைகள் மனதை ஏமாற்றும் தன்மை வாய்ந்தவை. அதனால் ஆசைகளுக்குட்படாது வாழ்ந்தால் நீர் நினைத்தவை யாவும் இலகுவாக நடைபெறும்" என்று யமன் கூறியதைக் கேட்ட நாரதர் மிக்க மகிழ்வுடன் யமனை வணங்கி விடைபெற்றார்.

**ய**மனிடம் விடை பெற்ற நாரதர் பதரிக்குச் சென்றார். பதரியில் நாராயண முனிவர். ஓர் ஆச்சிரமத்தை அமைத்துத் தனது சீடர்களுக்கு வேதங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார். முனிவர் நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட சிங்காசனத்தில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிப் பல அப்ஸ்சரசுகளும், கந்தர்வர்களும் அமர்ந்திருந்தனர். நாராயண முனிவரைக் கண்ட நாரதர் கைகூப்பி அவரை வணங்கினார். நாராயண முனிவர் நாரதரை முறைப்படி வரவேற்று ஆசனத்தில் அமருமாறு வேண்டினார். முனிவரைப் பணிந்து ஆசனத்தில் அமர்ந்த நாரதர் தனக்கு கிருஷ்ணனின் வரலாற்றை முழுமையாகச் சொல்லும் படி வேண்ட நாராயண முனிவர் கிருஷ்ணனது வரலாற்றை விரிவாகச் சொல்லத் தொடங்கினார்.

**பி**ரமகாண்டம் முடிந்தது.

## 8. பிரகிருதியின் உருவங்கள்

**நா**ராயண முனிவரின் ஆச்சிரமத்தில் பல சீடர்கள் இருந்தனர். நாராயண முனிவர் தனது சீடர்களுக்கு உபதேசிப்பதற்காக ஆச்சிரமத்திற்கு வந்த நாரதரை ஆசனத்தில் அமருமாறு பணித்துவிட்டுத் தனது உபதேசத்தை ஆரம்பித்தார்.

"**மு**னிவர்களே, இன்று நாரதர் எமது ஆச்சிரமத்திற்கு வந்து எனது சீடராக இருக்க விரும்புகிறார். அதனால் அவரை எனது சீடராக ஏற்று உபதேசத்தை ஆரம்பிக்கிறேன். இன்று நான் பிரகிருதியின் உருவங்களைப் பற்றிக் கூறவுள்ளேன். முக்கியமாக ஐந்து பிரகிருதிகளைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் பிரகிருதி என்றால் என்னவென்று கூறுகிறேன். 'பிர' என்றால் மிகச் சிறந்தது என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. அதைவிடச் சிறந்தது எதுவும் இல்லை. 'கிருதி' என்றால் உற்பத்தி என்று பொருள் எனவே பிரகிருதி என்பது 'மிகச் சிறந்த உற்பத்தி' என்று கொள்ளல் வேண்டும்.



**மி**கச் சிறந்த உற்பத்தி எதுவென்றால் பெண்தெய்வங்களாகும். பெண் தெய்வங்களிலும் மிகச் சிறந்தவை என்று சொல்லப்படும் பெண்தெய்வங்கள் துர்க்கை, ராதை, லட்சுமி, சரஸ்வதி, சாவித்திரி. இந்த ஐந்து

பெண்தெய்வங்களும் மிகமிக முக்கியமான தெய்வங்களாகும். ஏனைய பெண்தெய்வங்களும், பெண்தேவதைகளும் இந்த ஐந்து பெண்தெய்வங்களில் இருந்து உற்பத்தியாகி, இவர்களின் அம்சங்களுடன் விளங்குபவை. மேற்சொல்லப்பட்ட ஐந்து பெண்தெய்வங்களில் இருந்து புனிதகங்கையும், புனிதமான துளசியும், நாகதேவதையும், மானசையும், பிறந்த சிசுக்களுக்குரிய தேவதையான ஷஷ்தியும், சண்டியும், காளி வசுந்தராவும் தோற்றம் பெற்றனர்.

அடிப்படையான மூலப்பிரகிருதியில் இருந்தே எல்லாப் பெண்களும் தோன்றினர். அதனால் பெண்களைத் துன்புறுத்தல், அவர்களுக்கு தீமை செய்தல் போன்றன அவர்களின் தாயாரான பிரகிருதிக்குச் செய்யப்படும் துன்புறுத்தல்களாகவே கொள்ளப்படும். அவர்களை மதித்து, அவர்களுக்குத் துன்பம் செய்யாது வாழ்ந்தால் தாயான பிரகிருதியைக் கௌரவிப்பதற்கான செயல்களாகும். பெண்கள் மகிழ்ந்தால் பிரகிருதியும் மகிழ்வாள். அதுபோலத் துன்பப்பட்டால் பிரகிருதியும் வேதனைப்பட்டுத் தீமை செய்வோரைத் தண்டிப்பாள்.

பிரகிருதிக்கு ராஜசம், தாமசம், சத்துவம் என்னும் அடிப்படைக் குணங்கள் மூன்றும் உண்டு. சத்துவ குணமுடைய பெண்கள் சாந்தமானவர்களாக, பொறுமைமிக்கவர்களாக, எல்லோரிடத்திலும் அன்புள்ளவர்களாக இருப்பர். இவர்கள் தமது கணவன் கண்கண்ட தெய்வம் என்று நினைத்துக் கணவனின் மனம் கோணாமல் வாழ்வர். பெற்றோரைப் போல தனது கவணனின் பெற்றோருக்கும் மதிப்பளிப்பர். தனது சகோதரர்கள், உறவினர்கள் போலக் கணவனின் சகோதரர்களையும், உறவினர்களையும் மதித்து வாழ்வர். இத்தகைய பெண்களை மனைவியாக அடையும் ஆண்களுக்கு வாழ்வில் எந்தக் குறைகளும் வரமாட்டாது.

பிரகிருதியின் ரஜச குணத்தை உடைய பெண்கள் சுயநலம் மிக்கவர்களாகவே இருப்பர். தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் தவிர மற்றவர்களைப் பற்றி அக்கறைப்படமாட்டார்கள். யாருக்கும் உதவி செய்வதானால் அதனால் தனக்கு என்ன லாபம் கிடைக்கும் என்று சிந்தித்த பின்பே செயலாற்றுவர். தானும் தனது குடும்பத்தினரும் இன்பமாக வாழ்ந்தால் போதும், மற்றவர்கள் எத்தகைய துன்பங்களை அனுபவித்தாலும் பரவாயில்லை என்று நினைப்பர். கணவனுடனும் காரணமின்றிப் பாசம் செலுத்தமாட்டார்கள்.



பிரகிருதியின் தாமசகுணம் கொண்ட பெண்கள் தீயவர்கள். எந்நேரமும் பிறரின் குறைகளைப் பற்றிச் சிந்தித்து அவர்கள் நன்மை செய்தாலும் அவற்றைத் தீமையானவை எனக் கருதி முரண்படுவர். எதைச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். தர்மசிந்தனை இல்லாத அவர்களின் மனம் எப்பொழுதும் தீயவற்றையே எண்ணியவாறு இருக்கும். கணவனுடன் அடிக்கடி முரண்படுவர். கணவனின் செயல்களில் குற்றங்காண்பர். பெற்றோர், சகோதரர், உறவினர்கள், பெரியவர்கள் என்று யாரையும் மதிக்கமாட்டார்கள். தாம் நினைப்பவை தான் சரியானவை.

அதைக் கணவனும் மற்றவர்களும் ஏற்க வேண்டும் என்று நினைப்பார்கள். இவர்களது மனம் ஒருபோதும் நல்லவற்றைச் சிந்திக்காது. தனது தேவைகேற்றபடி வாழ்வதில் முனைப்பாக இருப்பார்கள். இவர்களை நம்பமுடியாது. கணவனுக்கும் துரோகம் செய்யக் கூடியவர்கள் இவர்கள்.



**பி**ரகிருதி ஒருபோதும் தனித்திராது. அது எப்போதும் பரமாத்மாவுடன் இணைந்தே இருக்கும். பிரகிருதி இல்லாவிட்டால் பரமாத்மாவும் இல்லை என்றே கூற வேண்டும். உலகைச் சிருஷ்டிக்கு முன் பரமாத்மாவான கிருஷ்ணர் தன்னில் பாதி உருவத்தை ஆணாகவும், மிகுதியான பாதி உருவத்தைப் பெண்ணாகவும் மாற்றிக் கொண்டார். அவர் தனது உடலில் உருவாக்கிய பெண்ணின் பகுதியே பிரகிருதியாகும். அதனால் அவருக்கு 'ராதை, ராதிக்' என்ற பெயர்களும் ஏற்பட்டது.

**கி**ருஷ்ணரின் உடலில் சரிபாதியாக இருந்த ராதை சிருஷ்டியின் போது கிருஷ்ணருக்கு உதவியாக இருந்ததாக இப் புராணம் கூறுகிறது.

## ௯. வேதவதியும் சீதாதேவியும்



**சா**வர்ணி என்ற மன்னனது ஆட்சியில் மக்கள் பெருந்துன்பப்பட்டனர். அவன் வரிகளை அதிகமாக வசூலித்து மக்களைத் துன்பப்படுத்தினான். கொடுங்கோலாக இருந்து மக்களைப் பல வழிகளாலும் துன்பப்படுத்தினான். இதனால் துன்பமடைந்த மக்கள் சூரியதேவனை வணங்கி கொடுங்கோலனான சாவர்ணியின் ஆட்சியை நீக்கித் தமக்கு ஆறுதலளிக்குமாறு வேண்டினர். அதனால் சூரியன் சாவர்ணியின் ஆட்சியை நீக்க அவனை நாடுகடத்தினான். சாவர்ணி பெரும் சிவபக்தன். சூரியன் தவறான செய்திகளை நம்பி அவனது ஆட்சியை நீங்கி அவனை நாடு கடத்திவிட்டான் என்று கோபங்கொண்ட சிவன் சூரியனைத் தனது சூலத்தால் தாக்க நினைத்தார். மன்னன் சிவனிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு பிரம்மதேவரிடம் சென்று சரணடைந்தான்.

சுாவர்ணி மீது கடுங்கோபங் கொண்டு அவனைத் தனது சூலத்தால் குத்திக் கொல்ல முனைந்த சிவன், சாவர்ணி தன்னிடம் சரணடைந்திருப்பதால் தனக்குப் பேராபத்து நிகழும் என்று பயந்து அவனைக் கிருஷ்ணனிடம் சென்று சரணடையுமாறு கூறினார். பிரமன்,

சிவனுக்குப் பயப்படுவதை அறிந்த சாவர்ணி, பிரமனின் சொற்படி சென்று கிருஷ்ணனைச் சரணடைந்தான்.



**சா**வர்ணி, கிருஷ்ணனிடம் சரணடைந்ததைக் கேள்விப்பட்ட சிவபெருமான் மிக்க கோபங்கொண்டு கிருஷ்ணனது இருப்பிடத்திற்குச் சென்றார். சிவபெருமானை வணங்கி உரிய மரியாதையுடன் வரவேற்ற கிருஷ்ணர், தனக்காக சாவர்ணியை மன்னிக்குமாறு கூறினார். அதைக் கேட்டு ஆறுதலடைந்த சிவபெருமான் கிருஷ்ணனுக்குச் சொன்னார், "கிருஷ்ணா சாவர்ணிக்குச் சூரியன் கொடுத்த தண்டணையை மாற்ற முடியாது. அவனை நாடுகடத்தியதைத் திரும்பப் பெற முடியாது. ஆனால் அவனது மக்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. அதனால் அவர்கள் நாட்டின் அரசபொறுப்பை ஏற்று நாட்டை நீதியாக ஆளலாம். அத்துடன் லட்சுமிதேவி இவர்களது வம்சத்தில் குழந்தையாக அவதரிப்பாள்" என்று கூறினார்.

**அ**தைக்கேட்டு மகிழ்ந்த சாவர்ணி கிருஷ்ணருக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டான். அதன்பின் சாவர்ணியின் மகனாக விருஷத்வஜன் மூடிசூடி அரசனானான். அவன் தந்தையைப் போலல்லாது நீதியாக நாட்டை ஆண்டான். அவனது ஆட்சியில் மக்கள் சகல சௌபாக்கியங்களையும் பெற்று மிகவும் இன்பமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்தனர். அதனால் சூரியன் மகிழ்ந்து அந்த வம்சத்தினருக்குப் பெரும் உதவிகள் செய்து வந்தான்.



**வி**துஷச்வயனுக்கு முதுமை வந்தபோது தனது மகனான ருதுத்வஜனுக்கு முடிசூட்டிவிட்டுக் காட்டுக்குத் தவம் செய்யச் சென்றுவிட்டான். நீதியாக நாட்டை ஆளாவிட்டால் சூரியதேவன் தன்னைத் தண்டிப்பான் என்று பயந்த ருதுத்வஜன் மக்களை நேசித்தான். அவர்களுக்கு எந்தக் குறைகளும் வராது காப்பாற்றினான். அவனது நீதியான ஆட்சியில் மக்கள் குதூகலமாக வாழ்ந்தனர். மாதம் மும்மாரி பொழிந்தமையால் நாடு மிகவும் செழிப்பாக இருந்தது. கோவில்களில் பூசைகள் ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெற்றன. ஆச்சிரமங்களில் தங்கிக் கற்ற மாணவர்கள் வேதங்களை உரிய முறைப்படி கற்றனர். முனிவர்கள் அச்சமின்றித் தவம் செய்தனர்.

**ரு**துத்வஜனுக்கு இரண்டு புத்திரர்கள் பிறந்தனர். அவர்களுக்கு தர்மத்வஜன், குசத்வஜன் எனப் பெயரிட்டு அரசகுல முறைப்படி வளர்த்து வந்தான். இருவருக்கும் திருமணம் செய்து கொடுத்தான். அவர்கள் எந்தவிதமான குறைகளும் இன்றி இறைநினைவோடு வாழ்ந்து வந்தனர். குஜத்வஜன், விஷ்ணுவை வணங்கியவாறு இருப்பான். அதனால் மிக்க மகிழ்வடைந்த விஷ்ணுகுஜத்வசனின் மனைவியான மாலவதியின் கருவில் மகாலட்சுமியின் அம்சமாக வேதவதியை பிறக்குமாறு அருளினார். அவள் பிறந்தபோது வானில் இருந்து தேவர்கள் வேதத்தை ஓதினார்கள். அவள் பிறக்கும் போது வேதம் ஒலித்ததால் அவளுக்கு குஜத்வஜன் வேதவதியெனப் பெயரிட்டு மிகவும் அன்பாகவும், செல்லமாகவும் வளர்த்து வந்தான்.



**வே**தவதி முற்பிறப்பில் விஷ்ணுவைத் திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து புஸ்காகீரத்தில் பலகாலம் பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தவள். அவளது தவவலிமையை உணர்ந்த பிரம்மதேவன் அவளுக்குக் காட்சிகொடுத்து, “மாதே, உனது கடுந்தவத்தை கண்டு மெச்சினேன். பெண்ணாக இருந்தும் உடல் வலிகளைக் கவனிக்காது மனத்திடத்துடன் தவம் செய்தமையால் நான் மிக்க மகிழ்வடைந்தேன். அதனால் நீ விரும்பிய வரங்களைக் கேள்” என்றாள்.

“**பி**ரம்மதேவரே, எனக்கு ஒரே ஒரு வரம் மட்டும்தான் தேவை. நான் ஒரு விஷ்ணு பக்தை. அவரையே கணவனாக அடையத் தான் இக் கடுந்தவத்தைச் செய்கிறேன். அந்த வரத்தைத் தந்தருள்க” என்றாள்.

“**உ**னது தவத்தின் மகிமையை உலகம் அறியும். இப்பிறப்பில் அது நிகழாது. அடுத்த பிறப்பில் நீ விஷ்ணுபக்தனான மன்னன் குசத்வஜனின் மகளாகப் பிறப்பாய். அப்போது விஷ்ணு உன்னைத் தேடி வந்து மணம் முடிப்பார்” என்று சொல்லி மறைந்தார்.



**அ**தன்பின் இலங்கைவேந்தனான இராவணன் வேதவதி தவம் செய்யும் ஆச்சிரமத்திற்கு வந்தான். அவளின் பேரழகில் மோகங்கொண்டு அவளின் அருகே சென்று, “பெண்ணே, நீ யார்? இந்த நடுக்காட்டில் தவம் செய்வதன் காரணம் என்ன. தவம் செய்தாலும் உனது அழகு குறைவடையாது மேலோங்கியுள்ளது. நான் இலங்கையின் அரசன் இராவணன். இலங்கை குபேரத்தீவு. அங்கு பொன்னும், நவரத்தினங்களும், முத்துக்களும்

குவிந்துள்ளன. நீ என்னை மணந்தால் குபேரராணியாக வாழலாம். உனது அழகு என்னை மெய்மறக்க வைத்துவிட்டது” என்று சொன்னான்.

“**நா**ன் விஷ்ணுவின் தீவிர பக்தை. அவரைத் தவிர வேறு எவரையும் நான் மணக்க மாட்டேன். இலங்கையில் மன்னனாக அல்ல சொர்க்கத்தின் மன்னனாக இருந்தாலும் நான் உன்னை மணக்கமாட்டேன். என்னைத் தொந்தரவு செய்யாது சென்றுவிடு” என்று எச்சரித்தார்.

**கா**மப்பித்து தலைக்கேறிய இராவணன் அவளின் சொற்களைக் கேட்காது பலாத்காரமாக அவளைத் தூக்கிச் செல்ல முயன்றான். தனது தவவலிமையால் இராவணனை நெருங்கவிடாது தடுத்த வேதவதி, “இராவணா, எனது தவத்தைக் குழப்பி என்னை மானபங்கம் செய்ய முற்பட்ட உன்னை நான் அழித்தேதீருவேன்” என்று சபதமிட்டுவிட்டு ஆச்சிரமத்திற்கு அருகில் பாய்ந்த கங்கைநதியில் குதித்துத் தனது உயிரை விட்டாள்.

**அ**டுத்த பிறப்பில் வேதவதி, இராவணனைப் பழிவாங்குவதற்காக இலங்கையில் உள்ள ஒரு தாமரைத் தடாகத்தில் பூரணமாக மலர்ந்திருந்த தாமரைப்பூவில் ஓர் அழகிய குழந்தையாகத் தோன்றினாள். தாமரைப்பூவில் அழகான ஒரு குழந்தை படுத்திருந்து அழுவதைக் கேட்ட மக்கள் குளக்கரைக்கு வந்து குழந்தையை அதிசயமாகப் பார்த்தனர். இதை அறிந்த இராவணனின் சேவகர்கள் வந்து குழந்தையைப் பார்த்து அதிசயித்து அதைத் தூக்கிச் சென்று மன்னனான இராவணனிடம் ஒப்படைத்தனர். அந்த அழகான குழந்தையைக் கண்டு மகிழ்ந்த இராவணன் அதைத் தனது அரண்மனையில் வளர்க்க விரும்பினான். ஆனால் சோதிடர்கள் அது அதிஷ்டமில்லாத குழந்தை என்றும், அதனால் இராவணனது உயிருக்கு ஆபத்து நேரும் என்றும் கூறினர். அதனால் இராவணன் அக் குழந்தையை இலங்கையில் வைத்திருக்க விரும்பாது பாதுகாப்பான ஒரு பெட்டி செய்து அதில் அக் குழந்தையைக் கிடத்திக் கடலில்விட்டான். அந்தப் பெட்டி கடலில் மிதந்து சென்று மிதிலை மாநகரை அடைந்தது.

**மி**திலை நகரில் வருடா வருடம் ஏர் பூட்டும் விழா நடைபெறும். மிதிலையின் மன்னனான ஜனகமகாராஜன் மக்களின் நலனில் மிகுந்த அக்கறை உடையவர். அதனால் ஏர் பூட்டும் திருவிழாவன்று அவரே தலைமை தாங்கி ஏர் பூட்டும் விழாவை நடத்துவார்.

**க**டலில் மிதந்து வந்த பெட்டி கடற்கரையில் உள்ள வயலில் சென்று தங்கியது. ஜனகமகாராசா ஏர் பூட்டி உழுதபோது அப்பெட்டி ஏர்க்கலுக்குள் அகப்பட்டது ஆச்சரியத்துடன் அப் பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்த ஜனகமகாராசா திகைத்துப்போனார். வர்ணிக்க முடியாத பேரழுகுள்ள ஒரு பெண் குழந்தை பெட்டிக்குள் இருந்து ஜனகமகாராசாவைப் பார்த்துச் சிரித்துத் தன்னைத் தூக்குமாறு கைகளை மேலே உயர்த்தியது. மிகுந்த மகிழ்வுடன் ஜனகமகாராசா விஷ்ணுவைப் பிரார்த்தித்து, அவருக்கு நன்றிகூறிக் கொண்டு அக்

குழந்தையைத் தூக்கி முத்தமிட்டார், “எனக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகள் கழிந்தபோதும் பிள்ளைச் செல்வம் கிடைக்கவில்லை. எல்லாச் செல்வங்களையும், புகழையும் மலைபோலக்குவித்த விஷ்ணு இப்போது தான் மனமிரங்கிப் பெட்டியில் இவ் அழகான பெண்குழந்தையை அனுப்பியுள்ளார்” என்று அங்குள்ளவர்களுக்குக் கூறிவிட்டு அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றார்.



**ஜ**னகமகாராசா அக் குழந்தை உழும்போது கிடைத்தமையால் அதற்குச் சீதாதேவி என்று பெயரிட்டு மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தார். சீதாதேவி வளர்ந்து திருமண வயதை அடைந்ததும் மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமனைத் திருமணம் செய்தாள். பின் ராமனுடன் வனவாசத்திற்குச் சென்றபோது இராவணன் அவளை மோகித்து கடத்திச் சென்று சிறையில் அடைந்தான். இராமர் அவளை தேடிவந்து இராவணனைக் கொன்றுவிட்டுச் சீதையைச் சிறை மீட்டார். மகாலட்சுமியின் ஓர் உருத்தான் வேதவதி. வேதவதியின் சாபம் இராவணனைக் கொன்றது.

## 10. மூன்று தேவியர்




**நா**ரதருக்கு நாராயணன் சொன்னார், “மாசிமாதத்தில் வரும் பஞ்சமித்திதியன்றும் ஒவ்வொருவருக்கும் தேவையான வித்தைகளைக் கற்க ஆரம்பிக்கும் நாளான விஜயதசமியில் வரும் சரஸ்வதிபூசை செய்யும் நாட்களிலும் சரஸ்வதியைத் துதிக்க வேண்டும். வித்தைகளுக்கெல்லாம் அவள்தான் தெய்வம். அதனால் எந்த ஒரு வித்தையை முதன்முதலாகக் கற்க விரும்பினால் விஜயதசமியில் தான் தொடங்க வேண்டும். விஜயதசமியில் சரஸ்வதியைத் தொழுது முறைப்படி குருவிடம் கற்கத் தொடங்கும் எந்தவித்தையும் வளர்த்து பெரும் பயனைத் தருமே தவிர தோல்வியைத் தராது. சரஸ்வதியை வெண்டாமரைப் பூவால் அர்ச்சிப்பது தான் பெரும் பயனைத் தரும். ஏனென்றால் அவளது ஆசனம் வெண்தாமரைப் பூவாகும். அத்துடன் வெள்ளை நிற மலர்களால் மாலைகள் கட்டி சரஸ்வதியினது திருவுருவுக்கு அணிவித்தல் வேண்டும். அதுபோல வெண்ணிறப்பட்டுக்களால் சரஸ்வதியை அலங்கரிக்க வேண்டும். சரஸ்வதியை ஆராதிப்பவர்களும் வெண்நிற ஆடைகளை அணிந்தால் சரஸ்வதி மகிழ்ச்சியடைந்து செய்யும் உதவிகளை இரட்டிப்பாக்குவாள். பூசைசெய்யும் போது வெண்சங்கை ஒலித்தல் வேண்டும். அத்துடன் வெண்ணெய், தயிர், பால், கருப்பஞ்சாறு,

வெல்லம், தேன், சர்க்கரை, சதைப்பற்றுள்ள பழங்கள், தேங்காய், இஞ்சி, வாழைப்பழம் போன்ற பழங்களை நிவேதமாகப் படைத்தல் வேண்டும். அத்துடன் அரிசிமா, கோதுமை மாவுடன் பால், நெய், சர்க்கரை, வெல்லம், கற்கண்டு கலந்து மிகவும் இனிப்பான அத்துடன் சுவையான பலகார வகைகளைச் செய்து படைத்தல் வேண்டும். இவ்வாறு பஞ்சமித்திதியிலும் விஜயதசமியின் போதும் உபவாசமிருந்து விரதத்தை அனுஷ்டித்தால் மாணவர்கள் கல்வியில் பெரும் சிறப்படைவர். பதவியில் உள்ளோர் பதவியுயர்வு பெறுவர்.



**ஆ**ரம்பத்தில் லட்சுமி, சரஸ்வதி, கங்கை ஆகிய முப்பெரும் தேவியரும் நாராயணனின் மனைவிமாராக இருந்தனர். அவர்கள் மிகவும் ஒற்றுமையாக இருக்கும் போது ஒரு சயமம் சரஸ்வதி, கங்கை மீது பொறாமைப்பட்டுச் சினந்தாள். வாய்த்தர்க்கம் முற்றிச் சண்டையாக வரும் என்று தெரிந்த லட்சுமி மிகமிக அமைதியாக இருந்தாள். சண்டை பிடிக்கத் தயாராக இருந்த சரஸ்வதியையும் கங்கையையும் சமாதானப்படுத்த முயன்றாள். அவர்களுக்குப் புத்திமதிகள் பலவும் கூறினாள். கோபத்தினால் அறிவை இழந்திருந்த சரஸ்வதியையும் கங்கையையும் லட்சுமி சமாதானம் செய்ய முயற்சித்தாள். இருவரும் சமாதானமாகாது தொடர்ந்து உக்கிரமாகச் சண்டை செய்தனர்.

**அ**ப்போது சரஸ்வதி மிக்க ஆத்திரங்கொண்டு, "நீ சமாதானம் செய்வதானால் இதுவரை ஏன் வேடிக்கை பார்த்தாய்? சண்டை ஆரம்பிக்கும் போதே தடுத்து நிறுத்தியிருக்கலாமே" என்று கூறிவிட்டு, "உன்னை நான் நதியாகவும், மரமாகவும் மாறும்படி சாபமிடுகிறேன்" என்று கங்கை, சரஸ்வதியைச் சபித்தாள். அதைக்கேட்டு மிக்க கோபங்கொண்ட கங்கை, "நானும் உன்னை நதியாக மாறும்படி சபிக்கிறேன்" என்றாள். உடனே கங்கையும், சரஸ்வதியும் நதியாக மாறிவிட்டனர்.



**அ**தேவேளை லட்சுமி துளசிச் செடியாக மாறினாள். அத்துடன் பதுமாவதி நதியானாள் கங்கை பகீரதி நதியாகவும், சரஸ்வதி, அதே பெயரிலும் நதியாக மாறிப் பொங்கிப் பிரவசித்துப் பாய்ந்தனர்.

**அ**தைக்கண்ட நாராயணன் கங்கையைச் சிவனிடம் கொடுத்தார். சிவன், நாராயணன் கொடுத்த கங்கை நதியைத் தனது சடையில் வைத்துக் கொண்டார். சரஸ்வதியைப் பிரமாவிடம் கொடுத்துவிட்டு, லட்சுமியைத் தனது மனைவியாக்கிக் கொண்டார்.

சண்டையில் ஈடுபடாது லட்சுமி அவர்களைச் சமாதானப்படுத்தியதால் நாராயணன் மிக்க மகிழ்ச்சியடைந்து லட்சுமியைத் தனது மனைவியாக்கிக் கொண்டார்.

## 11. கலியுக முடிவு, கல்கி அவதாரம்

**சா**பங்களைத் தமக்குத் தாமே இட்ட முப்பெருந்தேவியர்களும் நதிகளாக மாறி ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்பு லட்சுமி சாபம் நீங்கப் பெற்றுத் திரும்பவும் நாராயணனை அடைந்து மகிழ்வுடன் அவருடன் வீற்றிருந்தாள். அதன்பின் சரஸ்வதியும், கங்கையும் சாபம் நீங்கி மீண்டும் நாராயணனைச் சென்றடைந்தனர்.



**க**லியுகம் மிகவும் கொடுமையானது, புனிதமற்றது. மக்கள் நீதிநெறி தவறி வாழ்வார்கள். இலஞ்சம் கொடுப்பவர்களும், வாங்குபவர்களும் பெருகுவார்கள். இலஞ்சம் கொடாது எந்தச் செயலும் நடைபெறாது என்ற நிலை உருவாகும். மக்கள் அடுத்தவர்களைக் கெடுத்து இன்பங்காண்பர். ஒழுக்கம், நேர்மை, நிதானம், நீதிநியாயம் என்பன அற்றுப்போகும். எந்தத் தீமைகளைச் செய்தாவது ஒவ்வொருவரும் தனது நலன்களைப் பேணிக்காப்பர். புனிதமான துளசிச்செடி கவனிப்பாரற்றுப் போகும். வர்ணாச்சிரமதர்மங்கள் யாவும் தலைகீழாக மாறும். யாரும் வர்ணாச்சிரம தர்மப்படி வாழமாட்டார்கள். தாம் நினைத்தபடி வாழ்வர்.

**பி**ராமணர்கள் முறைப்படி வேதமோத மாட்டார்கள். அவர்கள் தமது பிழைப்புக்காக அரைகுறையாக வேதமோதுவர். முழுமையாக வேதத்தை முறைப்படி கற்றவர்கள் இருக்கமாட்டார்கள். அதனால் ஒவ்வொருவரும் தாம் ஓதுவதே சரியான வேதம் என வாதிடுவர். பிராணமர்களது ஒழுக்கங்கள் மாற்றமடையும்.

**இ**ல்லறம் நல்லறமாக இராது. குடும்பங்களில் சண்டை சச்சரவுகள், போட்டி பொறாமைகள் அதிகரிக்கும். அதனால் பிரிவுகளும், துன்பங்களும் உண்டாகும். இனத்தவர்களிடையே உண்மையான அன்பு இராது. தேவைக்கேற்ப நடந்து கொள்வார்கள். கணவன் மனைவியரிடையே பிரிவுகள் அதிகரிக்கும். சிறு சிறு விடயங்களைக் கூடப் பெரிதாக எடுத்துக் குடும்பங்கள் பிரியும்.



**ம**ழை பொய்க்கும். அல்லது பெருமழை பெய்து நாட்டை அழிக்கும். மழை பொய்ப்பதால் பயிர்கள் அழிந்துபோகும். நீர்நிலைகள் வற்றுவதால் நீருக்கும் பஞ்சம் ஏற்படும். செடி,

கொடிகள், பழமரங்கள், பயிர்கள் உரிய பயனைத் தரமாட்டாது. பசுக்களை வருத்துவோர் தொகை அதிகரிக்கும். அவற்றின் மாமிசங்களை உண்போர் அதிகரிப்பர். அதன் மாமிசத்தை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களில் பகிரங்கமாக மாமிசம் விற்கப்படும். தாவர உணவுகளை உண்போரின் தொகை படிப்படியாகக் குறையும். மக்கள் போசாக்கின்றிப் பலவீனர்களாக இருப்பார்கள். அதனால் அவர்களின் ஆயுள் குறையும். பல நோய்கள் வந்து அவர்களது இன்பமான வாழ்வைக் கெடுக்கும்.



**க**லியுகத்தில் இவ்வாறான கொடிய தீமைகள் அதிகரிக்கும் போது நாராயணன், விஷ்ணுயசன் என்ற பிராமணனுக்கு கல்கி என்ற புத்திரனாக அவதாரம் எடுப்பார். அவர் வாளேந்தியவாறு குதிரையில் சவாரி செய்து தீமைகள் செய்பவர்களை அழித்தொழிப்பார். கலியுக முடிவில் உலகம் பல்வேறு தீயசெயல்களால் பெரும் குழப்பமடையும். பெருந்துன்பங்கள் பலவும் வந்து மக்களைக் கொடுமைப்படுத்தும். பசி, பட்டினி, பஞ்சம் என்பன ஏற்பட்டு மக்களை அழிக்கும். இவ்வேளையில் பிரளயம் உண்டாகி உலகம் முழுமையாக அழியும். இவ்வாறு பெரும் துன்பங்களைக் கொடுத்த கலியுகம் முடிய மறுபடியும் நீதியான சத்திய உலகம் தோன்றும்.

**இ**வ்வாறு யுகங்கள் தோறும் சிருஷ்டியும், அழிவும் மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருக்கும். பிரமதேவரின் ஆயுள் முடியும் போது அண்டங்கள் யாவும் கடலால் சூழப்பட்டு அதனுள் மூழ்கிவிடும். ஆப்போது பிரம்மா, நாராயணனுடன் ஐக்கியமாகிவிடுவார். இதைப் 'பிராகிருதப்பிரளயம்' எனப்படும். இப்பிரளயம் ஏற்படும் போது கிருஷ்ணனும் பிரகிருதியும் இணைந்து ஒன்றாகிவிடுவர். ஊலகில் உள்ள அனைத்தும் மாய உருவங்களே. அவை தோன்றுவதும் அழிவதும் நாராயணனின் விருப்புக்கேற்பவே நடைபெறுகிறது. எல்லாம் அழிந்த பின்பும் அழியாமல் இருந்து மீண்டும் உலகைத் தோற்றுவிப்பவர் நாராயணன்.

## 12. வசுந்தரா



**அ**டுத்து நாராயணன் நாரதருக்கு பூமாதேவி என்று உலக மக்களால் அழைக்கப்படும் வசுந்திரா பற்றிக் கூறத் தொடங்கினார், "நாரதரே, மதுகைடபர்கள் என்ற கொடிய அரக்கர்களின் கொழுப்பினால் தான் வசுந்தரா உருவானாள். அதனால் அவளை மேதினி என்று அழைப்பர். ஆனால் இவ்வாறு அழைப்பது பொருத்தமானதல்ல. ஏனென்றால் மதுகைடபர்கள் வாழ்ந்த காலத்திற்கு முன்பே பூமி இருந்தது. அதனால் பூமி மதுகைடபர்களின் கொழுப்பினால்

ஆனதாக இருக்க முடியாது. ஒருவேளை அந்த மதுகைடபர்களின் உடல் பூமியில் விழுந்து அவர்களது கொழுப்புப் பூமியோடு கலந்திருக்கலாம். காலங்காலமாக பல்வேறு உயிர்களின் உடல்கள் பூமியுள் மறைக்கப்பட்டு வருகின்றன".

"**ஒ**ரு சமயம் நாராயணன் பூமி எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை விரிவாகக் கூறியுள்ளார். பிரளயம் நடைபெற்ற போது உலகங்கள் முழுமையாக நீரில் மூழ்கின. அப்போது கிருஷ்ணன் ஒரு பெரிய உருண்டையைத் தனது உடலில் இருந்து உருவாக்கி நீரில் போட்டார். அது பன்நெடுங்காலம் நீரில் அமிழாது மிதந்து கொண்டிருந்தது. அதிலிருந்து துவாரங்கள் நீரில் உள்ள கடினமான பொருட்களால் மூடுண்டபோது அவ் உருண்டை நீரில் இருந்து வெளிப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு பிரளயத்தின் பின்பும் மாறி மாறி இவ் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**வ**ராக கல்பத்தில் பிரம்மா, விஷ்ணுவைச் சந்தித்து வணங்கி, "பகவானே, பன்நெடுங்காலமாகப் பூமி நீரில் அமிழ்ந்து கிடக்கிறது. அதைத் தங்களால் தான் வெளிக்கொண்டுவர முடியும். கருணை கூர்ந்து மூழ்கியுள்ள பூமியை அதிலிருந்து எடுத்துவந்து ஒரு நிலையான இடத்தில் வையுங்கள்" என்றார்.

**அ**தைக்கேட்ட விஷ்ணு வராக அவதாரம் எடுத்து நீருக்கடியில் சென்று பூமியைத் தூக்கிச் சென்று மறைத்து வைத்திருந்த இரண்ணியாக்சன் என்ற அசுரனைக் கொன்று தனது முன்பற்களால் பூமியைத் தூக்கிவந்து நிலை நிறுத்தினார். அதனால் பூமாதேவி விஷ்ணுவின் மனைவியாகக் கருதப்படுகிறாள். அதன்பின் பூமாதேவி அங்காரகனைப் பெற்றெடுத்தாள்.

**அ**ப்போது வராக மூர்த்தி சொன்னார், "நிலத்தில் பயிரிடுவதற்கு முன்பும், அதில் வீடு, வியாபாரநிலையம், வேறு கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்பும், புதுமனைபுகும் போதும், கிணறு, ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் அமைக்கும் முன்பும் பூமிக்கு முறைப்படி பூசை செய்து அதைச் சாந்தப்படுத்தி அனுமதிபெற வேண்டும். பூசையின் போது முத்துக்கள், ரத்தினங்கள், சங்குகள், விளக்குகள், புத்தகம், மலர்கள், துளசிஇலை, ஜபமாலை என்பவற்றை நைவேத்தியமாக வைத்தல் வேண்டும். இவற்றை ஒரு தட்டில் வைத்து உரிய இடத்தில் வைக்க வேண்டும்.

**வ**ராக மூர்த்தியால் மீட்டு எடுத்த பூமிக்கு பலகாரணப் பெயர்கள் உண்டு. அவை ஊர்வி, இஜ்ஜை, சௌளனி, திதி, கரசியபி, விசுவாம், பவை, அனந்தை, பிருதுவி என்ற பல பெயர்கள் வசுந்திராவுக்கு உண்டு.

## 13. கங்காவதாரம்



**சூ**தமுனிவர் கங்கையின் உற்பத்தி பற்றி முனிவர்களுக்குக் கூறினார். கங்கை நதி விஷ்ணுவின் பாதத்தில் தோன்றியது. அதனால் கங்கை நதியை 'விஷ்ணுபதி' என்று அழைப்பர்.

**ச**கரச் சக்கரவர்த்தி பெரும் பலவான். அயல் நாடுகளையெல்லாம் வென்றவன். அவன் ஓர் அஸ்வமேத யாகம் செய்ய விரும்பி தனது குதிரையை அவிழ்ந்து விட்டான். அக் குதிரைக்குப் பாதுகாப்பாக அவனது ஆயிரம் புத்திரர்கள் சென்றனர். குதிரை ஒவ்வொரு நாடுகளையும் கடந்து வீறு நடைபோட்டது. சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புத்திரர்களும் வெற்றிக் களிப்புடன் குதிரையோடு வந்தனர். அதைக் கண்டு பொறாமைப்பட்ட இந்திரன் மாய வடிவில் சென்று யாகக் குதிரையைப் பிடித்து வந்து கபில முனிவரின் ஆச்சிரமத்தில் கட்டிவிட்டு மறைந்துவிட்டான். கபிலர் தவம் செய்து கொண்டிருந்ததால் தனது ஆச்சிரமத்தில் நடைபெற்றதைக் காணவில்லை.

**ச**கரச் சக்கரவர்த்தியின் புத்திரர்கள் யாகக் குதிரையைக் காணாமையால் கடுஞ்சினம் கொண்டனர். அவர்கள் குதிரையைத் தேடி அதைக் காணாமையால் பாதாளலோகத்திற்குச் சென்றனர். அங்கு கபிலரின் ஆச்சிரமத்தில் யாகக் குதிரை கட்டியிருப்பதைக் கண்டு கடுஞ்சினங்கொண்டு அவருடன் போரிட்டனர். அதனால் மிகுந்த கோபமடைந்த கபிலர் சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புதல்வர்களையும் தனது தவ வலிமையால் எரித்துச் சாம்பலாக்கி விட்டார்.

**அ**து நடந்து சில காலத்தின் பின் சகரச் சக்கரவர்த்தியின் வம்சத்தில் பிறந்த பகீரதன் என்ற அரசன் கடுந்தவம் செய்து ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர முயற்சி செய்தான். அதற்காக அவன் பிரமதேவரை நோக்கித் தவம் செய்தான். பிரமதேவர் அவன் முன் தோன்றி ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வரவேண்டுமானால் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய் என்று கூறினார்.

**அ**தனால் பகீரதன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தான். பல காலம் கடுந்தவம் செய்தமையால் சிவபெருமான் பகீதரன் முன்தோன்றி, "பகீரதா எதற்காகத் தவம் செய்கிறாய். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

"**எ**ம்பெருமானே, எனது மூதாதையர்களான சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் ஆயிரம் பேர் கபில முனிவரோடு முரண்பட்டமையால் அவர் அவர்களை எரித்துச் சாம்பலாக்கி விட்டார்.

அவர்களது ஆன்மா நிம்மதியின்றி அலைகிறது. அதனால் அவர்களுக்கு முத்தியளிக்க வேண்டும்" என்று கேட்டான்.

**அ**தற்குச் சிவபெருமான், "பகீரதா, அவர்களின் மீது கங்கையின் நீர் பட்டால் அவர்களுக்கு முத்திகிடைத்துவிடும். அதனால் கங்கையை நோக்கித் தவம் செய்" என்று கூறி மறைந்தார்.


**சி**வபெருமானின் சொற்படி பகீரதன் கங்கையை நோக்கித் தவம் செய்தான். அவனின் தவத்தின் மகிமையால் கங்காதேவி அவனின் முன்தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டாள். அதற்குப் பகீதரன், "தாயே, எனது மூதாதையரான சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புதல்வர்கள் அறியாத்தனமாகக் கபில முனிவருடன் முரண்பட்டதால் அவர் அவர்களை எரித்துச் சாம்பலாக்கிவிட்டார். அவர்களின் சாம்பலின் மீது புண்ணிய தீர்த்தமாகிய உனது நீர் பாய்ந்தால் அவர்கள் முத்தியடைவார்கள் என்று சிவபெருமான் கூறியதால் தான் நான் தங்களை நினைத்துத் தவம் செய்தேன். தாயான நீ பூமியில் பாய வேண்டும்" என்று சொன்னான் பகீரதன்.

"**ப**கீரதா, நான் ஆகாயத்தில் இருந்து பூமியை நோக்கிப் பாய்ந்தால் அதைப் பூமிதாங்கமாட்டாது. பூமியில் வாழ்வோர் அழிந்து போவார்கள். அதனால் பூமியில் விழுமுன் அதை ஒருவர் தாங்க வேண்டும். என்னைத் தாங்க வல்லவர் சிவபெருமான் மட்டுமே. அதனால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்" என்று கூறிவிட்டு மறைந்தாள் கங்காதேவி.

**ப**கீதரன் மீண்டும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். அவனது தவத்தால் மிக்க மகிழ்வு கொண்ட சிவபெருமான் அவனின் முன் காட்சி கொடுத்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த பகீரதன் கங்காதேவி சொன்னவற்றைக் கூறினான். சிவபெருமான் அதற்குச் சம்மதித்தார்.

**சி**வபெருமான் சம்மதித்ததும் கங்காதேவி ஊழிக்கால வெள்ளப் பெருக்குப் போல ஆர்ப்பரித்தவாறு பூமியை நோக்கி வந்தாள். சிவபெருமான் அவளை அன்புடன் அணைத்துத் தாங்கிக் கொண்டார். வேகம் தனித்த கங்காதேவி பூமிக்கு வந்து பூமியினூடாகப் பாதாளத்திற்குச் சென்று கபில முனிவரால் எரித்துச் சாம்பலாக்கிய சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் எரிந்து சாம்பலாகக் கிடந்த இடத்தை அடையச் சாம்பல் புனிதமான கங்கை நீரில் கரைந்தது. அதனால் சாம்பலாக இருந்தவர்கள் மோட்சத்தை அடைந்தனர்.

## கங்கையின் மகிமை



ஒருமுறை கங்கையில் நீராடினால் நீராடுபவர் செய்த பாவங்கள் யாவும் நீங்கிவிடும். புனிதமான நாளில் கங்கையில் நீராடினால் முன்பு எடுத்த பல பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும் அத்துடன் கங்கை நீரைக் கண்டாலும் அல்லது தொட்டாலும் பாவங்கள் யாவும் நீங்கிவிடும். கங்கைக் கரையில் இருந்து வீசும் காற்றுப் பட்டால், அல்லது கங்கையின் பெயரை உச்சரித்தால் செய்த பாவங்கள் அனைத்தும் தொலைந்துவிடும். கங்கை பூமியில் பாயும் போது லவண சமுத்திரம் கங்கையின் பதிலாக விளங்கும். கங்கையைப் பகீரதன் பூமிக்குக் கொண்டு வந்தமையால் பகீரதி என்ற பெயரைப் பெற்றான். கங்கைநதி இந்திரலோகத்தின் வழியாகப் பாயும் போது மந்தாகினி என்ற பெயரால் அழைக்கப்படும். பாதாளத்தில் கங்கைநதி பாயும் போது யோகவிதி என்று அழைக்கப்படுகிறது. அது விஷ்ணுவின் உலகத்தில் உற்பத்தியானதால் விஷ்ணுபதி என்றும், மண்ணிலும், விண்ணிலும் அது பாய்வதால் அதற்குக் கங்கை என்ற பெயர் ஏற்பட்டது.

## 14. துளசியும் சங்கசூடனும்



மன்னனான குசத்வஜனின் மனைவி மாதவி. குசத்வஜன் தன் நாட்டை நீதியாக ஆண்டு வந்தான். அந்நாட்டில் சிறுசிறு குற்றச் செயல்கள் கூட நடப்பதில்லை. மாறாக நடைபெற்றால் மன்னன் அதை முழுமையாக விசாரணை செய்து தகுந்த தண்டனை வழங்குவான். சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற நிலை அங்கிருந்தமையால் ஏதாவது ஒரு குற்றச் செயலைச் செய்தால் அதை மக்களே மன்னனுக்கு அறிவித்துவிடுவார்கள். இவற்றை விசாரிப்பதற்கென நீதிமான்கள் குழு இருக்கிறது. நாட்டு நடப்பை அறிய ஒற்றர்கள் பலர் இருக்கிறார்கள். ஒரு பொது இடத்தில் குற்றச் செயலை யாராவது செய்தால் அதை ஒற்றர்கள் மறைமுகமாக விசாரிப்பார்கள். நீதிமான்களின் குழு தனது அதிகாரத்தைப் பாவித்து விசாரிக்கும். அதைவிட மக்களும் அதில் அக்கறை கொண்டு விசாரித்து விபரங்களை மிகவும் இரகசியமாக மன்னனுக்குச் சொல்வார்கள். மன்னன் எல்லாவற்றையும் அறிந்த பின்பே தீர்ப்புக் கூறுவான். அதனால் அங்கு குற்றச் செயல்களைச் செய்பவர்கள் மிகமிகக் குறைவு.

**ம**ன்னனும் அரசியும் விஷ்ணுவின் பக்தர்கள். அவர்கள் விஷ்ணுவை ஆராதியாது எக்கருமங்களையும் செய்ததில்லை. அதனால் விஷ்ணுவும் அரசன் மீதும், அரசி மீதும் மிக்க அன்புடையவராக இருந்தார். மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி என்ற முதுமொழிக்கிணங்க மக்களும் மன்னனைப் போல விஷ்ணுவின் மீது தீராத பக்தியுடையவர்களாகத் திகழ்ந்தனர். விஷ்ணுவின் கோவில்களில் நெறிதவறாது பூசைகள் நடைபெறும். ஆழ்வார்களின் பாசுரங்களை பக்தர்கள் இசையுடன் பாடி மகிழ்வர்.

**ம**ன்னன் குசத்வஜனுக்கும் அவனது மனைவி மாதவிக்கும் விஷ்ணுவின் அருளால் அவரின் அம்சம் கொண்ட ஒரு பெண் குழந்தை பிறந்தது. மன்னன் மிக்க மகிழ்வடைந்து அப் பெண் குழந்தைக்குப் பிருந்தா என்று பெயரிட்டு மிக்க அன்புடன் வளர்த்து வந்தார். பிருந்தா சிறு வயதில் இருந்தே விஷ்ணு மீது அதீத பக்தி கொண்டிருந்தாள். தினமும் விஷ்ணுவின் கோவில்களுக்குச் சென்று கோவிலைக் கழுவிச் சுத்தம் செய்வாள். விஷ்ணுவுக்குரிய எல்லா விரதங்களையும் அனுஷ்டிப்பாள். விஷ்ணு என்ற பெயரைக் கேட்டாலே மெய்மறந்து உருகிவிடுவாள்.

**அ**வள் திருமண வயதை அடைந்ததும் தனக்கு விஷ்ணுவே கணவனாக அமைய வேண்டும் என்று நினைத்துக் காட்டுக்குச் சென்று பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் செய்தாள். அவளின் தவ வலிமையை அறிந்து மிகவும் மகிழ்ந்த பிரமதேவன் அவளின் முன் காட்சி கொடுத்து, “பெண்ணே, நீ எதை நினைத்துக் கடுந்தவம் செய்கிறாய்? உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்” என்று சொன்னார்.

**பி**ரமதேவரை நேரிற்கண்ட பிருந்தா மிக்க மகிழ்வுடன் அவரை நோக்கி, “பிரமதேவரே, உம்மை நேரில் காணும் நான் பெரும் பாக்கியசாலி. எனக்கு அறிவு தெரிந்த நாளில் இருந்து விஷ்ணுவை ஆராதித்து வருகிறேன். எனது பக்தி காதலாக மாறிவிட்டது. அதனால் விஷ்ணுவைக் கணவனாக அடைய விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அருள்புரிய வேண்டும்” என்றாள்.

“**பி**ருந்தா, என்னதான் தவம் செய்தாலும் இப்பிறப்பில் உன்னால் விஷ்ணுவைக் கணவனாக அடைய முடியாது. நீ இப்பிறப்பில் உனது விதிப்படி தான் உனது திருமண வாழ்வு அமையும். இப்பிறவியில் சங்கசூடன் என்ற அரக்கனையே நீ மணப்பாய். அடுத்த பிறவியில் துளசி என்ற புனிதமான செடியாக அவதரித்து விஷ்ணுவைக் கணவனாக அடைவாய்” என்று கூறிவிட்டு மறைந்துபோனார்.

**அ**ப்போது அவளுக்கு முற்பிறவியில் நடந்த சம்பவங்கள் பிரமதேவரின் அருளால் நினைவுக்கு வந்தன. அவள் முற்பிறப்பில் கோலோகத்தில் ஒரு கோபிகையாகப் பிறந்திருந்தாள். இப் பிறப்புப் போல அவள் கோலோகத்தில் விஷ்ணுவின் நினைவாகவே



இருந்து அவரை நினைத்துப் பூசைகள் செய்தாள். விஷ்ணுவின் விரதங்கள் அனைத்தையும் விதிமுறைப்படி அனுஷ்டித்தாள். கிருஷ்ணன் மீது அவளுக்கு இருந்த பக்தி பின் காதலாக மாறியது. அதனால் விஷ்ணுவை நினைத்து, நினைத்து உருகினாள். தன்னைவிட யாரும் விஷ்ணு மீது அன்பு செலுத்தமாட்டார்கள் என்ற இறுமாப்பு அவளது மனதில் குடிகொண்டிருந்தது. அதனால் கிருஷ்ணன் மீது ராதை கொண்ட காதலை விடத் தான் கொண்ட காதல் அளப்பரியது என்று நினைத்துச் செயற்பட்டு வந்தாள். அவளது நினைப்பை அறிந்த ராதைக்கு அளவிட முடியாத கோபம் வந்தது. தன்னை விட அவள் கிருஷ்ணனது பெரும் பக்தை என்பதை ராதையால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் ராதை அவளைச் சந்தித்து, "எனது கணவன் மீது காதல் கொண்ட நீ இனியும் கோலோகத்தில் இருக்கக் கூடாது அதனால் நீ பூலோகத்தில் பிறந்து அங்குள்ள துன்பங்களையெல்லாம் அனுபவிக்கக் கடவாய்" என்று சபித்தாள். அதனால் தான் குசத்வஜனின் மகளாகப் பிறந்துள்ளேன் என நினைத்து வேதனைப்பட்டாள். அத்துடன் பிரமதேவன் இப் பிறப்பில் நீ சங்கசூடன் என்ற அசுரனையே மணப்பாய். அடுத்த பிறப்பில் தான் நீ விஷ்ணுவைக் கணவனாக அடைவாய் என்று கூறியதை நினைத்துக் கவலைப்பட்டாள். பின் அடுத்த பிறவியிலாவது எனது எண்ணம் நிறைவேறும் என்று நினைத்து விஷ்ணுவின் மீது அதிக பக்தி கொண்டு அவரை தீவிரமாக வணங்கி வந்தாள்.



பிரமன், பிருந்தாவுக்கு சங்கசூடனின் முற்பிறப்பின் வரலாற்றை எடுத்துரைத்தார், "பிருந்தா, சங்கசூடன் முற்பிறப்பில் கிருஷ்ணனின் சேவகனாக இருந்தான். அப்போது அவனது பெயர் சுதாமனாகும். சுதாமன் கிருஷ்ணனின் பெரும் பக்தன். அவன் கோலோகத்தில் வாழ்ந்த உன்மீது காதல் கொண்டிருந்தான். அந்தக் காதல் பின் வெறியாக மாறியது. உன்னைத் திருமணம் செய்வதற்காக அவன் பெருமுயற்சிகளைச் செய்தான். நீ கிருஷ்ணன் மீது காதல் கொண்டு அவனையே கணவனாக அடையவேண்டும் என்று கிருஷ்ணனைப் பிரார்த்தித்தமையால் உன்னை அவனால் நெருங்கக்கூட முடியவில்லை. அவன் உனக்கு ஓயாது தொல்லை கொடுத்துக் கொண்டிருந்ததை ராதை விரும்பவில்லை. அதனால் ராதை அவனுக்குப் புத்திமதிகள் கூறியும் அவன் கேளாமையால் கோபங்கொண்டு, "ஒரு பெண்ணின் மனநிலையை அறியாது அவளை அரக்கத்தனமாக நேசிக்கும் நீ ஒரு அரக்கனாகக் கடவாய்" என்று சபித்துவிட்டாள். அதனால் சுதாமன் இப்போது சங்கசூடன் என்ற அரக்கனாகப் பிறந்துள்ளான். அவன் இப்போதும் உனது நினைவாகவே வாழ்கிறான். அதனால் அவன் என்னை நோக்கிக்

கடுந்தவம் செய்தான். அவனது கடுந்தவத்தின் மகிமையை உணர்ந்த நான் அவன்முன் சென்றபோது அவன் தான் உன் நினைவாகவே இப்போதும் வாழ்வதாகவும், நீயில்லாவிட்டால் தான் வாழ்வதில் அர்த்தம் இல்லையென்றும் கூறி உன்னைத் தனது மனைவியாக்கும்படி வேண்டினான். அவனது தவத்தின் மகிமையால் மகிழ்ந்த நான் உன்னை மனைவியாக்குகிறேன் என்று உறுதியளித்துவிட்டேன். அதனால் நீ இந்தப் பிறப்பில் கிருஷ்ணனை அடையமுடியாது. சந்திரசூடனைத் தான் திருமணம் செய்தல் வேண்டும்" என்று கூறியது பிருந்தாவின் நினைவுக்கு வந்தது இருந்தபோதும் ராதை தனக்காக சுதர்மனைச் சபித்ததால் அவனை மணந்தால் ஏதாவது ஆபத்து வருமோ என பிருந்தா தயங்கினாள். அவளுக்குப் பயமாக இருந்தது.



**அ**தை உணர்ந்த பிரமன் ராதைக்குச் சொன்னான், "நீ நினைப்பது சரி. ராதை அன்பானவள். இருந்தபோதும் தனது சாபத்தைத் தன்னைக் கொண்டு நீக்காது திருமணம் செய்தால் அவள் கோபிப்பாள். பின் உங்களது திருமண வாழ்விலும் தலையிடுவாள். அதனால் பல பிரச்சினைகள் உருவாகலாம். அதைச் சரிசெய்ய நான் உனக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறேன். அதை ராதையை நினைத்துப் பக்தியுடன் உச்சரித்து வா. அதனால் மகிழ்ச்சியடையும் ராதை தானிட்ட சாபத்தை நீக்கிவிடுவாள். அதன்பின் நீ சங்கசூடனுடன் மிகவும் இன்பமாக வாழ்வாய். உரியநேரத்தில் கிருஷ்ணன் வந்து உன்னைத் திருமணம் செய்வான்" என்று கூறிவிட்டு மறைந்தார்.

**அ**தன்பின் பிரமதேவர் கூறிய அந்த மந்திரத்தை பிருந்தா அவர் கூறிய முறைப்படி ஜபித்துப் பின் விஷ்ணுவை வணங்கி வந்தாள். சிலகாலம் செல்ல பிருந்தா முறைப்படி ஜபித்த மந்திரத்தின் வலிமையை உணர்ந்த ராதை அம் மந்திரத்தின் தன்மையால் மிக்க மகிழ்வுடன் பிருந்தாவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து தனது சாபத்தை மீளப் பெற்றுக் கொண்டாள். அதனால் சங்கசூடன் மன்னன் குசத்வஜனிடம் வந்து தனது விருப்பத்தைத் தெரிவிக்க குசத்வஜன் சங்கசூடன் பெரும் பலசாலி. அவனுடன் விரோதம் பாராட்டினால் அவன் தன்னைக் கொன்றுவிட்டுத் தனது மகளைக் கவர்ந்து சென்று திருமணம் செய்துவிடுவான் என நினைத்துத் தனது மகள் பிருந்தாவை சங்கசூடனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

**அ**தனால் பெருமகிழ்வடைந்த சங்கசூடன் பிருந்தாவின் மேல் தனது உயிரையே வைத்திருந்தான். அவளது மனங்கோணாதபடி அவளது விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வந்தான். அதனால் மிக்க மகிழ்ச்சி கொண்ட பிருந்தா அவனை தன் உயிராக நினைத்தாள். அவன் அரக்கன், மிகவும் கொடியவன் என்று நினைக்காது அவன் தனது

கணவன் என்று நினைத்து அவனை பூசித்து வணங்கி அவனை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருந்தாள்.



**சி**வபெருமானிடம் அழியாத வரங்களைப் பெற்ற வலிமைமிக்கவனான சங்கசூடன் தேவர்கள் மீது கோபங்கொண்டு அடிக்கடி அவர்களுடன் போர் செய்தான். சங்கசூடனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் பெருந்துன்பப்பட்டனர். சங்கசூடனது மனைவியான பிருந்தா தனது கற்பை இழக்காது இருந்தால் எந்தவிதமான ஆயுதத்தாலும் அவனைக் கொல்ல முடியாது. அத்துடன் போர் செய்தும் வெல்ல முடியாது. அத்தகைய ஒரு வரத்தைச் சிவபெருமான் சங்கசூடனுக்குக் கொடுத்திருந்தார். அத்துடன் கிருஷ்ணன் சங்கசூடனுக்கு ஒரு பதக்கத்தையும் வழங்கியிருந்தார். பதக்கத்தை அணிந்து கொண்டு அவன் போர் செய்தானேயானால் யாராலும் அவனை வெல்ல முடியாது.

**தி**னமும் சங்கசூடன் தேவர்களைக் கொடுமைப்படுத்துவான். அவர்களை அடிமைகளாக்கிச் செய்யக் கூடாத வேலைகளையெல்லாம் செய்விப்பான். தேவர்கள் வேலை செய்யும் போது அரக்கர்கள் அவர்களைக் காரணமின்றித் துன்புறுத்துவர். துன்பங்களைத் தாங்க முடியாத தேவர்கள் தமது தலைவனான இந்திரனிடம் சென்று தமக்கேற்பட்ட அவல நிலையை நீக்கும்படி மன்றாடினர்.

**இ**ந்திரன் தேவர்களை அழைத்துக் கொண்டு பிரமதேவரிடம் சென்று தம்மைச் சங்கசூடனிடமிருந்து காப்பாற்றுமாறு வேண்டினான். பிரமதேவர் தேவர்களை அழைத்துக் கொண்டு கிருஷ்ணனிடம் சென்று சரணடைந்தனர்.

**அ**வர்களது வரலாற்றைக் கேட்ட கிருஷ்ணன் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டுச் சொன்னான், “தேவர்களே, அவன் பெரும் சிவபக்தன். அதனால் சிவபெருமானுக்கு அவன் தேவர்களுக்குச் செய்யும் துன்பங்களை எடுத்துச் சொல்லல் வேண்டும். அதன்பின் தான் அவனைக் கொல்லமுடியும். அவன் என்மீது அளவில்லாத பக்தி கொண்டவன். அவனது பக்தியை மெச்சி அவனுக்கு நான் ஒரு பதக்கத்தை அளித்து, “இப்பதக்கத்தை அணிந்து கொண்டு நீ போர் செய்தால் உன்னை யாராலும் கொல்ல முடியாது என்ற வரத்தையும் கொடுத்துவிட்டேன். அதனால் அவனைக் கொல்வதானால் அவனிடம் இருக்கும் பதக்கத்தைக் கைப்பற்ற வேண்டும். அந்தப் பதக்கத்தை யாசித்துப் பெறுவதற்காக நான் ஒரு வயோதிபப் பிராமண வடிவில் செல்லப்போகிறேன். அத்துடன் சிவபெருமானுக்கு ஒரு சூலத்தைக் கொடுத்து அச் சூலத்தால் அவனைக் குத்திக் கொல்லுமாறு கூறப்போகிறேன்” என்றார்.

**அ**தைக்கேட்ட பிரமதேவர், "பகவானே, அவனது மனைவி கற்போது இருக்கும் வரை அவனைக் கொல்ல முடியாது. அவள் இன்னொரு ஆடவனுடன் கூடியிருந்தால் மட்டுமே கொல்ல முடியும் என்று வரம்பெற்றுள்ளான். பிருந்தா கற்புக்கரசி. அவளை யாரும் நெருக்க முடியாது.



**ச**ங்கசூடன் பெரும் சிவபக்தன். சிவன் கொடுத்த வலிமைமிக்க வரங்களால் அவனைக் கொல்ல முடியாது அதனால் விஷ்ணு சிவபெருமானிடம் சென்று அவரை வணங்கி, "எம்பெருமானே, தாங்கள் கொடுத்த வரங்களின் வலிமையால் சங்கசூடனை நெருக்கக்கூட முடியவில்லை. அவன் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் செய்யும் கொடுமைகளை நாளுக்கு நாள் அதிகரிக்கிறான். அதனால் அவனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்ற வேண்டும். அன்றேல் அவனுக்குக் கொடுத்த வரங்களை மீளப்பெறவேண்டும்" என்றார்.

"**கி**ருஷ்ணா, அவனை நான் கொல்லமாட்டேன் என்று வரமளித்துள்ளேன். அத்துடன் கொடுத்த வரத்தை மீளப்பெறவும் முடியாது. அவன் உன்னால் தான் அழிய வேண்டும் என்பது விதி. விதியை மதியால் வெல்லலாம் என்று உனக்கு நான் சொல்லித்தர வேண்டுமா? மாயச் செயல்களில் வல்லவன் நீ மாயத்தால் அவனைக் கொல்வாய்" என்றார்.

**அ**ப்போது அங்கு வந்த நாரதர், "கிருஷ்ணா, கொடியவனானாலும் அவனுக்கு ஒருமுறை உண்மையை உணர்த்த வேண்டும் என்று அவனது அரச சபைக்குச் சென்று புத்திமதிகள் சொன்னேன். அவன் கேட்பதாக இல்லை. பிருந்தாதான் பாவம். அவள் கற்பிழக்கும் வரை அவனைக் கொல்ல முடியாது. அதனால் நீ பிருந்தா நீ கற்பிழந்த பின்பு அவளை நன்நிலைப்படுத்த வேண்டும்" என்றார்.

**சி**லநாட்கள் கழிய சந்திரசூடன் தேவர்களுக்கு எதிராகப் பெரும் போர் தொடுத்தான். அவனது கொடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாத தேவர்கள் தப்பி ஓடிச் சென்று பூமியில் மறைந்து வாழ்ந்தனர். அவனுடன் போர் செய்ய வந்த கந்தன், காளி, விநாயகர் முதலான தெய்வங்கள் அவனது தாக்குதலைச் சமாளிக்க முடியாது தேவலோகம் சென்று மறைந்து வாழ்ந்தனர்.

**தே**வர்கள் அனைவரும் சங்கசூடனுக்குப் பயந்து தலைமறைவாகியதால் சங்கசூடன் தனது நெருங்கிய நண்பர்களுடன் மதுவை அருந்திவிட்டு போரில் வென்ற மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருந்தான். அப்போது கிருஷ்ணன் ஒரு முதிய பிராமணனின் வடிவத்தில் சங்கசூடன் இருக்குமிடத்திற்குச் சென்றார். அவரைச் சங்கசூடன் மிக்க மகிழ்வுடன்

வரவேற்றான். “மன்னா, மூவுலகையும் வென்றுவிட்டாய் உன்னை வெல்ல இங்குயாரும் இல்லை. உன்னைக் கொல்லவும் யாராலும் முடியாது. நான் உன்னை மேலும் வளர்ச்சியடையச் செய்ய விரும்புகிறேன். அதற்காக ஒரு யாகம் செய்தால் அதன் பின் நீ பல்லாயிரம் ஆண்டுகள் மிக்க பலத்தோடு வாழ்வாய். அதற்காக சிவபெருமானையும், விஷ்ணுவையும் யாகத்தின் போது அழைக்கவுள்ளேன். அப்பொழுது யாகத்திற்குரிய முக்கியபொருளாக விஷ்ணு உனக்குத் தந்த பதக்கத்தை வைத்துப் பூசிக்க விரும்புகிறேன். பதக்கத்தை வைத்து யாகம் செய்தால் என்னதான் விரோதியாக விஷ்ணு இருந்தாலும், பதக்கம் அவரை அங்கு வரவழைக்கும். அதனால் உனது பதக்கத்தைத் தா” என்றார்.

**ம**மதை அளவுக்கதிகமாகத் தலையில் ஏறியதால் சங்கசூடன் எதைப்பற்றியும் சிந்திக்காது பதக்கத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு, “இன்னும் என்னென்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் பெற்றுச் செல்லும். எனது வீரம்தான் பகைவரான தேவர்களை வெல்லவைத்ததே தவிர இப் பதக்கம் எதையும் செய்யவில்லை” என்று திமிருடன் கூறிவிட்டுப் பதக்கத்தைக் கழற்றிக் கொடுத்தான். விஷ்ணு புன்சிரிப்புடன் வாங்கி அதை அணிந்து கொண்டார்.

**க**ழுத்தில் பதக்கத்தை அணிந்து கொண்டு சங்கசூடனது அரண்மனைக்குச் சென்ற கிருஷ்ணனை அங்குள்ள வாயிற் காவலர்களும், பணிப்பெண்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவர்களுடன் அந்தப்புரத்திற்குச் சென்ற கிருஷ்ணரைச் சங்கசூடன் என நினைத்துப் பெருமகிழ்வுடன் பிருந்தா வரவேற்றாள். கிருஷ்ணன் சங்கசூடனைப் போல பிருந்தாவை இறுக அணைத்து முத்தமிட்டான். போருக்குச் சென்ற சங்கசூடன் பலகாலம் பிருந்தாவுடன் கூடியிராமையால் வேதனையுற்றிருந்த பிருந்தா காம உணர்வுகளுடன் அவனைத் தழுவி பெரும் இன்பமடைந்தாள். அப்பொழுது சிவபெருமான் கிருஷ்ணன் கொடுத்த சூலத்தால் சங்கசூடனைக் குத்திக் கொன்றார்.

**ச**ங்கசூடன் இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட பிருந்தா மிகுந்த குழப்பமடைந்தாள். சங்கசூடன் இறந்தால் தன்னுடன் கூடியிருந்து தனது கற்பைப் பறித்தவன் யாரென்று அறிய முற்பட்டவேளையில் கிருஷ்ணன் தனது சுய உருவத்தைக் காட்டினான். அவனைக் கண்டதும் பிருந்தாவுக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. அதிர்ச்சி தான் உண்டானது. “ஒருவனைக் கொல்வதற்காக எனது கற்பை அழித்த கல்மனம் கொண்ட நீ கல்லாகக் கடவாய்” என்று சபித்தாள் உடனே சாலக்கிராமம் கல் வடிவில் உருவானது.



“பிருந்தா, உனது கோபம் நியாயமானதுதான். ஆனால் உனக்களிக்கப்பட்ட வரப்படி நீ என்னை கணவனாக அடைய வேண்டும் என்று பிரமனை நோக்கிக் கடுந்தவம் செய்ய அவர் உன்முன் தோன்றி இப்பிறப்பில் நீ கிருஷ்ணனை அடைய முடியாது. இப்பிறப்பில் சங்கசூடன் என்ற அரக்கனை மணம் புரிந்து அவன் இறந்த பின்பு வைகுந்தத்தைத் துளசி என்ற புனிதச் செடியாக மாறி என்னை அடைவாய்” என்று பிரமன் உனக்கு வரமளித்துள்ளான். அந்த வரப்படி தான் யாவும் நடைபெற்றன. அதனால் நீ இப்போது ஒரு தெய்வவடிவம் பெற்று வைகுந்தத்திற்குச் செல்வாய். அதன்பின் எனது பிரியத்துக்குரிய மனைவியாவாய்” என்றார். அதையடுத்துப் பிருந்தா ஒரு தெய்வீக வடிவத்தைப் பெற்று வைகுந்தத்திற்குச் சென்றாள். அவளின் உடல் கண்டகி என்ற நதியாக உருவெடுத்து பாயத்தொடங்கியது. அவளது கூந்தல் துளசிக் காடாக மாறியது.

## 15. துளசியின் மகிமை



துளசி ஒரு புனிதமான செடியாகும். துளசியை வீட்டில் உள்ள ஒரு புனிதமான இடத்தில் வைத்து அதற்குப் பூமாலை சூடி, நெய்த்தீபமேற்றி வணங்கி வந்தால் குடும்பத்திற்கு எந்தவிதமான துன்பங்களும் நேராது. துன்பங்கள் வந்தாலும் விலகிச் சென்றுவிடும். அது புனிதமான செடியாதலால் அதை வணங்க விரும்புவோர் புனிதர்களான பின்பே வணங்குதல் வேண்டும். அச் செடிக்குச் சுத்தமான நீரை ஊற்றுதல் வேண்டும். கிருஷ்ணனின் மிகவும் விருப்பத்துக்குரிய மனைவி துளசி. அதனால் அவள் மகிழ்ந்தாளேயானால் கிருஷ்ணரும் மகிழ்வார். அதனால் அதை வணங்குவோர் இரட்டிப்பான பயனைப் பெறுவர்.

துளசி இலைகளைப் பறித்துச் சுத்தமான நீரிலிட்டு நீராடினால் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும். ஒரு பிராமணனை அழைத்து அவனுக்குத் தானம் வழங்கும் போது ஒரு துளசி இலையையும் சேர்த்து வழங்கினால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் கிடைக்கும். துளசியைக் கையில் வைத்துக் கொண்டு நல்ல செயல்களைச் செய்தால் அதனால் வரும் லாபம் அளப்பரியது. துளசியைக் கையில் வைத்துக் கொண்டு பாவங்களைச் செய்தால் மீளாத நகரத்தில் வீழ்ந்து துன்பப்படநேரிடும். ஒருவர் மரணிக்கும் போது துளசித் தீர்த்தத்தைப் பருகினால் அவர் நரகத்திற்குச் செல்லாது விஷ்ணுவின் லோகத்தை அடைந்து அங்கு மகிழ்வுடன் வாழ்வார்.

**து**ளசிக்கு பிருந்தை, பிருந்தாவனி, விஷ்வபவாணி, விச்வபூஜிதை, புஸ்பமாயை, நந்தினி, கிருஷ்ணஜீவினி எனப் பல பெயர்கள் உண்டு. கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று துளசியிலையால் விஷ்ணுவை ஆராதித்தால் நினைத்தவை யாவும் நிறைவேறும்.

## 16. சாளக்கிராமம்



**ச**ந்திரசூடனைக் கொல்வதற்காக விஷ்ணு சந்திரசூடன் அணிந்திருந்த பதக்கத்தை ஒரு முதிர்ப் பிராமண வடிவெடுத்துச் சென்று யாசித்துப் பெற்று விட்டுச் சந்திரசூடனின் மனைவியான பிருந்தாவுடன் கூடியிருந்தார். அதனால் சந்திரசூடன் சிவனால் கொல்லப்பட்டான் அதை அறிந்த பிருந்தா கடுஞ்சினங் கொண்டு கிருஷ்ணரைக் கல்லாகிப் போகும்படி சபித்தாள். அதனால் கிருஷ்ணன் கல்லானான். அக் கல் சாளக்கிராமம் எனப்பெயர் பெற்றது. இது கிருஷ்ணனைக் குறிப்பது. அக் கிராமம் புனிதமானது. அதைத் தரிசிப்பவர்களது பாவங்கள் யாவும் அற்றுப் புண்ணியவான்களாவர். சாளக்கிராமத்தை ஒருமுறை தரிசித்தால் பிரமகத்தித் தோசம் உடனே நீங்கிவிடும். பல புண்ணியத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடி அங்கு வீற்றிருக்கும் விஷ்ணுவை வணங்கிய பலன் சாளக்கிராமத்திலுள்ள நீரோடையில் நீராடினால் கிடைக்கும். அதைவிடச் சாளக்கிராமத்தில் உள்ள நீர்நிலையில் உள்ள நீரைப் பருகினால் அவரது பாவங்கள் யாவும் நீங்கி அவர் வைகுந்தத்தை அடைந்து மிக்க மகிழ்ச்சியாக வாழ்வார்.

**து**ளசி இறந்தவுடன் அவளது உடலில் இருந்து கண்டகி என்ற ஆறு உருவாகிப் பாயத்தொடங்கியது. அந்தப் புனிதமான ஆற்றில் நீராடுபவர்கள் பூமியில் வாழ்ந்தாலும் சொர்க்கத்தில் வாழ்பவர்களைப் போல மிக்க மகிழ்வுடனும், சகல வசதிகளுடனும் வாழ்ந்து பின் விஷ்ணுலோகத்தை அடைந்து மகிழ்வுடன் வாழ்வர். கண்டகி ஆற்றங்கரையில் கிருஷ்ணன் கல்மலையாக மாறி நின்றார். அந்த மலையில் வஜ்சடங்கள் எனப்படும் ஒரு வகையான பூச்சிகள் வாழ்கின்றன. அப் பூச்சிகள் அந்த மலையைத் தமது வஜ்சிரம் போன்ற கூர்மையான பற்களால் கடித்துத் துவாரங்கள் பலவற்றை உருவாக்குகின்றன. அம் மலையில் காணப்படும் உருண்டை வடிவான கற்களில் இப் பூச்சிகள் துளைகளிட்டுக் கொண்டே இருக்கின்றன. இது சாளக்கிராமத்தின் சிறப்பாகும்.



**ச**ந்திரசூடனைக் கொன்றுவிட்டு அவனது உடலைச் சிவபெருமான் தூக்கிச் சென்று கடலில் போட்டுவிட்டார். கடலில் மூழ்கிய அவனது உடலில் இருந்த எலும்புகள் பலவகையான சங்குகளாக மாறின. எல்லாக் கடவுளர்க்கும் சங்குகள் விட்ட புனித நீரால் அபிசேகம் செய்வார்கள். ஆனால் சிவனுக்குச் சங்காபிசேகம் செய்வதில்லை. காரணம் சந்திரசூடனின் எலும்புகளே சங்குகளாக மாறிப் பெருகியதால் புரோகிதர்கள் அச் சங்கு நீரைச் சிவனுக்கு அபிசேகம் செய்வதில்லை. சங்குகள் இருக்கும் தீர்த்தங்களில் நீராடிய பின் விஷ்ணுவைத் தொழுதால் வைகுந்தம் சென்று இன்பமாக வாழும் நிலை ஏற்படும். வீடுகளில் கிரியைகள் நடைபெறும் போது சங்கை ஊதினால் அவ் வீட்டில் தோசங்கள் இருந்தால் அவை விலகிவிடும். பாவங்கள் நீங்கிவிடும். புண்ணியம் உண்டாகும். வீடு புனிதமடையும். சங்கில் இருந்து தீர்த்தத்தைப் பெற்றுக் குடித்தால் நோய்கள் யாவும் மாறிவிடும்.

## 17. சாவித்திரி விரதம்



**வே**தங்களைப் பிறப்பித்தவர் சாவித்திரி. அவள் சூரியனுக்கும் சகல மந்திரங்களுக்கும் தாய். அவள் பளபளக்கும் பொன்நிறமான மேனியை உடையவள். அழகிய பட்டாடை அணிந்து எப்பொழுதும் மிக்க மகிழ்வுடன் புன்சிரிப்பை வெளிப்படுத்தியபடி இருப்பாள். அழகான மாணிக்கங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்திருப்பாள். சாவித்திரி விரதம் ஆனிமாதம், திரயோதசியன்று வரும். இவ்விரதத்தைத் தொடர்ந்து பதின்நான்கு ஆண்டுகள் அனுஷ்டிக்க வேண்டும். அப்போது பதின்நான்கு வகையான பழங்களை நிவேதனம் செய்தல் வேண்டும். அந்தணர்களுக்கு அறுசுவை உணவுகளை அளிப்பதோடு பெறுமதியான தானங்களை வழங்க வேண்டும். தட்சணையும் கொடுக்க வேண்டும். விரத நாளன்று சிவனடியார்களுக்கு அன்னதானம் வழங்குவது சிறப்பானது.



**மா**த்திரநாட்டு மன்னன் அசுவபதி. அவன் திருமணம் செய்து பல ஆண்டுகள் கழிந்தும் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் அவன் பெரும் பெரும் யாகங்களைச் செய்தான். தான தர்மங்களை வழங்கினான். தீர்த்த யாத்திரை

சென்றான். அப்படியிருந்தும் அவனுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் பெரும் வேதனையடைந்த அசுபதி பரராச முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து தனது மனக்குறையை வெளிப்படுத்தினான். பரராச முனிவர் அவருக்குச் சாவித்திரிதேவியின் மகிமைகளை விரிவாக எடுத்துச் சொல்லி சாவித்திரி விரத மகிமையைப் பற்றியும் சொன்னார். அதை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும் என்பதையும் விரிவாக எடுத்துச் சொன்னார். அதன்பின், "மன்னா, இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு நினைத்தவை யாவும் நிறைவேறும். பணம், செல்வாக்கு, புகழ் என்பன அதிகரிக்கும். சாவித்திரிதேவி சூரியனின் தாயார். அதனால் சூரியன் உதயமாகும் போது அவனை வணங்கிய பின்பு விரதத்தை ஆரம்பி. நீ நினைத்தது நிறைவேறும்" என்று கூறினார். அசுவபதி மிக்க மகிழ்வுடன் அரண்மனைக்கு வந்து ஆனிமாதத்தில் வரும் திரயோதசியன்று முறைப்படி விரதத்தை ஆரம்பித்தான். விரத முடிவில் பிராமணர்கள் பலரை அழைத்துத் தானம் கொடுத்தான். அறுசுவையான உணவும் கொடுத்தான். நாட்டில் உள்ள கோவில்களில் உள்ள மடங்களுக்கு அன்னதானத்திற்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் குறைவின்றிக் கொடுத்தான். கோவில் மடங்களில் நாட்டுமக்கள் உணவை உண்டு விட்டு விஷ்ணுவிடம் மன்னனுக்குப் புத்திர பாக்கியம் கொடுக்குமாறு வேண்டினர்.

**அ**ன்று அசுவபதியின் முன் சாவித்திரி தோன்றி அவனை ஆசீர்வதித்தாள். பின்பு, "மன்னா, நீ நீதியிற் சிறந்தவன். தயாளகுணம் மிக்கவன். ஒழுக்கமானவன். இருப்பினும் விதியின் காரணமாக உனக்கு மகப்பேறு தாமதமானது. விரைவில் உனக்கு ஒரு அழகான பெண்குழந்தை பிறப்பாள்" என்று அருளி மறைந்தாள்.

**சி**லதினங்கள் கழிய அசுவபதியின் மனைவி மாலதி கருவுற்றாள். அவர்கள் செய்த தவப்பலன் காரணமாக சாவித்திரிதேவியே மகளாகப் பிறந்தாள். அசுவபதிக்கும் மாலதிக்கும் பெருமகிழ்ச்சியுண்டானது. தமது எண்ணம் நிறைவேறியமைக்காக அவர்கள் நாட்டில் உள்ள அனைத்துக் கோவில்களிலும் விசேட பூசை செய்தனர். தானதர்மம் வழங்கினர். அசுவபதி தனது மகளுக்குச் சாவித்திரி என்று பெயரிட்டு மிகவும் அன்பாக வளர்த்து வந்தார்.



**சா**வித்திரிக்குத் திருமண வயது வந்தது. அசுவபதி தனது மகளுக்குத் திருமணம் செய்துவைக்கப் பொருத்தமான ஒரு மாப்பிள்ளையைத் தேடியபோது அங்கே நாரதமுனிவர் வந்தார். மன்னனான அசுபவதி நாரதரை வணங்கி உரியமுறையில் வரவேற்று அவரை ஆசனத்தில் அமர்த்தினான். பின்பு, "முனிவரே, எனது ஒரே ஒரு அன்புக்குரிய மகளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியவில்லை. பேசிவரும் திருமணங்கள் ஒவ்வொரு காரணத்தால் குழம்பிவிடுகின்றன. நான் தவமிருந்து பெற்ற மகளுக்குத் திருமணம் செய்துவைக்க முடியாதவனாகிவிட்டேன்" என்று கவலைப்பட்டான்.

“**ம**ன்னா, யாவும் விதிப்படி தான் நடக்கும். விவாகம் தாமதமாகிறது என்று நினைக்காதே. விஷ்ணுவின் சித்தம் எதுவோ அதுதான் நடக்கும். உனது மகள் ஓர் இளவரசன் மீது காதல் கொண்டுள்ளாள். அவளின் விருப்பத்தைத் தடைசெய்யாதே” என்று கூறினார்.



**நா**ரதர் சென்றபின்பு தனது மகளின் மனதைக் கவர்ந்தவன் யார்? என்ற நினைவு அசுவபதிக்குத் தோன்றியதால் அவன் தனது மகளை அழைத்துக் கேட்டான். சிறிது நேரம் பதில் சொல்ல முடியாது குழம்பிய சாவித்திரி பின், “தந்தையே, சால்வ நாட்டு இளவரசனான சத்தியவானைக் கணவனாக அடைய விரும்புகிறேன்” என்றாள்.


**அ**தைக்கேட்ட நாரதர் திகைத்துப் போனார், “மன்னா, சால்வ நாட்டின் மீது அந்நியர்படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றியதால் சத்தியவானும் அவனது குருட்டுப் பெற்றோரும் காட்டில் வசிக்கிறார்கள். அதைவிடச் சத்தியவானின் ஆயுள் இன்னும் ஒருவருடத்தில் முடிந்துவிடும். ஆதலால் அவனைத் திருமணம் செய்துவைப்பது முறையல்ல. வேறு இளவரசர்களைப் பாருங்கள்’” என்றார் நாரதர்.

**அ**தைக் கேட்ட சாவித்திரி துடிதுடித்துப் போனாள். அவளால் சத்தியவானை மறக்க முடியவில்லை, “தந்தையே, சத்தியவானைத் தவிர வேறெந்த ஆணையும் நான் மணக்க மாட்டேன். விதி எப்படியோ அப்படியே நடக்கட்டும்” என்றாள் சாவித்திரி.

**அ**வளது மனவுறுதியைக் கண்ட நாரதர், “மன்னா, பெண்களைப் பொறுத்தவரையில் தான் விரும்பும் காதலன் கணவனாக அமையாவிட்டால் அவர்களது வாழ்வு நரகமாகிவிடும். அதனால் சாவித்திரிக்குச் சத்தியவானையே திருமணம் செய்துவையுங்கள். விதிப்படி எது நடக்க வேண்டுமோ அதுதான் நடக்கும். பாரத்தை விஷ்ணுவிடம் ஒப்படைத்துவிட்டு செயற்படுங்கள்” என்றார் நாரதர்.

**ம**களின் விருப்பத்திற்குமாறாக நடக்க விரும்பாத மன்னன் அசுவபதி, மனைவியுடனும், மகளுடனும் சத்தியவான் வாழும் காடான நீரத வனத்திற்குச் சென்று சத்தியவானின் தந்தையைச் சந்தித்தார். சத்தியவானின் தந்தை அசுவபதியை மிகவும் அன்புடன் வரவேற்றார். அசுவபதி தான் வந்த காரணத்தைக் கூறிச் சத்தியவானின் தந்தையின் விருப்பத்தைக் கூறுமாறு கேட்க அவர் சம்மதித்தார்.

**ந**ல்லதொரு முகூர்த்த நாளில் சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்த பின்பு சாவித்திரி, சத்தியவான் வசிக்கும் காட்டுக்குச் சென்று அவர்கள் வசித்த ஆச்சிரமத்தில் வசித்து வந்தாள். ஒருநாள் சத்தியவானும் சாவித்திரியும் காட்டில் கனிகளைப் பறித்து வரும் போது சத்தியவான் சோர்வடைந்து



சாவித்திரியின் மடியில் படுத்தான். சிறிது நேரத்தில் அவளது உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிட்டது. வாடமலர்களால் கட்டிய மாலைகளைச் சூடி எருமை வாகத்தில் தண்டமும் பாசக்கயிறும் கொண்டு முன் நிற்கும் யமதர்மராஜனைப் பார்த்து, தருமராசாவே, எனது கணவனின் உயிரை இளமைக்காலத்தில் ஏன் கவர்ந்து செல்கிறீர்கள்?"

"**அ**வனது ஆயுட்காலம் முடிவடைந்து விட்டது. சத்தியவான் ஒழுக்கமானவன், தர்மவான். அதனால் எனது தூதுவர்களை அனுப்பாது நானே நேரில் வந்து அவனது உயிரைக் கவர்ந்து செல்கிறேன்" என்றான் யமதர்மராஜன்.

"**த**ர்மராஜா, தயவுசெய்து என்மீது கருணை காட்டுங்கள். எனக்குத் திருமணமாகி ஒருவருடம் கூடப் பூர்த்தியாகவில்லை அவரை விட்டுவிடுங்கள். அல்லது அவருடன் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்" என்றாள் சாவித்திரி.

"**பெ**ண்ணே, ஒருவரின் பூலோக வாழ்வு முடிவடைந்தால் அவரது உயிரைக் கவர்வது எனது தொழில். இனிச் சத்தியவான் பூமியில் வாழமுடியாது" என்றான் யமன்.

"**க**ற்புடைய பெண்கள் கணவனைப் பிரிந்தால் உடன் கட்டை ஏறுவது மரபு. அதனால் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்" என்றாள் சாவித்திரி.

"**ஆ**யுள் முடிந்தவர்களைத் தான் என்னால் கவர முடியும். உனக்கு ஆயுள் முடியவில்லை. அதைத் தீர்மானிப்பவர் விஷ்ணு. விஷ்ணுவின் ஏவலாள் நான். எஜமான் அல்ல".

"**த**ர்மப்பிரபு நீங்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. தயவு செய்து அதற்கு விளக்கமளியுங்கள்" என்று கேட்டாள் சாவித்திரி" அப்படியா? உனக்கேற்பட்ட சந்தேகம் என்ன?".

"**மே**லோரின் தரிசனத்தைப் பெற்றவர்களுக்குத் துன்பங்கள் வரமாட்டாது என்று வேதங்கள் சொல்கின்றன. அப்படியானால் வேதங்கள் சொல்வது பொய்யா?"

**ய**மதர்மன் ஒருகணம் திகைத்துப் போனான். பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "பெண்ணே, வேதவாக்கு ஒருபோதும் பொய்யாகாது" என்றான்.



"**நீ**ங்கள் பொய்சொல்கிறீர்கள். புண்ணியம் செய்தவர்களை தெய்வங்களைத் தரிசித்தவர்களுக்கு மரணம் ஏற்படாது என்று வேதம் சொல்கிறது. தர்மவான் என்று சொல்லப்படும் தங்களைத்

தரிசித்தவுடன் நான் விதவையாகிவிட்டேன். அப்படியிருக்க வேதவாக்குப் பொய்யாகாது என்று எப்படிக் கூறுகிறீர்கள்".

**எ**ந்த உயிர்களுக்கும் காட்சியளிக்காத நான் இவளுக்குக் காட்சியளித்துவிட்டேனா…?, யார் இவள் என்று விஷ்ணுவைப் பிரார்த்தித்தான். அவனின் கண்களுக்குள் சாவித்திரிதேவி தோன்றினாள். உண்மையை உணர்ந்து கொண்ட யமன், "கற்புக்கரசியே, உனது கணவனை உயிர்ப்பிப்பதைத் தவிர்ந்த வேறு வரங்களைக் கேள்" என்றான்.

"**மி**க்க மகிழ்ச்சி தர்மராஜனே, எனது மாமனார் இழந்த கண்களையும், நாட்டையும் பெறவேண்டும். அத்துடன் எனக்கு ஓர் ஆண்பிள்ளை பிறக்க அருளல் வெண்டும்" என்றாள். அதைக்கேட்ட யமதர்மன், "அப்படியே ஆகட்டும்" என்றான்.

"**த**ர்மராசாவே, கணவனை இழந்த நான் எப்படி ஓர் ஆண் பிள்ளையைப் பெறமுடியும்?" என்று கேட்டாள் சாவித்திரி. தனது தவறை உணர்ந்த யமன் பின் சமாதானமாகி, "உனது கணவன் உயிர்த்தெழுவான். உங்களுக்கு ஓர் ஆண் பிள்ளை பிறக்கும். நீங்கள் இருவரும் பலகாலம் இன்பமாக வாழ்வீர்கள்" என்று வாழ்த்திவிட்டு மறைந்தான்.

**இ**வ்வாறு பிரமவைவர்த்த புராணத்தைத் தவிர ஏனைய புராணங்கள் கூறுகின்றன. ஆனால் பிரமவைவர்த்த புராணம் யமனுக்கும் சாவித்திரிக்கும் நடைபெற்ற உரையாடலை வேறுவிதமாகக் கூறகிறது.



"**பெ**ண்ணே, முற்பிறவியில் செய்த பாவபுண்ணியங்களுக்கேற்பவே மறுபிறவியில் இன்பதுன்பங்களும், பிறப்புக்களும், இறப்புக்களும் ஏற்படுகின்றன. பெருமளவில் நிலம், நெல் முதலியவற்றை பிராமணருக்குத் தானமாகக் கொடுத்தவர்கள் விஷ்ணுலோகத்தைச் சென்றடைவார்கள். வீடுகளைத் தானமாகப் பிராமணர்களுக்குக் கொடுத்தவர்கள் தேவலோகத்தை அடைவர். கால்நடைகள், பொன், செம்பு போன்றவற்றைப் பிராமணருக்குத் தானமாகக் கொடுத்தவர்கள் சூரியலோகத்தை அடைவர். ஒரு பிராமணன் தனது கன்னிப் பெண்ணை இன்னொரு பிராமணனுக்குத் தானமாகக் கொடுத்தால் அவன் சந்திரலோகத்தை அடைவான். இல்லாவிட்டால் விஷ்ணுலோகத்தைச் சென்றடைவான். கறவைப் பசுக்கள், துணிமணிகள், சாலக்கிராமங்கள், குடை, காலணி, தீபம், குதிரை, கடுக்கை, பல்லக்கு, யானை போன்றவற்றைப் பிராமணர்களுக்குத் தானமாக அளித்தால் அவர்கள் என்றென்றும் இன்பமாக வாழும் பேற்றைப் பெறுவர்".

**அ**டுத்து யமன் விரதங்களைப் பற்றியும் அவற்றின் மகிமைகளைப் பற்றியும் சாவித்திரிக்கு விளக்கிக் கூறினான். “பெண்ணே, சிவராத்திரியன்று உபவாசமிருந்து வில்வம் இலைகளால் சிவனை அர்ச்சித்தால் சிவலோகத்தை அடையலாம். ராம நவமியன்று விஷ்ணுவைத் துளசியிலையால் அர்ச்சித்து நெய்விளக்கேற்றிப் பிராமணருக்குத் தானம் கொடுப்பவர்கள் விஷ்ணுலோகம் சென்று வாழ்நாள் முழுவதும் இன்புற்று வாழ்வர். கார்த்திகை மாதத்தில் ராசமண்டபம் அமைத்து விஷ்ணுவைப் பூசித்து அவரது நாமங்களைப் பக்தியுடன் உச்சரித்தால் அவர்கள் கோலோகம் சென்று இன்புற்று வாழ்வர். ஏகாதசி விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர்கள் வைகுந்தத்தை அடைவர். ஆனிமாதம் சதுர்த்தசித்திதியில் சாவித்திரி விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் பிரம்மலோகத்தை அடைவர். மாசிமாதத்தில் வரும் பஞ்சமித் திதியில் சரஸ்வதிக்குரிய விரதங்களில் ஒன்றை முறைப்படி அனுஷ்டித்தால் அவர்கள் வைகுண்டத்தை அடைவர். பாரத நாடெங்கும் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடுபவர்கள் வீடுபேற்றை அடைவர்.

**இ**வற்றை விட யாகங்களைப் பற்றியும் யமன் சாவித்திரிக்குச் சொன்னான், “பெண்ணே, முறைப்படி பிராமணர்களையும், முனிவர்களையும் அழைத்துப் பல்வேறு விதமான தானங்களைச் செய்து அஸ்வமேத யாகத்தைச் சிறப்பாகச் செய்பவர்கள் இந்திரலோகத்தின் அரைவாசிப் பகுதியைப் பெற்று சகல இன்பங்களையும் அனுபவிப்பான். ஒரு ராஜசூரிய யாகத்தை முறைப்படி செய்து அந்தணர்களுக்குக் கொடுக்க வேண்டிய தானங்களை ஒழுங்காகக் கொடுத்தவன் அசுவமேத யாகத்தைச் சிறப்பாகச் செய்து முடித்தவன் பெறும் பயனை விட நான்கு பங்கு அதிகமான பயனைப் பெறுவான். இவற்றை விட விஷ்ணுயஜ்ஞும் செய்தவர்கள் ஆயிரம் ராஜசூரிய யாகத்தைச் செய்த பயனைப் பெறுவர்.

“**பெ**ண்ணே, எண்பத்தாறு நரகலோகங்கள் உண்டு. பாவம் செய்தவர்களுக்கு அங்கு தகுந்த தண்டணைகள் வழங்கப்படுகின்றன. அங்கு உயிர்கள் நீதிப்படி தண்டிக்கப்படுகின்றன. அவற்றைக் கூறுகிறேன் கேட்பாயாக. எந்த ஒரு உயிரும் செய்த பாவங்களில் இருந்து தப்பிக்க முடியாது. அதுபோல புண்ணியம் செய்த உயிர்களும் எக் காரணங் கொண்டும் துன்பத்தை அனுபவிக்கக் கூடாது என்பது தான் விஷ்ணுவின் கோட்பாடாகும். அதன்படி தான் யாவும் நடைபெறும்.

## நரகலோகங்கள்

**ஓ**ர் உயிர் மனதால் செய்த பாவங்களுக்குக் கிங்கரர்கள் திட்டுவார்கள். உடலால் பாவம் செய்திருந்தால் கொதிக்கும் எண்ணைக்குள்ப் போட்டு வறுப்பார்கள். அதன்பின் உருக்கிய செம்பாலான தூணைக் கட்டித் தழுவச் சொல்வார்கள் இது பெரும்பாலும் காமம் மிகுந்தவர்களுக்குரிய தண்டனையாகும். இமைக்க முடியாத கண்களை உடைய உயிர்கள்

மனதால் பாவம் செய்தால் இத்தகைய கொடிய தண்டனைகள் பெறுபவர்களைப் பார்த்துப் பயப்படுவார்கள். இதுதான் அவர்களுக்குத் தண்டனையாகும்.


“கருடா, யமபுரியில் மொத்தம் 84,60,000 நரகங்கள் உள்ளன. இவற்றுள் இருபத்தெட்டு நரகங்கள் மிகவும் கொடுமையானவை. இப்போது நான் அந்தக் கொடுமையான நரகங்களைப் பற்றிச் சொல்கிறேன்.

1. **தமீஸ்ரம்**




பிறரின் பொருளை அபகரிப்பவர்களையும், பிறரின் மனைவியோடு தொடர்பு வைத்திருப்பவர்களையும், பிறரின் குழந்தைகளைத் திருடுபவர்களையும் இந்த நரகத்தில் தள்ளித் துன்புறுத்துவர். மயக்கமடையும் வரையும் தாக்குதல் நடைபெறும். பின் மயக்கத்தைத் தெளிவித்துத் தாக்குதல் நடைபெறும்.

2. **அந்தாமீஸ்வரம்**




கணவனுக்குத் துரோகம் செய்த மனைவி, மனைவிக்குத் துரோகம் செய்த கணவன் இவர்களை இந்த நரகத்தில் இருத்திப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை இவர்களின் கண்களுக்குள்ச் செருகுவார்கள். இதனால் தான் இந்த நரகத்திற்கு அந்தாமீஸ்வரம் என்ற பெயர் உண்டானது.

3. **ரௌரவம்**



பொய்வழக்காடுபவர்கள், பொய்ச்சாட்சி சொல்பவர்கள், தீமைகளைச் செய்து பிறரின் குடும்பங்களை அழிப்பவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுகின்றனர். பிறரை ஏமாற்றியவர்கள் ‘ருரு’ என்ற என்ற மிருகவடிவத்தைப் பெறுவர். ஏமாந்தவர்களின் துன்பப்பட்டு அழுத கண்ணீர் ருருவிடம் சேர்ந்திருக்கும். ருரு அங்குள்ளோரைப் பயங்கரமாகத் தாக்கும்.

4. **மகாரௌரவம்**



பலரையும் பல்வேறு சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏமாற்றியவர்களை ருருக்கள் பயங்கரமாகக் கொத்திக் கிழிக்கும் இதனால் இதை மகாரௌரவம் என்பார்கள்.

### 5. கும்பீபாகம்



பறவைகள், பசு, மான், முயல் போன்றவற்றைக் கொன்று தின்றவர்களையும், அவர்களைச் சித்திரவதை செய்தவர்களையும் இங்கே தள்ளுவார்கள். இங்கு எண்ணெய் பெரிய அண்டாக்களில் எந்நேரமும் கொதித்துக் கொண்டிருக்கும். அதிலிட்டு இவர்களை வாட்டி எடுப்பார்கள்.

### 6. கால சூத்திரம்




பெற்றோர்களுக்குத் துன்பம் செய்பவர்களையும், மகான்களைக் கேலிசெய்து துன்புறுத்துபவர்களையும் இந்த நரகத்தில் தள்ளிவிடுவார்கள். இங்கு அனல் போலச் சூரியன் தகிப்பான். எங்கும் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். இதனால் உயிரின் சரீரம் எரியும், நா உலரும், பசி வாட்டும், அதனால் அவற்றைத் தாங்கமுடியாத உயிர் அங்குமிங்கும் ஓடும். நிலத்தில் புரளும், துள்ளிக் குதிக்கும், பின் மயக்கமடைந்துவிடும். மயக்கத்தை தெளிவிப்பார்கள். பின் முதலில் இருந்து சித்திரவதை ஆரம்பமாகும்.

### 7. அசிய பத்திரம் (வாளலகு)



தன்னுடைய குலதெய்வங்களை நிந்திப்போர், கவனிக்காது விடுவோர், தான் செய்ய வேண்டிய தர்மங்களைச் செய்யாதவர் ஆகியோரைச் தள்ளிச் சித்திரவதை செய்யும் நரகம் இது. கற்களும், பாறைகளும் நிறைந்த மேடுபள்ளமான நரகம் இது. கத்தியைப் போலக் கூர்மையான ஒருவகை இலைகளால் செய்யப்பட்ட சாட்டையால் இங்குள்ளவர்களை அடிப்பார்கள். அடியைத் தாங்கமுடியாத உயிர்கள் அங்கும் மிங்கும் ஓடும்போது இடறிவிழுவர். அப்போது கூரிய கற்கள் தாக்கும் அதனால் இரத்தம் பெருக மயக்கமடைவர்.

### 8. பன்றிமுகம்



லஞ்சம் வாங்கிக் கொண்டு நீதிக்கு மாறாகத் தீர்ப்பு எழுதுபவர்கள், அகந்தையுள்ளவர்களை அடைக்கும் நரகம் இது. உண்மைக்கு மாறாக வாதாடித் தீயவர்களுக்குப் பொருள் சேர்த்துக் கொடுக்கும் வழக்கறிஞர்கள்

பலர் இங்கிருப்பார்கள் இந்த நரகம் பன்றியினது முகம்போன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள யமதூதுவர்கள் இவ் நரகத்தில் உள்ளோரின் கை கால்களை விறகுச் சுள்ளிகளை முறிப்பது போல முறிப்பார்கள். பின் அவற்றை அடித்து நொருக்குவார்கள்.

**9. அந்த கூபம் (பாழடைந்தகிணறு)**

கொலை செய்தவர்களைத் தள்ளும் கிணறு இது. இதன் ஒரு பகுதியில் கூர்மையான கொம்புகளை உடைய மாடுகள் நின்று தமது கூர்மையான கொம்புகளால் தாக்கும். கழுகும், இராஜாளியும் இரத்தம் வழியும் தசையைக் கொத்திக் கொத்தி உண்ணும். கொசுக்களும் வேறு பூச்சிகளும் இரத்தத்தில் மொய்த்து அதை உறிஞ்சிக் குடிக்கும். தேளும், பாம்பும் ஒரு பகுதியில் இருந்து கொத்தும். கொலை செய்தவனின் உடலில் எத்தனை மயிர்கள் இருந்தனவோ அத்தனை ஆண்டுகள் அக்கிணத்தில் வாழவேண்டிய நிலை ஏற்படும்.

**10. கிருமிபோசனம்**

இது லட்சம் போசனை பரப்பளவைக் கொண்டது. சுயநலத்துடன் தான் மட்டும் உண்டு வாழ்ந்தவர்கள், விருந்தினர் வந்திருக்க அவர்களுக்கும் கொடாது தாம் உண்டவர்கள், பிறரை வருத்தியவர்கள், தெய்வநிந்தனை செய்தோர் இங்கு தள்ளப்படுகின்றனர். இங்கே விழுந்தவர்கள் உடனே புழுக்களாகிவிடுவர். அங்கிருக்கும் பெரிய புழுக்கள் இவர்களைக் கடித்துக் குதறும்.

**11. அக்கினிக் குண்டம்**

கொள்ளை அடிப்பவர்களுக்குத் தண்டனை அளிக்கு நரகம் இது. திருடினவர்களை இரும்புத் துடுப்பால் அக்கினி குண்டத்தில் தள்ளி வாட்டி வதைப்பார்கள்.

**12. வஜ்ர கண்டகம்**

பிற ஆடவரோடு உறவு கொண்ட மனைவிமாரையும், எந்நேரமும் தாசிவீடே கதி என்று இருந்து தனது கடமையை மறந்த புருசர்களையும் இங்கே அடைத்து வைத்திருப்பர். பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புத் தூண்கள் பல அங்கே காணப்படும். அத் துண்களைக் கட்டிப்பிடிக்கச் சொல்வார்கள். யமகிங்கரர்கள் சாட்டையால் தொடர்ந்து அடித்தவண்ணம் இருப்பர். அந்தச் சூடேற்றப்பட்ட இரும்புத்தூண்கள் கட்டியணைத்தவரை அவரது பாவம் தீர்த்த பின்பு தான் விடும். அதுவரை அவர்கள் தூணோடு ஒட்டப்பட்டிருப்பர்.

### 13. சான்மலி

நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு ஆகியவற்றைப் பாராமல் தரம்கெட்ட நிலையில் எவருடனும் கூடிக் களிக்கும் காமமோகம் உள்ளவர்களை இங்கே தள்ளி முட்கள் பல உள்ள இரும்பு ஆயுதத்தால் கொத்திக் கொண்டேயிருப்பார்.

### 14. வைதரணி

இது ஓர் உதிர ஆறு. இதில் பல்வேறு வகையான அசுத்தமான பொருட்கள் கலந்திருக்கும். எலும்புகள், சதைத்துண்டுகள், மலம், சலம் போன்றனவும் அட்டைகளும் கலந்திருக்கும். அத்துடன் முதலைகள், பாம்புகள், திமிங்கிலங்கள் என்பன நீந்திக்கொண்டிருக்கும். வாழ்க்கையில் நெறிபிறழ்ந்தவர்கள் இதில் தள்ளப்படுவார்கள். அங்கு நீந்திக்கொண்டிருக்கும் திமிங்கிலங்கள் விழுங்கி விழுங்கிக் கக்கிக் கொண்டிருக்கும். தேகம் புண்ணாகிச் சீழ்பிடித்து வலியால் துடிதுடிப்பர். வாய் திறந்து அலறினால் வாய்க்குள் தலைமுடி சிக்கிக் கொள்ளும்.

### 15. பூயோகம்

வெட்கம் நாணம் இரண்டையும் விட்டுவிட்டுத் தமது மனம்போன போக்கில் ஊரவர் தூற்ற வாழ்ந்தவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இது சிறுநீர் நிறைந்த குட்டையாகும். இங்கு தள்ளப்படுவோர் தமக்குள்த் தாமே சண்டை செய்வார்கள். உடல் புண்ணானாலும் அவர்கள் சண்டை செய்வதை நிறுத்தமாட்டார்கள். அதிலிருந்து உயிர்கள் வெளியேற முடியாது. வெளியே செல்லச் செல்ல சளிகளில் வழுக்கி மீண்டும் அக்குட்டையில் விழுவர்.

### 16. பிராண ரோதம்

நாய், கழுதை, காளை போன்ற மிருகங்களைத் தமது தேவைக்காக வளர்த்து அவை வயதானதும் அதிலிருந்து எந்தப் பயனையும் பெறமுடியாதென்று நினைத்து அவற்றைக் கண்காணாத இடங்களில் கொண்டு சென்று விடும் பாவிகளை இந்த நரகத்தில் தள்ளுவார்கள். அவர்களுக்குக் காவலுக்கு நிற்கும் யமதூதுவர்கள் மேலே இருந்து தொடர்ந்து அம்புகளை எய்து இவர்களைக் காயப்படுத்திக் கொண்டிருப்பர். மான், முயல், பன்றி போன்ற காட்டு மிருகங்களை வேட்டையாடி உண்பவர்களும் விற்பனை செய்பவர்களும் இந்த நரகத்தில் தான் தள்ளப்படுவார்கள்.

### 17. விசயனம்

ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பி பெரும் யாகங்களைச் செய்து பசுக்களைக் கொன்று யாக குண்டங்களில் இட்டு அவற்றை வருத்துவோர் இந்த நரகத்தில்

தள்ளப்படுகின்றனர். இவர்களை ஓயாது முள்ச்சாட்டையால் எமதூதுவர்கள் அடிப்பார்கள்.

**18. லாலாட்சம்**

இயற்கைக்கு மாறான விதத்தில் காமம் கொண்டு தனது மனைவியை விபரீதமான காம இச்கைக்கு ஆளாக்குபவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.

**19. சாரமேயாதனம்**

பகை கொண்டவர்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொழுத்தி அவ்வீட்டுக்குரியவர்களைத் துன்பப்படுத்துவோரும், தனது நல்வாழ்வுக்காகப் பிறரின் சொத்துக்களை நயவஞ்சகமாகக் கவர்பவர்களும், விசம் கொடுத்து உயிர்களைக் கொல்பவர்களும், பொறாமையால் பிறரைக் கேவலப்படுத்துபவர்களும் இந்த நரகத்தில் தள்ளப்படுவர். இங்கு நாயின் இறைச்சியே உணவாகக் கொடுக்கப்படும். எழுநூறு வேட்டை நாய்கள் இவர்களை எந்நேரமும் கடித்துக் குதறிக் கொண்டிருக்கும். இது ஒரு பயங்கரமான நரகம்.

**20. அவிசி**

தற்பெருமை கொண்டு மற்றவர்களை மதியாது கேடு செய்பவர்கள், உணவை வீணாக்குபவர்கள், ஆணவம் உள்ளவர்கள் அவிசியின் உச்சியில் இருந்து கீழே தள்ளப்படுவார்கள். கரடுமுரடான கற்களையும், பெரும் பள்ளங்களையும் உடைய இம்மலையில் இருந்து உருண்டு வருபவர்களின் உடல் சிதறும். அங்கங்கள் பிரிந்து மலைகளில் சிதறிக் கிடக்கும். அவற்றை யமகிங்கரர்கள் கூட்டி அள்ளி ஒன்று சேர்த்து உருவமாக்கி மீண்டும் மலை உச்சிக்குக் கொண்டு சென்று தள்ளிவிடுவார்கள். இது தொடர்ந்து நடைபெறும்.

**21. பரிபாதனம்**

மதுபானங்களைக் குடிப்பவர்கள், மதுவை வற்புறுத்திக் குடிக்கச் செய்தோர், போதைப் பொருட்ளை விற்போர், பயன்படுத்துபவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுபவர். இங்கு யமகிங்கரர்கள் நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சாட்டையால் எந்நேரமும் அடித்துக் கொண்டே இருப்பார்கள். நன்றாகக் காய்ச்சித் திரவம் போல வந்த இரும்புக் குழம்பை இவர்களுக்குப் பானமாகப் பருக்குவார்கள்.

### 22. ஷாரகர்த்தமம்

அகம்பாகத்தால் தலைக்கனம் கொண்டு சான்றோரை மதிக்காது அவமதித்தவர்கள் இந்த நரகத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு அவர்களின் உடலில் பூரான், மரஅட்டை, வண்டு, தேனீ, எறும்புகள் போன்றவற்றை விடுவார்கள். அவை அவர்களைக் கடித்துக் குதறும். வேதனையைத் தாங்கமாட்டாது அழுதுகொண்டே இருப்பார்கள்.

### 23. ரஷோகணம்

பொருள் தேடுவதற்காக நரபலி கொடுத்து யாகம் செய்தோரும், செய்வித்தோரும், நரமாமிசம் உண்போரும், பிதுர்களுக்கான கடன்களைச் செய்யாதவர்களும், சிசுக்களைக் கொன்றவர்களும் இந்த நரகத்தில் தள்ளபடுபவர். இவர்களால் பாதிக்கப்பட்டோர் கூரிய ஆயுதங்களினால் துண்டு துண்டாக அறுப்பர். பின் ஒன்று சேர்ப்பர். அதன் பின் அறுப்பர்.

### 24. சூலப்ரோதம்

நயவஞ்சகமாக அப்பாவிகளைக் கொன்றவர்கள், தனக்கு எந்தக் கெடுதல்களையும் செய்யாதவர்கள் மீது காரணமின்றிப் பகை கொண்டு அவர்களது பொருட்களைக் கவர்வதற்காகத் துன்பங்களைச் செய்தோர், தற்கொலை செய்து கொண்டவர்கள் இந்த நரகத்தில் அடைக்கப்படுவர். இவர்களை யமதூதுவர்கள் சூலத்தால் குத்துவார்கள். சூலம் குத்திய தசையில் இருந்து வெளிவரும் இரத்தத்தையும் சதையையும் கழுகு இனத்தைச் சேர்ந்த பறவைகள் கொத்தி உண்ணும்.

### 25. தந்த சூகம்

கலப்படப் பொருட்களை விற்று லாபம் சம்பாதிக்கும் வியாபாரிகள், கூலிக்கு வேலையாட்களை அமர்த்திவிட்டு உரிய வேதனம் கொடாதவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இவர்களை ஐந்து முகம் கொண்ட கடுவாய்களும், ஏழு தலை உடைய கொடிய நாகங்களும், தேள்களும் கொத்திக் குதறும்.

### 26. வடரோதம்

குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வசிக்கும் தேனீ போன்ற பிராணிகளைத் துன்புறுத்தி அதுகள் சேமித்து வைத்திருக்கும் தேன் போன்ற பொருட்களை எடுத்தோர், பில்லி சூனியம் வைப்போர் நச்சுப்புகை சூழ்ந்த இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இந் நரகலோகம் முழுவதையும் தீ ஆக்கிரமித்து இருக்கும். எங்கு சென்றாலும் தீ அவர்களை எரிக்கும்.

**27. பர்யா வர்த் தகைம்**

விருந்தினரை மனம் நோகும் படி நிந்தித்தவர்களும், சமித்துக்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றவர்களும், தண்ணீரை அசுத்தப்படுத்துகின்றவர்களும் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். அவர்களது கண்களைக் காகங்களும், பருந்துகளும் கொத்திக் கொண்டிருக்கும். நகக் கண்களில் ஊசிகள் ஏற்றப்படும். வேதனையால் எந்த நேரமும் அழுது கொண்டிருப்பார்கள்.

**28. சூசி முகம்**

கடன் வாங்கி விட்டுத் திருப்பிக் கொடாது எமாற்றுபவர்கள், பணத்தைச் சேகரித்து புதைத்து வைத்துவிட்டு அதை எண்ணி மகிழ்பவர்கள், தவறான வழியில் சொத்துக்களைச் சேர்த்தவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவர். இவர்களின் நாக்கை 'சந்தமிசினி' என்ற ஆயுதத்தல் பிடுங்குவர். பூமியெங்கும் கூர்மையான கத்திகளைப் புதைத்து வைத்து விட்டு இவர்களை அதன் மேல் நடக்க விடுவர்.

உணவுகளை விரயமாக்குபவர்களின் உறுப்புக்களை அரிந்து உப்பிட்டு வாட்டுவர்.

**ஏனைய நரகங்கள்**

**அ**யலவர்கள், இனத்தவர்களைக் காரணமின்றி வேதனைப்பட்டுக் கண்ணீர சிந்தவைத்தோரை வேதனைப்பட்டவரின் கண்ணீரால் நிரம்பிய பாத்திரத்தில் இட்டு அமுக்குவர்.

**இ**டித்து இடித்துப் பலமாக ஏசி மற்றவர்களைத் துன்புறுத்துபவர்களை உரலில் தள்ளி உலக்கையால் இடிப்பார்கள்.

**சோ**ம்பேறிகளை 'கூர்மகுண்டம்' என்ற நரகத்தில் தள்ளுவார்கள். அவர்களின் உடல் முழுவதையும் ஆமைகள் கடிக்கும்.

**க**ற்றவர்கள், அறிஞர்கள், மூத்தவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேளாதவர்களை கர்ணவிஷக்குண்டத்தில் தள்ளுவார்கள்.

**கொ**ழுப்பெடுத்து அலைந்தவர்களை மஞ்ஞா குண்டத்தில் தள்ளுவார்கள்.

**ஆ**த்திர மிகுதியால் எதிரிகளின் வீடுகளையும், அவர்கள் விளைவித்த பயிர்களையும், பொதுச் சொத்துக்களை எரிப்பவர்களையும் வன்னிக் (நெருப்பு) கும்பத்தில் தள்ளுவர்.

**த**னக்குப் பிடிக்காதவர்களை எதிரிகள் என நினைத்து நஞ்சிடுபவர்களை விசக் குண்டத்தில் தள்ளுவார்கள்.

**கா**ரணமின்றித் தனது நலனுக்காகக் கோள் சொல்பவர்களை தூஷிகாக் குண்டத்தில் தள்ளிச் சித்திரவதை செய்வார்கள்.

**அ**ப்பாவிகளைக் கொல்பவர்களை சரக்குண்டத்தில் தள்ளிச் சித்திரவதை செய்வர்.

**பி**திர்களின் கர்மாவைச் செய்யாதவர்களை காகக் குண்டத்தில் தள்ளுவர். இங்கே லட்சக்கணக்கான காகங்கள் இருந்து இவர்களைக் கொத்தித் தின்னும்.

**பி**றரைத் தேவையில்லாது வருத்தி இன்பங்காண்பவர்களை தப்பசூரிக் குண்டத்தில் தள்ளி, நெருப்பினால் பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பூசிகளால் இவர்களின் உடலைக் குத்துவார்கள்.

**த**னது கடமைகளைப் பற்றின்றி முழுமையாகச் செய்பவர்களும், கர்மத்தில் பற்றுள்ளவர்களும், புண்ணியம் செய்தவர்களும், சித்தர்களும், யோகிகளும், கொடுமைகள் பலவற்றையும் பாவிகளுக்குச் செய்யும் யமகிங்கரர்களின் கண்களுக்குத் தெரியமாட்டார்கள்.

**இ**ருபத்தெட்டு வகையான நரகங்களும் ஏராளமான கொடிய பல பிரிவுகளைக் கொண்டவை. இவைகளில் உழலாமல் இருக்கவேண்டுமேயானால் ஒழுக்கமாக வாழ்ந்து, ஒழுக்கமான வழியில் பொருளைத் தேடி, புண்ணிய காரியங்கள் பலற்றைச் செய்தல் வேண்டும். அத்துடன் பிதுர்களுக்கான கடமைகளை தவறாமல் செய்தல் வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால் பேரானந்தத்தைத் தரும் முத்தியின்பத்தைப் பெறலாம்.

## 18. லட்சுமி கடாச்சம்



**ஏ**னைய புராணங்களை விட இப் புராணம் லட்சுமியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. யமன் சாவித்திரியைப் பார்த்து, “பெண்ணே, உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோது கிருஷ்ணனது இடது பக்கத்தில் ஓர் அழகிய தேவி தோன்றினாள். பின்னர் அவள் இன்னொரு



உருவமெடுத்து கிருஷ்ணன் இடப்புறமும் வலப்புறமும் அமர்ந்தனர். இடம்புறத்தே அமர்ந்தவள் மகாலட்சுமியாகவும், வலப்புறத்தில் அமர்ந்தவள் ராதையாகவும் தோற்றம் பெற்றனர். அதன்பின் கிருஷ்ணனது இடது பக்கத்தில் இருந்து நான்கு கரங்களைக் கொண்ட நாராயணன் தோன்றினான். அடுத்து கிருஷ்ணனது வலது பக்கத்தில் இருந்து இரு கரங்களுடன் தோன்றிய நாராயணன் லட்சுமியைத் தனது மனைவியாக்கிக் கொண்டான். கிருஷ்ணன் ராதையை மனைவியாக்கிக் கொண்டான்.

**ம**காலட்சுமியைச் சொர்க்கத்தில் உள்ளோர் சொர்க்கலட்சுமி என்றும், நாட்டை ஆளும் மன்னர்கள் அவளை ராஜ்ஜியலட்சுமி என்றும், வீடுகளில் வசிப்போர் அவளை இல்ல லட்சுமி என்றும் / கிரக லட்வுமி என்றும் அழைப்பர். அவள் பிரம்மாவாலும், விஷ்ணுவாலும், சூரிய சந்திரர்களாலும் பூசிக்கப்படுகிறாள்.

**சூ**ரிய சந்திர மண்டலங்களிலும், பாலிலும், தானியங்களிலும், பட்டாடைகளிலும், தூய்மையான உடைகளிலும், சந்தனம், குங்குமம், ஆபரணங்கள், புனிதமான இடங்கள், பூக்கள், இல்லங்கள், மங்கல கலசங்கள் முதலியவற்றில் அவள் மகிழ்வுடன் வீற்றிருப்பாள்.

## இந்திரனின் லட்சுமி பூசை

**இ**ந்திரன் லட்சுமியை பூசை செய்து வணங்கிய வரலாற்றைப் புராணங்கள் கூறுகின்றன. அவற்றை விட இப் புராணம் இப் பூசை பற்றி சிறிது மாறுபாடாகக் கூறுகிறது.



“**பெ**ண்ணே, நான் உனக்கு லட்சுமியை இந்திரன் வழிபட்ட வரலாற்றைக் கூறுகிறேன். ஒரு சமயம் துர்வாசக முனிவர் வைகுந்தத்திற்குச் சென்று விஷ்ணுவை வழிபட்டார். துர்வாசக முனிவரைக் கண்டு மிக்க மகிழ்வடைந்த விஷ்ணு அவரை மிக்க மகிழ்வுடன் வரவேற்றார். பின் பாரிஜாத மலர்களால் கட்டப்பட்ட ஒரு அழகிய மாலையை அவருக்கு அணிவித்து உரிய முறைப்படி அவரை வரவேற்றார். அதனால் மிக்க மகிழ்வடைந்த துர்வாசக முனிவர் விஷ்ணுவிடம் விடைபெற்றுக் கொண்டு இந்திரனைச் சந்திப்பதற்காக இந்திரலோகத்திற்குச் சென்றார். இந்திரனும் அங்குள்ள தேவர்களும் சோமபானத்தைக் குடித்துவிட்டு மிக்க மகிழ்வுடன் ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் கொடூரமான குணத்தைக் கொண்ட துர்வாசக முனிவர் வந்ததைக் கவனிக்கவில்லை.



**வி**ஷ்ணு கொடுத்த பாரிஜாத மலர் மாலையை இந்திரனுக்கு அணிவிக்கவென மிக்க மகிழ்வுடன் வந்த துர்வாசக முனிவர் தான் வந்ததை கவனிக்காது தேவர்களுடனும், தேவமகளிர்களுடனும் ஆடிப்பாடி மகிழ்ந்ததை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனினும் கோபம் கொள்ளாது இந்திரனின் அருகே சென்றார். இந்திரன் தனது வெள்ளை யானையான ஐராவதத்தில் திமிருடன் அமர்ந்திருந்தான். துர்வாசக முனிவர் இந்திரனின் அருகே சென்று விஷ்ணு கொடுத்த பாரிஜாத மலர்மாலையை அணிவிக்க முயன்ற போது இந்திரன் அதை வாங்கி ஐராவதத்தின் தலையின் மீது வைத்தான். யானை அதைத் தூக்கி வீசியது. அச்செயல் பிரமகத்தித் தோசத்தை உருவாக்கியது. தன்னை அவமதித்ததுமல்லாமல். தான் அணிவிக்க வந்த பாரிஜாத மலர்மாலையை பெற்று யானையின் தலைமீது வைத்த இந்திரனின் திமிரான செயலால் பெருங்கோபங் கொண்ட துர்வாசக முனிவர், "திமிர் பிடித்த இந்திரனே, இக்கணமே உனது லோகத்தை விட்டு லட்சுமி வெளியேறுவாள். அத்துடன் என்னையும், நான் அளித்த மலர்மாலையையும் அவமதித்த உனது யானையின் தலை துண்டிக்கப்பட்டு சிவபெருமானின் மூத்த மகனான விநாயகருக்குப் பொருத்தப்படும்" என்று சபித்தார்.



**மு**னிவரின் சாபத்தைக் கேள்விப்பட்ட இந்திரன் நடுநடுங்கினான். இந்திரலோகம் களையிழந்து வரண்ட பாலை நிலமானது. ஐராவதம் தலையின்றிப் படுந்திருந்தது. அதனால் இந்திரன் துர்வாசக முனிவரை வணங்கித் தான் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு இரந்தான். அதனால் மனம் குளிர்ந்த துர்வாசக முனிவர், "அதிகாரமுள்ளவன் ஆண்டியையும் மதிக்க வேண்டும். ஏனென்றால் அவனது உள்ளத்திலும் பகவான் விஷ்ணு குடியிருக்கிறார். நாம் ஒருவரை அவமதிப்பது அவருள் மறைந்திருக்கும் பகவானை அவமதிப்பதற்குச் சமமாகும். விஷ்ணு தான் அதிசக்தி வாய்ந்த தெய்வம். நானிட்ட சாபத்தை என்னால் மீளப்பெற முடியாது. ஆனால் அச் சாபத்தை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கூற முடியும். எல்லாம்வல்ல பகவானான விஷ்ணுவைச் சரணடை யாவும் நல்லபடி நடக்கும்" என்று கூறிவிட்டுச் சென்றார் துர்வாசக முனிவர்.

**அ**தைக்கேட்ட இந்திரன் பிரகஸ்பதியுடன் சென்று பிரமனிடம் முறையிட்டான். "இந்திரா, நீ அடிக்கடி நிதானமிழப்பதால் தான் உனக்கு இத்தகைய இடர்கள் வருகின்றன. எச் சந்தர்ப்பத்திலும் கர்வம் கொள்ளல் ஆகாது. பெரும் வசதிகளுடன் இருந்த நீ உனது அதிகாரம், பொருள் அனைத்தையும் இழந்தமைக்குக் காரணம் கர்வம் தான். சக்தி மிகுந்த

துர்வாசகரின் சாபத்தை விஷ்ணுவால் மட்டுமே நீக்க முடியும். என்று கூறிய பிரமன், அவர்களை விஷ்ணுவிடம் அழைத்துச் சென்றார்.

## லட்சுமி வாசம்



**வி**ஷ்ணுவை இந்திரனும், பிரமனும் வணங்கினர். பின் நடந்தவற்றைப் பிரமன் விஷ்ணுவுக்கு எடுத்துச் சொன்னார். அதைக் கேட்ட விஷ்ணு, "நீ இழந்த செல்வங்கள் அனைத்தையும் பெறுவாய். ஒருவனது செல்வம் எவ்வாறு இழக்கப்படுமென்று நீ அறிந்தும் உனது கர்வத்தால் அனைத்தையும் இழந்துவிட்டாய். துளசிச் செடியில்லாத வீடு, சங்கு ஒலிக்காத வீடு, சாலக்கிராமத்தைப் பூசிக்காதவர்களது வீடுகள், விஷ்ணுவையும் அவரது பக்தர்களையும் பழிப்பவர்களது வீடுகள், பிராமணனுக்கு உணவும், தானமும் அளிக்காத வீட்டார், விருந்தினரை விருப்புடன் வரவேற்று உபசரிக்காத வீடுகள் இவற்றில் லட்சுமி தங்கியிருக்க விரும்பமாட்டாள். அதனால் அவள் உடனே வெளியேறிவிடுவாள். அவள் வெளியேறிவிட்டால் அவளது மூத்த சகோதரியான மூதேவி வந்து அவர்களது வீடுகளில் குடியேறிவிடுவாள்.



அத்துடன் சமயக் கிரியைகளை முறைப்படி செய்யாத அந்தணனது வீடு, விஷ்ணுவைப் பூசிக்காத பிராமணர்களின் வீடுகள், பிராமணரை மதிக்காது கேலி செய்பவர்களின் வீடுகள், மற்றவர்களுக்கு உதவி செய்யாதவர்களின் வீடு, இவற்றில் இருந்து லட்சுமி வெளியேறி விடுவதால் இவ் வீடுகள் யாவும் சுடுகாடாகிவிடும். இந்த வீடுகளில் ஒருபோதும் மகிழ்ச்சி, செல்வம், புகழ் என்பன தங்காது. இவர்கள் எப்போதும் ஏதாவது ஒரு துன்பத்துக்குள்ளாகி கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். இவர்களால் முன்னேற முடியாது" என்றார் விஷ்ணு.

## பாற்கடலில் லட்சுமி தோன்றல்

**க**ஜேந்திரன் மோட்சமடைந்த கதையைக் கூறிய சூதமுனிவர் ஐந்தாவது, ஆறாவது மன்வந்தரங்களில் நடந்த கதைகளைச் சொன்னார்.

"**ம**ன்னா, தாமசனுடைய சகோதரன் வைரதன் இவன் ஐந்தாவது மனு. வைரதன் என்ற இந்த மனுவின் பெயரால் இதை வைரத மன் வந்தரம் என்று அழைக்கப்படுகிறது.



**ஆ**றாவது மன்வந்தரத்திற்குச் சட்ஷன் என்பவன் மனுவாக இருந்தான். இந்த மன்வந்திரத்தில் தான் திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்கப்பட்டது" என்று சூத முனிவர் சொன்னபோது, ஒரு முனிவர் கேட்டார். "குருவே, திருப்பாற்கடலை எதற்காகக் கடைந்தார்கள்? எப்படிக் கடைந்தார்கள்? என்பது பற்றி எனக்குச் சொல்லுங்கள்"

**ஒ**ரு சமயம் தேவர்களுக்கும், அசுரர்களுக்குமிடையே கடும்போர் நடைபெற்றது. அப்போது அசுரர்களால் தாக்கப்பட்ட தேவர்கள் எழும்பமுடியாது மயங்கிக் கிடந்தனர். துர்வாச முனிவரின் சாபத்தால் மூன்று லோகங்களும் தம்பொலிவை இழந்து நலிந்துவிட்டன. வேள்விகள் தவம் முதலியன நடைபெறவில்லை.

**இ**தனால் பெரும் வேதனைப்பட்ட இந்திரன் வருணன் முதலிய தேவர்கள் பிரம்மதேவரிடம் வந்து அவரை வணங்கி மூன்று லோகங்களும் பொலிவிழந்திருப்பதையும், அசுரருடன் போரிட்ட தேவர்கள் மயக்கமுற்ற நிலையில் இருப்பதையும் கூறினர்.

"**நா**ம் எல்லோருமாகச் சேர்ந்து பகவானிடம் சென்று முறையிடுவோம் என்று கூறி, பகவானின் இருப்பிடத்தை அடைந்தனர். பகவானைத் தேவர்கள் போற்றித் துதித்தபோது பகவான் அவர்களுக்குக் காட்சி கொடுத்து, "தேவர்களே, அசுரர்களுக்கு இப்போது நல்ல காலம். அதனால் அவர்களை எதிர்க்காது அவர்களுடன் நட்பாகப்பழகுங்கள். உங்களுக்கு நல்லகாலம் வரும் வரை பொறுத்திருங்கள். அவர்கள் மிகுந்த பலசாலிகள். அவர்களோடு சேர்ந்து திருப்பாற்கடலைக் கடையுங்கள். அப்போது பாற்கடலில் இருந்து அமிர்தம் வெளிப்படும் அதை உண்டால் உங்களுக்கு நலம் உண்டாகும்" என்றார்.



**உ**டனே தேவர்களின் தலைவனான இந்திரன், அசுரர்களின் தலைவனான பலிச்சக்கரவர்த்தியிடம் சென்று அவரை வணங்கி, "சக்கரவர்த்தியே, இன்று மூவுலகங்களும் பெரும் துன்பப்படுவதைக் கண்டு நாம் திருமாலின் தலைமையில் பகவானை வழிபட்டோம். அவர் எம்முன் தோன்றி மிக்க பலமுள்ள உங்களுடன் சேர்ந்து பாற்கடலைக் கடையுமாறு கூறியுள்ளார். பாற்கடலில் இருந்து வெளிப்படும் அமிர்தத்தை இரு பகுதியினரும் சமமாகப் பங்கிடுவோம். அமிர்தத்தை அருந்தினால் அருந்துபவன் மரணமடையமாட்டான். அவனது பலம் நூறு மடங்காக அதிகரிக்கும். இதை விட வேறு பல நன்மைகளும் உண்டு" என்று இந்திரன் இனிமையாகப் பேசியதைப் பலிச்சக்கரவர்த்தி முழுமையாக நம்பிவிட்டார். அவரின் சேனாதிபதிகளான

சம்பரன், அரிஷட்டநேமி முதலியோர் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். அதனால் இரு பகுதியினரும் சேர்ந்து பாற்கடலைக் கடையத் தீர்மானித்தனர்.

**தே**வர்களும், அசுரர்களும் மந்திரமலையைத் தூக்கிச் சென்று மத்தாக வைத்துப் பாற்கடலைக் கடைய எண்ணி அம்மலையைத் தூக்கிச் செல்ல முற்பட்ட போது இருபகுதியினரும் பெருங்காயங்களுக்குள்ளானார்கள். பலர் மரணமடைந்தனர். செய்வதறியாது தேவர்களும் அசுரர்களும் திகைத்தபோது பகவான் கருடவாகனத்தில் வந்து காயப்பட்டவர்களைச் சுகப்படுத்தினார். மரணமடைந்தவர்களை உயிர்ப்பித்தார். பின்பு மந்திரமலையைத் தூக்கிக் கருடன் மீது வைத்துக் கொண்டு வந்து பாற்கடலில் வைத்துவிட்டு மறைந்தார்.



**அ**தன்பின் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கொண்டும் மந்திர மலையை மத்தாகக் கொண்டும் பாற்கடலைக் கடைய ஆயத்தமானார்கள். அப்போது அங்கே வந்த நாராயண மூர்த்தி, வாசுகியின் தலைப்பகுதியைப் பிடித்தார். அதைக்கண்ட தேவர்கள் தலைப்பகுதிக்குச் சென்றனர். அதை அசுரர்கள் ஏற்றுக் கொள்ளாது நாம் தான் தலைப்பகுதியைப் பிடிக்கவேண்டும் என்றனர். நாராயண மூர்த்தி சிரித்துவிட்டுத் தலைப்பகுதியை விட்டுவிட்டு வாற்பகுதியைப் பிடிக்கத் தேவர்களும் வாற்பகுதிக்குச் சென்றனர்.


**தே**வர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைய ஆரம்பித்தனர். தமது பலம் முழுவதையும் இருபகுதியினரும் திரட்டி இழுத்த போதும் மந்திரமலை அசையவில்லை. அது பாற்கடலில் அடிக்குச் சென்று விட்டது. உடனே திருமால் ஆமையாக உருமாறிச் சென்று மந்திரமலையைத் தூக்கிவிட்டார். இருபகுதியினரின் பலத்தைப் பகவான் தனது சக்தியால் அதிகரிக்கப் பண்ணினார். பலம் அதிகரிக்க இருபகுதியினரும் மூர்க்கத்தனமாகக் கடையத் தொடங்கினர். அதனால் பாம்புக்கு வேதனை அதிகமாகியதால் கடல் கலங்கியது. வாசுகியின் கண்களில் இருந்து நச்சுக்காற்று வெளிப்பட்டது. அதனால் தேவர்களும், அசுரர்களும் மாண்டுபோனார்கள்.



**நீ**ண்டகாலம் கடலைக் கடைந்தும் அமிர்தம் வெளிப்படாமையால் பகவான் தன் பலம் முழுவதையும் திரட்டிக் கடைந்த போது வாசுகி வேதனையைத் தாங்கமுடியாது நஞ்சைக் கக்கியது. அந்த நஞ்சு தேவர்களையும், அசுரர்களையும் துரத்த அவர்கள் சிவபெருமானிடம் ஓடிச்சென்று தம்மைக் காப்பாற்றுமாறு இரந்தனர். சிவபெருமான்

அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு உமாதேவியாரையும் அழைத்துக் கொண்டு பாற்கடலுக்கு வந்து கடலில் மிதந்த நஞ்சை அள்ளி உண்டார். அப்போது நஞ்சின் சிலதுளிகள் சிதறின. அதை உண்ட செடி கொடிகள் விஷத்தை முறிக்கும் மூலிகைகளாயின.

**சி**வபெருமான் உண்ட விஷம் அவரது தொண்டைக்குள் நின்றதால் அவரது கண்டம் நீல நிறமானது. அதனால் அவருக்கு நீலகண்டன் என்ற பெயர் உண்டானது.



**ந**ஞ்சை சிவபெருமான் உண்டபின்பு தேவர்களும், அசுரர்களும் தொடர்ந்து பாற்கடலைக் கடைந்தனர். அப்போது பாற்கடலில் இருந்து காமதேனு வெளிப்பட்டது. அதன்பின் உச்சைச் சிரவஸ் என்ற வெள்ளைக் குதிரையும், அதன்பின் ஐராவதம் என்ற வெள்ளை யானையும், அதன்பின் பாரிஜாதச் செடியும், அதன்பின் அப்சர மங்கையர் பலரும் வெளிப்பட்டனர். இவர்கள் தேவர்களுக்கு மனைவிகளானார்கள். அதன்பின் திருமகள் தோன்றினாள். அவள் ஒரு பூமாலையுடன் தோன்றியதால் பூமாலையுடன் தேவர்களைப் பார்த்தாள். எல்லோரையும் பார்த்துவிட்டு இறுதியாகத் திருமாலின் கழுத்தில் அம்மாலையைப் போட்டு அவரைத் தனது கணவராக்கிக் கொண்டாள்.

**அ**தன்பின் அழகிய திடகாத்திரமான ஓர் ஆடவன் அமிர்த கலசத்துடன் வெளியே வந்தான். அவனது பெயர் தன்வந்திரியாகும். அமுதகலசத்துடன் வந்த தன்வந்திரியின் கையில் இருந்த அமுதகலசத்தை அசுரர்கள் தட்டிப் பறித்து விட்டனர். தேவர்களால் எதையும் செய்யமுடியவில்லை. அதனால் அவர்கள் திருமாலிடம் முறையிட்டனர்.

**அ**மிர்தத்தைப் பங்கீடு செய்வது சம்பந்தமாக அசுரர்களுக்கிடையே முரண்பாடு தொடங்கியதால் அவர்கள் சண்டையிட ஆயத்தமானார்கள். அப்போது திருமால் ஒரு மோகினியாக மாறினார். மோகினியின் அழகை மோகித்த அசுரர்கள் அமிர்தத்தைப் பற்றிக் கவலைப்படாது மோகினியைச் சுற்றி நின்று ரசித்து மெய்மறந்தனர்.



**அ**வர்கள் மோகினியின் அருகே சென்று, “பேரழகியே நாங்கள் கசியப முனிவரின் புதல்வர்கள். அமிர்தத்தைப் பங்கீடு செய்வதில் எம்மிடையே முரண்பாடு உண்டாகிவிட்டது. தேவர்கள் எமது சகோதரர்கள். நீ நாம் முரண்படும் வேளையில் வந்ததால் உன்னிடம் இந்த அமிர்த கலசத்தைத் தருகிறோம். நீதியாகப் பங்கீடு செய்” என்று கூறி மோகினியிடம் அமிர்த கலசத்தைக் கொடுத்தார்கள். அதைப் பெற்ற மோகினி, “நான் பங்கீடு செய்து தருவதை நீங்கள் ஆட்சேபிக்காது

பெற்றுக் கொள்ள விரும்பினால் பிரித்துத் தருகிறேன்" என்றாள். அதற்கு அசுரர்கள் சம்மதித்தனர்.

**மோ**கினி அசுரர்களுக்கு மோகத்தை ஊட்டும் வார்த்தைகளை இனிக்கத்தக்கதாகக் கூறியபடி தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கிக் கொண்டிருந்தாள். அவள் தேவர்களுக்கு அமிர்தம் வழங்கியதை அவளை மோகித்துக் கொண்டிருந்த அசுரர்களால் தடுக்க முடியவில்லை. ஸவர்பாணு என்ற அசுரனுக்கு மோகினியின் நடத்தை பிடிக்காததால் அவன் தேவர்களைப் போல வேடமிட்டு தேவரின் பகுதியில் சென்று அமர்ந்து அமிர்தத்தை வாங்கிக் குடித்து விட்டான்.



**அ**தைக் கண்ட சூரியனும், சந்திரனும் இவன் தேவன் அல்ல அசுரன் என்று சொல்லத் திருமால் தனது சக்கராயுதத்தை ஏவி அவனது தலையைத் துண்டித்தார். அமிர்தம் குடித்தமையால் அவன் இறக்கவில்லை. அதனால் பிரமதேவர் சூரியன் முதலிய கிரகங்களோடு அவனையும் ஒரு கிரகமாக இருக்கும்படி பணித்தார். அக்கிரகம் தான் ராகு.



**அ**தன்பின் தனது மோகினி வடிவத்தை கலைத்த திருமால் கருடவாகனத்தில் ஏறித் தனது இருப்பிடத்தை அடைந்தார். ஏமாற்றமடைந்த அசுரர்கள் தேவர்களுடன் போர் தொடுத்தனர். பல வருடங்கள் போர் நடைபெற்றது. இறுதியில் நாரதர் தேவர்களிடம் சென்று சண்டையை நிறுத்துமாறு வேண்ட தேவர்கள் போரிடுவதை நிறுத்திவிட்டுத் தேவருலகம் சென்றனர். அசுரகுருவான சுக்கிராச்சாரியார் வந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களை அழைத்துச் சென்றார்.

**ல**ட்சுமி அழகிய மாலையுடன் பாற்கடலில் இருந்து வெளியே வந்து விஷ்ணுவுக்கு மாலையிட்டாள். வனமாலி என அழைக்கப்படும் விஷ்ணுவுக்கு லட்சுமி வனமாலையை இட்டமையால் விஷ்ணுவுக்கு வனமாலி என பெயர் உண்டானது. சிவனும், இந்திரனும் ஏனைய தேவர்களும் லட்சுமியை வணங்கி மகிழ்வுடன் வரவேற்றனர் விஷ்ணு லட்சுமிக்கு சந்தணம், பாரிஜாதமலர், மேலும் பல மங்கலப் பொருட்களைக் கொடுத்துத் தனது துணைவியாக்கிக் கொண்டார். விஷ்வகர்மா லட்சுமிக்கென நவரத்தினங்களால் செய்யப்பட்ட மதிப்புமிகுந்த அழகான சிங்காசனத்தைச் செய்து கொடுத்து அதில் அவளை வீற்றிருக்கச் செய்தார்.



**ல**ட்சுமியை வரவேற்றவர்களுக்கு புனித கங்கையின் நீர், மலர்கள், சங்கு, தர்ப்பைப் புற்கள், தூபம் தீபம், அன்னம், சர்க்கரை, நெய், பால், வெற்றிலை, கருப்பஞ்சாறு, பட்டாடை என்பன அளிக்கப்பட்டன. தேவர்களை ஆசீர்வதித்த லட்சுமி அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து மகிழ்வித்தாள். அதன்பின் லட்சுமிதேவி மிகுந்த நாணத்துடன் வந்து விஷ்ணுவின் மடியில் ஏறி அமர்ந்தாள்.

## கணேசரின் தோற்றம்



**து**ர்வாசக முனிவர் இந்திரனுக்கு விஷ்ணு தனக்களித்த பாரிஜாத மலர் மாலையை அவமதித்த இந்திரனையும் அவனது வாகனமான ஐராவதத்தையும் சபித்தார். அவரின் சாபப்படி ஐராவதத்தின் தலை துண்டிக்கப்பட்டது. அதே சமயம் சனியின் சாபத்தால் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்த விநாயகரின் தலையும் துண்டிக்கப்பட்டது. அதனால் துண்டிக்கப்பட்ட ஐராவதத்தின் தலைமீது பாரிஜாத மலரை வைத்ததும் அத்தலை சாபம் நீங்கப் பெற்றுப் புனிதமடைந்தது. அதைப் பூதகணங்கள் எடுத்துச் சென்று கணேசரின் முண்டத்தில் வைத்துப் பொருத்தினர். ஐராவதத்தின் புனிதமான தலையைப் பொருத்தி உருவாக்கிய கணேசரை ஆசீர்வதித்த சிவபெருமான், "கடவுள்களுக்கெல்லாம் முதல்வராக நீ இருப்பாய். உன்னையே முதன் முதலாகத் தொழுது பூசைகளை ஆரம்பிக்க வேண்டும். உன்னைத் தொழாது பூசை செய்தால் அதனால் எப்பயனும் உருவாகாது" என்று கூறினார்.

## 19. கிருஷ்ணன் ராதையைப் பூசித்தல்



"**பெ**ண்ணே, ராதையையும் கிருஷ்ணனையும் பூசிப்பதால் ஒருவர் தனது வாழ்நாளில் செய்த பாவங்களைச் சிறிது சிறிதாகப் போக்கிக் கொள்கிறார். கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமியன்று ராதையைப் பூசிக்க வேண்டும். ராதையை வணங்குவோர் மலர்கள், தூபம், தீபம், கந்தம், ஆபரணம், பழங்கள், இனிப்புக்களுடன் பதினாறு பொருட்களை நிவேதனமாக படைத்தல் வேண்டும். ராதையின் பெயரை முதலில் உச்சரிக்க வேண்டும். ராதா கிருஷ்ணா, ராதா மாதவா என அவரது பெயரை பூசை முடியும் வரை ஜபிக்க வேண்டும்.

**ச**ந்தணம், குங்குமம் நெற்றியில் இட்டு மகிழ்வான முகத்துடன் பூசிக்க வேண்டும். அவ்வாறு பூசிக்கும் போது ராதாதேவி புன்சிரிப்புடன், அழகாகச் சீவி முடிந்த கூந்தலில் நறுமணம் மிக்க மலர்கள் சூடி, கைகள், கால்கள், முகம், கழுத்துப் போன்ற அங்கங்கள் நிறைய ஆபரணங்களைச் சூடி பிரார்த்திப்பவர்களுக்குக் காட்சி தருவாள்.

**ரா**தை, வராக கல்பத்தில் கோகுலத்தில் விருஷபாணு கலாவதி தம்பதியினருக்கு திருமகளாகப் பிறந்தாள். வைசிகர்களான அவர்கள் மிகுந்த கிருஷ்ண பக்தர்கள். கிருஷ்ணனைத் தினமும் ஆராதிப்பவர்கள். பிராமணர்களுக்குப் பெருமதியான தானங்களை வழங்குபவர்கள். பெற்றோர் அவளுக்குத் தமது வம்சத்தில் பிறந்த தனவந்தன் ஒருவனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி அதற்கான நாளையும் குறித்தனர். ராதை அதை அறிந்து மிகுந்த வேதனைப்பட்டுத் தனது நிழலை அங்கு விட்டுவிட்டுக் கோலோகத்திற்கு வந்துவிட்டாள். நிழலுக்கும் அவளுக்கென நிட்சயிக்கப்பட்ட ராயணனுக்கும் விமர்சையாகத் திருமணம் நடைபெற்றது.

**இ**து நடந்து பதின்நான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு கோகுலத்தில் கிருஷ்ணன் பிறந்தான். நந்தகோபரின் மனைவியான யசோதையின் சகோதரன் தான் ராயணன். அவன் கிருஷ்ணனுடைய தாய்மாமனாவான்.



**கி**ருஷ்ணன் ஒருநாள் விரஜா என்ற அழகான கோபிகைப் பெண்ணுடன் மிக்க மகிழ்வுடன் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தான். அதைக் கண்ட கிருஷ்ணனின் தோழனான சுதாமன், கிருஷ்ணனை விரஜா என்ற பெண்ணுடன் சேர்ந்து விளையாடக் கூடாது என்று எச்சரித்துவிட்டுக் கிருஷ்ணன் விரஜாவுடன் ஆடிப்பாடி மகிழ்வதையும் பற்றி ராதைக்குச் சொன்னான். அதனால் ஆத்திரமடைந்த ராதை தேரில் ஏறிக் கிருஷ்ணனும் விரஜாவும் ஆடிப்பாடி மகிழும் இடத்திற்கு வந்தாள். அவளது முகத்தில் பொறாமையும் அளவுக்கதிகமான கோபமும் குடிகொண்டிருந்தது. ராதை கோபத்துடன் வருவதைக் கேள்விப்பட்ட கிருஷ்ணன் அங்கிருந்து சென்றுவிட்டான். விரஜா அதனால் துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது தற்கொலை செய்து கொண்டாள். அதன்பின் அவள் நதியாக மாறிக் கோகுலத்தைச் சுற்றி பாயத்தொடங்கினாள். அவளது தோழியர்கள் உப நதிகளாக மாறி விரஜாவுடன் கலந்து கொண்டனர்.

**மி**க்க கோபத்துடன் அங்கு வந்த ராதை அங்கு கிருஷ்ணனையும் விரஜாவையும் காணாமையால் சுதாமன் தன்னைத் திட்டமிட்டு ஏமாற்றிவிட்டான் என்று நினைத்துக்

கடுங்கோபங் கொண்டு தனது இருப்பிடத்திற்குத் திரும்பினாள். கிருஷ்ணனுடன் சுதாமனைக் கண்ட ராதை, சுதாமனைத் திட்டினாள். அதைக் கேட்டு ஆத்திரமடைந்த சுதாமன் திருப்பி ராதையை வாய்க்கு வந்தபடி திட்டடியதால் அவமானமடைந்த ராதை, "அசுரத்தனமான மனதுடன் அசுரத்தனமாக நீ நடந்துகொண்டமையால் ஒரு கொடிய அரக்கனாகக் கடவாய்" என்று சபித்தாள்.

**அ**தைக்கேட்டுக் கோபம் கொண்ட சுதாமன், "நீ உண்மையை அறியாது கொடிய அரக்கனாக மாறும்படி சாபமிட்டாய். அதுபோல் நானும் சாபமிடுகிறேன். நீ அடுத்த பிறப்பில் இடையர் குலத்தில் பிறந்து கிருஷ்ணனைப் பிரிந்து வாழக் கடவாய்" என்றான்.

**சி**லகாலம் செல்ல சாபம் நீங்கியது. அதனால் சுதாமனும் ராதையும் கோலோகம் சென்றனர். பெண்னே, "ராதையைப் பூசித்தால் துரதிஷ்டங்கள் நீங்கும். நோய்கள் அகலும். செல்வம் வந்து சேரும். இன்பமான வாழ்வு கிட்டும். சந்நதி பெருகும். ஒரு சமயம் சுயஜனன் என்ற மன்னனைச் சுதபாசன் என்ற ஓர் அந்தணனால் உன்னை விட்டு லட்சுமி நீங்கிப் போவாள். நீ உனது நாட்டை இழப்பாய். மந்த புத்தியுள்ளவனாக மாறுவாய், தொழுநோயாலும் பீடிக்கப்படுவாய் என்று சபித்தான்.



"**நா**ன் செய்தது குற்றமானால் தயவு செய்து என்னை மன்னித்துச் சாபத்தை நீக்குங்கள்" என்று மன்னன் பிராமணிடம் வேண்டினான். அதைக் கேட்டு மனமிரங்கிய பிராமணன், "மன்னா, கொடுத்த சாபத்தை மீளப்பெற முடியாது. ஆனால் அச் சாபத்தை நீக்குவதற்கான வழிமுறைகளைச் சொல்கிறேன். நீ ராதாதேவியைப் பூசித்துவா. கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமியன்று ராதைக்கு முறைப்படி பூசைகள் செய். பிராமணர்களுக்குத் தானங்களை வழங்கு. ராதாதேவியைப் பிரார்த்திக்கும் போது நிவேதனமாக இனிப்புப் பண்டங்களையும், பழங்களையும் வைத்துப் பூசித்தால் நீ சாபவிமோசனம் பெறுவாய்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

**ம**ன்னன் பிராமணனின் சொற்படி கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று ராதையை முறைப்படி பூசித்தான். அவனது பூசையால் மனம் மகிழ்ந்த ராதை பிராமணின் சாபத்தை நீக்கி மன்னனுக்கு நீண்ட ஆயுளையும், தேவையான செல்வங்களையும் கொடுத்தாள்.

## ௨௦. துர்க்கை வழிபாடு



**வீ**ரத்திற்குரிய தெய்வமாகத் துர்க்கை வணங்கப்படுகிறாள். அவள் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் கொடுமைகள் செய்த கொடிய அரக்கர்களை அழித்துத் தேவர்களையும், மனிதர்களையும் காப்பாற்றியவள். துர்க்கை என்ற பெயரைக் கொண்ட பலம்மிக்க அரக்கன் ஒருவன் அடிக்கடி தேவர்களுடன் போர் செய்து தேவர்களைத் துன்புறுத்தினான். அவன் தேவர்களையும், தேவமகளிரையும் சிறையில் அடைத்துக் கேவலமான தொழில்களைச் செய்வித்தான். அதனால் தேவர்கள் துர்க்கையிடம் முறையிட துர்க்கை அசுரனுடன் பலகாலம் கடுமையாகப் போர் செய்து தேவர்களின் துயரைத் தீர்த்தாள். அதனால் தான் அவளுக்குத் துர்க்கை என்ற பெயர் உண்டானது. அவள் அசுரர்களுடன் போர் செய்யும் போது தேவர்களும், ஏனைய தெய்வங்களும் துர்க்கைக்குத் தேவையானளவு ஆயுதங்களைக் கொடுத்து உற்சாகப்படுத்தினர். அவ் ஆயுதங்களின் சக்திகள் யாவும் இணைந்து அவளுள்ச் சென்று ஐக்கியமாகியதால் அவள் அசுர சக்தியை விட மேலான சக்தியைப் பெற்றதனால் தான் அவளால் அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காக்க முடிந்தது.



**து**ர்க்கை சிவபெருமானின் மனைவி. அதனால் அவளுக்குச் சிவை என்ற சிறப்புப் பெயர் உண்டானது. அத்துடன் அவள் நாராயணனின் சக்தியையும் பெற்றுள்ளாள். அதனால் அவளை 'நாராயணி' என்றும் அழைப்பர். அத்துடன் அவள் விஷ்ணுவால் தோற்றுவிக்கப்பட்டவள். எனவே அவளை 'வைஷ்ணவி' என்றும் அழைப்பர். அத்துடன் 'விஷ்ணுவின் மாயை' என்ற சிறப்புப் பெயரும் துர்க்கைக்கு உண்டு. இவற்றை விடத் துர்க்கையை இஷாணி, சக்தியை, நித்தியை, சனர்தனி, பகவதி, சர்வாணி, சர்வமங்களா, அம்பிகை, கௌரி, பார்வதி என்ற சிறப்புப் பெயர்களாலும் அழைப்பர்.



**சி**வன், கிருஷ்ணன், பிரம்மா, இந்திரன், தேவர்கள் உட்பட உயிர்கள் யாவும் துர்க்கையைப் போற்றிப் புகழ்ந்து வணங்குகின்றனர். மற்றொரு கல்பத்தில் மன்னன் சுரதனும் வைசிய சமாதியும் துர்க்கையைத் துதிக்கின்றனர். இது பற்றிய ஒரு கதை உண்டு. நந்தி என்ற மன்னன் சுரதா என்ற மன்னனுடன் கடும் போர் செய்தான். அதனால் நாட்டைவிட்டுக் குதிரையில் தப்பி ஓடிய சுரதா

நெடுந்தூரம் பிரயாணம் செய்து புஷ்பரத்ரா என்ற காட்டை அடைந்தான். புஷ்பரத்திரா என்ற ஆறு அங்கு பாய்வதால் அக் காட்டிற்கு அப் பெயர் உண்டானது. ஆற்றங்கரையில் இளைப்பாறிய சுரதா, சமாதி என்ற ஒரு குடும்பத்தவனைச் சந்தித்தான். சமாதியின் கொடுமைகளைத் தாங்க முடியாத அவனது மனைவியும், பிள்ளைகளும், உற்றார் உறவினர்களும் சமாதியை வீட்டை விட்டுத் துரத்திவிட்டனர். யாரும் துணையில்லாததால் தவித்துக் கொண்டிருந்த சமாதி, மன்னனான சுரதாவைச் சந்தித்துப் பேசினான். இருவரும் யாரும் இல்லாத அனாதைகளாக இருந்ததால் நண்பர்களாயினர். அவர்கள் எங்கே செல்வது என்று தெரியாமல் பிரயாணம் செய்து புஷ்கரத் தீர்த்தக்கரையை அடைந்தனர். தீர்த்தக் கரையில் மேதஸ் என்ற முனிவர் ஆச்சிரமம் அமைத்துத் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் துர்க்காதேவியின் பக்தனாவர்.

**ச**மாதியும் சுரதாவும் மேதஸ் என்ற முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து தமக்கேற்பட்ட துன்பங்களை எடுத்துக் கூறி அவற்றிலிருந்து காப்பாற்றுமாறு வேண்டினர். அவர்கள் மீது இரக்கம் கொண்ட முனிவர் அவர்களுக்குத் துர்க்கையின் மகிமைகளைக் கூறித் துர்க்கையை முறைப்படி வணங்கும் முறைகளையும் சொல்லிக் கொடுத்தார். அதன்படி இருவரும் துர்க்கையை நினைத்துத் தவம் செய்தனர். நெடுங்காலம் தவம் செய்த இருவர் முன்பும் துர்க்கை தோன்றினாள். "இருவரது தவத்தின் வலிமையைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். மன்னா, நீ இழந்த நாடு நகரங்களைத் திரும்பப் பெற்று நெடுங்காலம் நீதியாக நாட்டை ஆண்டு விட்டு இறுதியில் விஷ்ணுலோகத்தை அடைவாய். சமாதி சதா வேறு நினைவுகள் இன்றி என்னையே நினைத்திருந்தமையால் நீ பகவானாக கிருஷ்ணனின் திருவடியை அடைந்து இன்புற்றிருப்பாய்" என்று கூறி மறைந்தாள். அதன் பின் மன்னன் மண்ணால் துர்க்கையின் உருவத்தைச் செய்து, அதைப் பக்தியுடன் வணங்கிவந்தான். அவன் துர்க்கைக்கு நிவேதனமாக சாதம், இனிப்புப் பண்டங்கள், மலர்கள் போன்றவற்றுடன் மிருகங்களின் இறைச்சி வகைகளையும் சுவையாகச் சமைத்துப் படைத்து வந்தான். பூசை முடிந்தபின்பு மன்னன் சுரதா தான் மண்ணால் செய்த துர்க்கையின் உருவை ஆற்றில் கரைத்துவிட்டான்.



**து**ர்க்கையை ரத்தினங்களால் செய்யப்பட்ட சிங்காசனத்தில் அமர்த்த வேண்டும். உருவம் பொன்நிறத்திலும், முக்கண்களை உடைய துர்க்கையின் தலையில் ரத்தினங்களால் ஆன கிரீடத்தைச் சூடவேண்டும். பல்வேறுபட்ட ஆபரணங்களை துர்க்கைக்கு அணிய வேண்டும். கூந்தல் இடதுபுறம் சுருட்டப்பட்டிருத்தல் வேண்டும். நெற்றியில் சந்தனத்தாலும், குங்குமத்தாலும் திலகம் வைத்தல் வேண்டும்.

**மி**ருகங்களைப் பலியிடாது செய்யப்படும் துர்க்கையின் பூசை சாத்வீகப் பூசை எனப்படும். இதைப் பெரும்பான்மையான வைணவர்கள் பக்தியுடன் செய்கின்றனர். விலங்குகளைப் பலிகொடுத்துச் செய்யப்படும் பூசை துர்க்கா பூசையாகும்.

**ரா**ஜசிக பூசையைச் செய்ய விரும்பும் வைணவர்கள் இப் பூசையைப் புரட்டாதி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச நவமியன்று தொடங்கித் தொடர்ந்து பதினைந்து நாட்கள் முறைப்படி செய்ய வேண்டும். நிவேதனமாக இனிப்புப் பலகாரங்கள், மலர்கள், அரிசி முதலிய தானியங்களைப் படைத்தல் வேண்டும். தூபதீபங்காட்டிப் பூசையை முடித்த பின்பு பிராமணர்களுக்குத் தானம் வழங்க வேண்டும். அடுத்து வரும் சுக்கிலபட்ச நவமியன்று மண்ணால் செய்து ஆராதித்த துர்க்கையை நீரில் கரைத்தல் வேண்டும். பலி கொடுத்துப் பூசை செய்ய வேண்டும். பலிகளை சத்தமி, நவமித் திதிகளில் செய்யலாம். ஆனால் அட்டமித் திதியில் ஒருபோதும் செய்யலாகாது.

## 21. ஏனைய பெண் தெய்வங்கள்

**ஸ்வாகா :-** சிருஷ்டியின் ஆரம்பத்தில் தேவர்கள் பசியுடன் பிரம்மதேவரிடம் சென்று



தனக்கு உணவு தேவை என்று கேட்டபோது, பிரம்மா விஷ்ணுவிடம் கேட்டார். அப்போது விஷ்ணு பிரமாவின் வேண்டுகோளை ஏற்று யாகவடிவில் இருந்தார். அப்போது யாகத்தியிலிருந்து உணவு தோன்றியது. அதைப் பிரம்மா எடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்தார். ஆனால் அதைத் தேவர்களால் உண்ண முடியவில்லை. அதனால் தேவர்கள் மறுபடியும் பிரமனைச் சந்தித்துத் தமக்கு உணவு கிடைக்கவில்லை என்று கூற விஷ்ணு பிரகிருதியை வேண்டுமாறு பிரமாவுக்குக் கூறினார்.



**அ**தைக்கேட்ட பிரம்மா பிரகிருதியை வேண்ட, பிரகிருதி ஸ்வாகா ஆனாள். அதுவே அக்கினியின் எரிக்கும் சக்தியாகும். ஸ்வாகாவின் உதவியின்றி அக்கினியால் செயற்பட முடியாது. அக்கினி தனது சக்தியான எரிநிலையை அடைய வேண்டுமானால் ஸ்சுவாகாவின் சக்தி தேவை. இது பிரம்மாவின் ஆணைப்படியே ஸ்வாகா செயற்படுகிறது. அக்கினியால் தனித்துச் செயற்பட முடியாதென்பதை பிரம்மா அக்கினிக்கு எடுத்துக் கூறி இருவருக்கும் திருமணம்

செய்துவைத்தார். அவர்களுக்கு தாசிணா, காருதஸ்பத்ய, ஆகாவனியம் என்று மூன்று புத்திரர்கள் தோன்றினர். பிராமணர்கள் ஓமத்தீயில் பொருட்களை இடும்போது 'ஸ்வாகா' என்பதையும் சேர்த்தே மந்திரங்களை உச்சரித்தல் வேண்டும்.

**ஸ்வதா :–** உலக சிருஷ்டியின் போதே பிரம்மா பித்ருக்களையும் தோற்றுவித்தார். தான் தோற்றுவித்த பித்ருக்களுக்குப் பிராமணர்கள் கட்டாயம் பிண்டங்கள் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். முன்னோர்களுக்குச் சிராத்தம் செய்யும் போது பிண்டங்களிட வேண்டும். ஆரம்பத்தில் பிராமணர்கள் பித்துருக்களுக்கு இட்ட பிண்டங்கள், அவர்களைச் சென்றடையவில்லை. அதனால் பெரும் பசிகொண்ட பித்துருக்கள் பிரமாவிடம் சென்று தமக்கு உணவு கிடைக்காததால் தாம் பசியால் வாடுவதாகத் தெரிவித்தனர். அதைக் கேட்ட பிரமா 'ஸ்வாகா' என்ற தேவதையைத் தோற்றுவித்து அவர்களுக்கு உணவளிக்குமாறு கட்டளையிட்டார். அத்துடன் பித்துருக்களுக்கு பிண்டமளிக்கும்போது பிராமணர்கள் மந்திரத்துடன் 'ஸ்வாகா' என்ற தேவதையின் நாமத்தையும் சேர்த்து உச்சரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அவ்வாறு உச்சரிக்காவிட்டால் பித்துருக்களுக்கு உணவு சென்று அடையாது என்றும் கூறினார்.

**தட்சணை :–** யாகத்தின் துணைவி தட்சணையாவாள். அதனால் சமயக்கிரிகைகள் முடிந்தவுடன் பிராமணனுக்கு அதற்குரிய தட்சணை அளித்தல் வேண்டும். தட்சணை அளிக்கப்படாத கிரியைகள் எந்தப் பயனையும் தரமாட்டாது. அதனால் தட்சணை கொடுப்பது முக்கியமானதாகும். தானம் கொடுப்பது வேறு, தானங்கள் புண்ணியத்திற்காகக் கொடுக்கப்படும். தட்சணை கூலியாகக் கொடுக்கப்படுவது.



**ஷஷ்டா :–** பிரகிருதியில் ஆறில் ஒரு பங்கை உடையவள் 'ஷஷ்டா' அவள் கார்த்திகேயனின் மனைவியாவாள். பிரம்மாவின் மனதில் இருந்தே ஷஷ்டா தோன்றி ஷஷ்டா குழந்தைகளின் தேவதையாவாள். அவளை வணங்கினால் பிள்ளைகள் இல்லாதவர்களுக்குப் பிள்ளை வரமளிப்பாள். அத்துடன் தாயின் வயிற்றில் இருக்கும் சிசு முதல் ஓடி விளையாடும் குழந்தைகள் வரை அவள் பாதுகாத்து அருள்புரிபவள். அவர்களின் ஆயுளில் பங்கம் வராது காப்பவள்.



**ஸ்**வயம்புவின் மகனான மன்னன் பிரியவிரதன் திருமணம் செய்து பல ஆண்டுகள் கழித்தும் அவனுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் மிக்க வேதனையடைந்த பிரியவிரதன் தீர்த்தயாத்திரைகள் செய்தான். யாகங்கள் பல செய்தான். விஷ்ணுவை நாள்தோறும் பிரார்த்தித்தான். தானதர்மங்கள் செய்தான். அதன் பயனாக

அவனது மனைவி கர்ப்பமுற்றாள். மன்னன் மிக்க மகிழ்வுடன் கோவில்களில் பூசை செய்தான். தான தருமங்கள் வழங்கினான். பத்தாவது மாதம் அவனுக்கு ஓர் ஆண் குழந்தை இறந்து பிறந்தது. அதைக் கண்டு பிரியவிரதன் பெரும் வேதனைப்பட்டான். செய்ய வேண்டிய கிரியைகள், யாகங்கள், தானதர்மங்கள் யாவும் நிறைவாகச் செய்தும் தனக்கு பிறந்த பிள்ளை இறந்தமையால் விரக்தியுற்று குழந்தையின் உடலைப் புதைப்பதற்காகச் சுடுகாட்டுக்குச் சென்று தனது குழந்தையைப் புதைத்துவிட்டுத் தானும் இறக்க வேண்டும் என்று நினைத்தான்.

**அ**ப்போது பிரியவிரதனின் முன் ஷஷ்டா தேவி தோன்றி அவனது இறந்த குழந்தையை உயிர்ப்பித்தாள். பின் தனது அருளைப் பற்றி உலகோர்க்கு எடுத்துச் சொல்லும்படி அவனிடம் சத்தியம் செய்து வாங்கினாள். அவள் மறைந்ததும் பிரியவிரதன் தன்னைப் பார்த்து மகிழ்வுடன் சிரித்த தனது மகனை முத்தமிட்டு விட்டுப் பெருமகிழ்வுடன் அவனை அரண்மனைக்கு எடுத்துச் சென்று அதைப் பெரும் விழாவாகக் கொண்டாடியதோடு ஷஷ்டா தேவி தனக்கு உதவியது பற்றியும் அவள் குழந்தைகளின் உயிரைப் பாதுகாப்பவள் என்றும் மக்களுக்குக் கூறித் தானதருமங்கள் செய்தான்.

**ஷ**ஷ்தா தேவியை ஒவ்வொரு மாதமும் வரும் ஷஷ்டித் திதியன்று பூசிக்க வேண்டும். குழந்தை பிறந்த ஆறாவது நாளும், இருபத்தொராவது நாளும் சஷ்ஷி தேவியைப் பூசிக்க வேண்டும். பூக்கள், பழங்கள், தீபம் தூபம், இனிப்புப் பண்டங்களை நைவேத்தியமாகப் படைக்க வேண்டும்.

**மங்கள சண்டி :-** மங்கள சண்டியும் துர்க்கையின் ஒரு கண்களை உடையவள். அழகான மேனியில் பலவகையான ஆபரணங்களை அணிந்தவள். பெண்கள் அவளைக் கண்கண்ட தெய்வமாக நினைத்து வணங்கவேண்டும். அவ்வாறு வணங்கினால் அவர்கள் விரும்பியவை யாவும் எளிதில் நிறைவேறும். அத்துடன் வளமான நீங்காத செல்வத்தையும், ஆரோக்கியத்தையும், அறிவுடைய பிள்ளைகளையும் மற்றும் மங்களகரமான பொருட்களையும் குறைவில்லாமல் அளிக்கக்கூடிய வல்லமை உடையவள்.



**சி**வபெருமான் திரிபுராசுரர்கள் என்ற அரக்கர்களுடன் கடுமையாகப் போர் செய்த வேளையில் அசுரர்களின் மாயாத்தந்திர வித்தைகளை அடக்குவதற்குத் துர்க்காதேவியின் துணை தேவையென்றுணர்ந்த சிவபெருமான் அவளை நினைத்தார். உடனே சிவனின் முன் துர்க்கை மங்கள சண்டியாகத் தோன்றி சிவபெருமானது வலிமையால் பலமடங்காக அதிகரித்தாள். அதன்பின்பு துர்க்கையை மக்கள் வீரத்துக்குரிய தெய்வமாகக் கருதிப் போற்றி வணங்குகின்றனர்.

**வி**ஷ்ணுவுக்கும் பிருதுவிக்கும் பிறந்த அங்காரகன், துர்க்கையைத் துதித்துப் பல வரங்களைப் பெற்றான். மனு குலத்தில் தோன்றிய அரசனான மங்களன் துர்க்கையை வழிபட்டுத் தனது பலம் மிக்க எதிரிகள் அனைவரையும் மிகச் சுலபமாக அழித்தான்.



**பெ**ண்கள் மங்கள நாயகியான துர்க்கையை செவ்வாய்க்கிழமைகளில் முறைப்படி நோன்பிருந்து பூசை செய்தால் வளமான செல்வமும், அறிவுடைய பிள்ளைகளும் பிறப்பார்கள். திருமணத்திற்குத் தடையாக இருக்கும் தோசங்கள் யாவும் விலகி நல்லொழுக்கமுள்ள தனவந்தன் கணவனாகக் கிடைப்பான். ஆரம்பத்தில் பெண்களே துர்க்கையை வழிபட்டனர். அதனால் குடும்பம் விருத்தியானது. பணம், பொருள், ஆபரணம், பூமி என்பன சேர்ந்தன. அதனால் ஆண்களும் துர்க்கையை வணங்க ஆரம்பித்தனர். அரசர்கள் போரிடச் செல்லுமுன் துர்க்கைக்கு காளி வடிவில் பூசை செய்து அனுக்கிரகம் பெற்ற பின்பே போரைத் தொடங்கினர். அவனது பெருமையை உணர்ந்தவர்கள் அவளைப் பூசித்து பெரும் பயனடைந்தனர். சண்டி என்றால் திறமைமிக்கவள் என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. மங்களா என்றால் மங்களமானவள் கேட்டவற்றையெல்லாம் அருள்பவள் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது.

**மனசா :-** மனசா என்றால் மனதில் இருந்து தோன்றியவர் என்று பொருள். ஒரு சமயம் காசியபரின் மனதில் இருந்து மனசாதேவி என்றொரு பெண் தோன்றினாள். அவள் பேரழகியாகத் தோன்றினாள். அதனால் அவள் உலகில் அவளை மிஞ்சக் கூடிய அழகி இல்லை என்று கருதப்பட்டதால் 'ஜகத்கௌரி' என்ற பெயரைப் பெற்றாள். இவள் நாகராஜனின் சகோதரி என்பதால் 'நாகவாகினி' என்ற பெயரும் இவளுக்குண்டு. நாகவாகினி என்றால் நாகராஜனின் சகோதரி என்று அர்த்தம். இவள் தான் நரகங்களுக்கு அரசி. அதனால் 'நாகேஸ்வரி' என்ற பெயரும் இவளுக்குண்டு. இவள் பாம்புகளின் விசத்தை அகற்றக் கூடியவள். அத்துடன் அகத்திய முனிவரின் தாய் இவள். அதனால் இவளை அகஸ்திய மாதா என்றும் அழைப்பர். 'விஷகாரி' என்ற சிறப்புப் பெயரும் இவளுக்குண்டு.



**ம**னசா கிருஷ்ணனை நோக்கிப் பலகாலம் தவம் செய்து அரிய பல வரங்களைப் பெற்றாள். அத்துடன் மனசா ஒருபெரும் சிவபக்தை. அவள் பாம்பை மாலையாக அணிந்திருக்கிறாள். அவளை வணங்குவோர் தீபம், தூபம், மலர்கள் போன்றவற்றை நிவேதிக்க வேண்டும். ஆதிகால மனிதர்கள் பாம்புக்குப் பயந்தே வாழ்ந்தனர். அக்காலத்தில் பாம்பு தீண்டினால் கட்டாயமாக மரணம் சம்பவிக்கும்.

அதிலிருந்து தப்ப முடியாது. ஏனென்றால் அத்தக் காலத்தில் விசத்தை முறிக்கக் கூடிய மருந்துகள் எவையும் இருக்கவில்லை. அதனால் பிரமாவின் உபதேசப்படி காசியப முனிவர் தனது மனதில் இருந்து மனசாதேவியைத் தோற்றுவித்தார். அதன்பின் பாம்பு கடித்தால் மனசாதேவியை வணங்கி அவளது மந்திரத்தை ஜபித்து விஷத்தை முறக்கும் சிகிச்சை தொடங்கியது. அதன்பின் பாம்பு கடித்தால் கட்டாயமாக மரணம் சம்பவிக்கும் என்ற நிலைமாறியது.

**இ**றந்தவர்களை உயிர்ப்பிக்க வேண்டும் என்று நினைத்த மனசாதேவி அதற்காகச் சிவனை நோக்கிப் பலகாலம் தவம் செய்து இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் கலையைத் தெரிந்து கொண்டாள். அதன்பின் அவள் புஷ்கரத்தில் கிருஷ்ணனைப் பூசித்தாள். அதனால் கிருஷ்ணன் அவளின் முன் தோன்றி, “மனசா, உலகம் முழுவதும் உனது புகழ்பரவும். அதனால் உலகத்தவர்கள் உன்னைத் தெய்வமாக வணங்குவர்” என்று சுறினார். அவள் ஜரக்கரு என்ற முனிவரை மணந்தாள்.



**இ**ருவரும் மிகவும் மகிழ்வாக வாழ்ந்து வந்தனர். ஒருநாள் ஜரக்கரு முனிவர், மனசாவின் மடியில் படுத்து உறங்கிவிட்டார். சூரியன் அஸ்தமனமாகும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சூரியன் அஸ்தமிக்கும் போது உறங்கினால் உறங்குபவனைப் பிரமகத்தித் தோசம் பிடித்துவிடும். அத் தோசத்தை நீக்க பேரும் தவம் செய்ய வேண்டும். அதனால் மனசா, முனிவரைத் தட்டி எழுப்பினாள். நித்திரைவிட்டெழுந்த முனிவர் தன்னை நித்திரை செய்யவிடாது எழுப்பியதற்காகக் கடுங்கோபங் கொண்டு,” கவணனுக்குத் தீங்கு செய்யும் மனைவி கும்பிபாக நரகத்தை அடைவாள். கணவனின் தூக்கத்தைக் கலைத்த மனைவி காலசூத்திர நரகத்தை அடைவாள்” என்று சபித்துவிட்டுத் தவம் செய்யச் சென்றுவிட்டார்.

**க**ணவனால் சபிக்கப்பட்ட மனசா மிக்க வேதனையுடன் கைலாயத்திற்குச் சென்றாள். அங்கு அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு மனசா அஸ்திகன் எனப் பெயரிட்டாள். ஆஸ்திகன் இளைஞனானதும் அவன் சிவனை நோக்கித் தவம் செய்தான். அவன் தவம் செய்யச் சென்ற பின் மனசா, காசியப முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றாள்.

**ப**ரீட்சித்து மன்னன் வேட்டையாடவெனக் காட்டுக்குச் சென்று வேட்டையாடிய போது தாகம் ஏற்பட்டது. அப்போது அவன் ஒரு முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றான். அங்கே முனிவர் நிஷ்டையில் இருந்தார். அதைப்புரியாத மன்னன் பலமுறை “எனக்குத் தாகமாக இருக்கிறது. சிறிது நீர் தாருங்கள்” என்று கேட்டான். நிஷ்டையில் இருந்த முனிவருக்கு அது

கேட்கவில்லை. அதனால் கோபங்கொண்ட பரீட்சித்து மன்னன் வெளியே வந்து பார்த்தபோது ஒரு செத்தபாம்பைக் கண்டான். முனிவரைப் பழிவாங்க விரும்பிய மன்னன் அச் செத்த பாம்பைத் தூக்கிச் சென்று முனிவரின் கழுத்தில் மாலையாகப் போட்டுவிட்டு நாட்டுக்குத் திரும்பினான். அதனால் பெருங்கொபங்கொண்ட முனிவர் பரீட்சித்து மகாராசாவைப் பழிவாங்குவதற்காக நாகராஜனை நினைத்ததும் தவம் செய்தான். அதன் பயனாகப் பரீட்சித்துமகராசா தசன் என்ற பாம்பால் தீண்டப் பெற்றான். அதனால் கோபங்கொண்ட பரீட்சித்து மகாராஜனின் மகன் ஜனமேஜயன் சர்ப்பசஸ்திரயாகம் செய்து பாம்புகள் அனைத்தையும் தான் செய்யும் யாகத்தீயில் விழவைத்தான். பாம்புகள் யாகத்தீயில் விழுந்து இறந்து கொண்டிருந்தன. அதனால் கலங்கிய தசன் இந்திரனிடம் சென்று சரணடைந்தான். அவனது துயரைப் போக்குவதற்காக இந்திரன் மனசா தேவியைப் பிரார்த்திக்க அவள் தனது மகனான அஸ்திகனை அழைத்துத் தசனைக் காப்பாற்றுமாறு கட்டளையிட்டாள்.

**இ**தனால் பெருமகிழ்ச்சியடைந்த இந்திரன் மனசாதேவியை இந்திரசபைக்கு அழைத்து அவளை நவரத்தினங்களால் அமைக்கப்பட்ட சிங்காசனத்தில் அமர்த்தி, மந்தாகினி என்ற புனிதமான நதியில் இருந்து கொண்டு வந்த புனிதநீரால் மனசாவை அபிஷேகம் செய்து பூசையும் செய்தான். அதனால் மனசாதேவி மிக்க மகிழ்வடைந்து இந்திரனுக்குப் பல பரிசுப் பொருட்களைக் கொடுத்தாள். மனசாதேவியைப் பூசிப்பவர்கள் பாம்புகளைக் கண்டு அஞ்சத்தேவையில்லை. ஏனெனில் மனசாதேவி தனது பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு அருகிலேயே இருப்பாள்.

**சுரபி :–** சுரபி பசுக்களுக்கெல்லாம் தாயானவள். ஒருநாள் கிருஷ்ணர் கோகுலத்தில் இருந்தபோது பால் குடிக்க விரும்பித் தனது இடப்பாகத்தில் இருந்து சுரபி என்ற பசுவைத் தோற்றுவித்தார். கோபியர்கள் மணிமயமான பாத்திரத்தில் பாலைக் கறந்து கொடுத்தனர். கிருஷ்ணர் அதை வாங்கி ருசித்துக் குடித்தார். மிகுதியாக இருந்த பாலை அவர் நிலத்தில் ஊற்ற அது பாற்கடலானது. அவர் பால் குடித்த பின்பு பாற்கடலை உருவாக்கிய இடம் கிருஷ்ணனுக்கும், ராதைக்கும், கோபியர்களுக்கும் உல்லாசபுரியானது. அதன்பின் சுரபியின் தேகத்தில் இருந்து பல காமதேனுப் பசுக்கள் தோன்றின. அவை கோபியர்களுக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் தாராளமாக அளித்தன. இவற்றில் இருந்து தோன்றிய பசுக்களை உலகில் உள்ளோர் விரும்பி வளர்க்கின்றனர்.



**சு**ரபியின் மகிமைகளை உணர்ந்த கிருஷ்ணர் சுரபியை வழிபட்டதாக வராகபுராணம் கூறுகிறது. வராக கல்பத்தில் ஒரு விஷ்ணு மூவுலகிலும் உள்ள பசுக்களைப் பால் கொடுக்கக்கூடாது என்று சொல்லப் பசுக்களில் இருந்த பால் வற்றிவிட்டது. தேவர்கள் பாலில்லாமையால் மிகவும் கஷ்டப்பட்டனர். தமக்குப் பாலைத் தரும்படி தேவர்கள்

பிரம்மாவைக் கேட்டனர். பிரம்மா தேவர்களின் துயரத்தைப் போக்குவதற்காக சுரபியை வணங்கி தமக்குப் பால் தருமாறு வேண்டினார். அதனால் மனம் மகிழ்ந்த சுரபி மறுபடியும் உலகத்தவர்களுக்குப் பாலை வழங்கியது. தீபாவளிக்கு அடுத்த நாளிலும், கார்த்திகை மாத்திலும் சுரபியை வணங்கினால் வணங்குபவர்கள் விரும்புபவையாவும் நிறைவேறும் என்று பகவான் கிருஷ்ணர் கூறியுள்ளார். சுரபிக்குப் பூசை செய்யும் போது பொன், பூக்கள், ஆடைகள், அணிகலன்கள், பசுவும் கன்றும் தானமாக வழங்கினால் அதிக பயனைப் பெறலாம்.

## 22. கணேச காண்டம்

**க**ணேசரது வரலாற்றை இப் பகுதி கூறுவதால் இதற்குக் கணேச காண்டம் என்ற பெயர் ஏற்பட்டது. பிரகிருதி கிருஷ்ணனை நோக்கித் தவமிருந்து கணேசரைப் பெற்றெடுத்தாள். பிரகிருதியின் தவத்தால் மனம் மகிழ்ந்த கிருஷ்ணன், தனது ஓர் அம்சத்தைக் கணேசனுக்குக் கொடுத்து அவரை பிரகிருதிக்கு மகனாக அவதரிக்கவைத்தார்.



**பா**ர்வதிதேவி தனக்கு ஓர் ஆண் குழந்தை வேண்டும் என்று நினைத்து, “புண்யக விரத்தை” முறைப்படி அனுஷ்டித்தாள். அதன் பயனாக கிருஷ்ணன் பார்வதிதேவியின் மகனாகப் பிறந்து அவளது மடியில் விளையாடினார். தாயாரான பார்வதிதேவியும், தந்தையான சிவபெருமானும் அழகான அந்தக் குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டு மகிழ்ந்தனர். அவர்கள் பிராமணர்களுக்கும், முனிவர்களுக்கும் தானம் வழங்கினர். அது ஒரு பெரிய விழாவாக நடைபெற்றது. இந்திரன், பிரமா உட்பட அனைத்துத் தேவர்களும் அவ்விழாவுக்கு வந்திருந்தனர். சூரியனின் மகனான சனி அவ்விழாவுக்கு வந்து விழா நடைபெறும் இடத்தைப் பாராது வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார்.

**அ**தைக்கண்டு மிக்க வேதனை அடைந்த பார்வதிதேவி, சனியின் அருகே சென்று, “தேவர்கள் எல்லோரும் வந்து எனது மகனைப் பார்த்து அவனைத் தூக்கி விளையாடி விட்டுச் செல்கிறார்கள். ஆனால் நீர் மட்டும் எம்மில் ஏதோ கோபம் உள்ளவரைப் போல எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறீர். தயவு செய்து எனது குழந்தையை ஆசீர்வதியுங்கள்” என்று சொன்னாள்.

**பா**ர்வதியைக் கண்டு மறுபக்கம் திரும்பிய சனி, “தேவி, நான் சித்திரதன் என்ற கந்தர்வனின் மகளைத் திருமணம் செய்தேன். அவள் கொடுமைக்காரி. என்னை மதிக்காது துன்புறுத்துவாள். அதனால் அவளது தொடர்பு வேண்டாமென்று அவளை ஒதுக்கிவைத்தேன். அதனால் கோபங்கொண்ட அவள், “நீ எதைப் பார்த்தாலும் அப்பொருள் அழியவேண்டும்” என்று சாபமிட்டுவிட்டாள். அதனால் தான் நான் எங்கு சென்றாலும் யாரையும் பார்ப்பதில்லை” என்றான் சனி.

**ச**னியினது பேச்சைக் கேட்ட பார்வதியும், அவளது தோழிகளும் வாய்விட்டுச் சிரித்தனர். பின், “சனிபகவானே, நீர் சொல்வதை நான் நம்பமாட்டேன். அதனால் பயமின்றி எம்மைப்பாரும்” என்றாள் பார்வதி.



**அ**தைக்கேட்டு வேதனைப்பட்ட சனி வேறு வழியின்றிக் குழந்தையை மட்டும் பார்த்தார். அதுவும் முழுமையாகப் பாராது கடைக்கண்ணால் பார்த்தார். அவரது பார்வை பட்டதும் பார்வதியின் மடியில் படுந்திருந்த குழந்தையின் தலை காணாமற் போய்விட்டது. அத்தலை கோலோகத்திற்குச் சென்று கிருஷ்ணனது உடலுட் புகுந்துவிட்டது. அதைக்கண்டு தேவர்கள் அனைவரும் செய்வதறியாது திகைத்துப் போயினர். தலையில்லாத தனது மகனைப் பார்த்த பார்வதிதேவி மயங்கிப்போனாள்.

**அ**தைக்கண்ட கிருஷ்ணன் தனது வாகனமான கருடனில் ஏறிப் பயணம் செய்து ஓர் ஆற்றங்கரையில் இந்திரனது வெள்ளை யானையான ஐராவதரம் படுத்திருப்பதைக் கண்டு, அதன் தலையை வெட்டிவந்து தலையில்லாதிருந்த பார்வதியின் மகனுக்குப் பொருத்தினார். குழந்தை யானை முகத்துடன் எழுந்து விளையாடியது.



**அ**தனால் மகிழ்ச்சியடைந்த சிவபெருமானும், பார்வதிதேவியாரும், அனைத்துத் தேவர்களும் மிக்க மகிழ்வுடன் கோலாகலமாக அந்நிகழ்வைக் கொண்டாடினர். பிராமணர்களுக்கும், முனிவர்களுக்கும் பொன், நவரத்தினங்கள், பசுக்கள், பூமி என்பன தானம் கொடுத்தனர். அவ்வாறு கணேசரின் தலை பொருத்தப்பட்டதை எல்லோரும் மகிழ்வுடன் கொண்டாடியபோதும் அதைப் பார்வதிதேவியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தனது மகனின் அழகான தலை மறைந்துபோனதற்குக் காரணம் சனிதான் என்று எண்ணிக் கடுங்கோபங்கொண்டு சனியை முடமாகுமாறு சபித்தார்.

அதைக்கண்ட தேவர்கள் திகைத்தனர், "தேவி, கணேசரின் தலை மறைவதற்குச் சனி காரணமல்ல. அவர் நீங்கள் கணேசரைப் பார்க்கவில்லை, வாழ்த்தவில்லை என்று கூறியபோது சனிபகவான் தனக்கொரு சாபமுள்ளது. அதைமீறி யாரையாவது பார்த்தால் அவருக்குப் பெருங்கேடு உண்டாகும் என்று கூறியதை நம்பாது, அவரை வற்புறுத்தியமையால் தான் சனீஸ்வரர் கணேசரைப் பார்த்தார். அதனால் நீங்கள் சனீஸ்வரரைக் கோபிப்பது நியாயமானதல்ல" என்று கூறியபோதும் பார்வதிதேவி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் அவர் சாந்தமானார். எனினும் சனியினது முடம் தீரவில்லை. அவர் முன்புபோலத் தாண்டித்தாண்டியே நடந்தார்.

யானை முகத்துடன் காட்சியளித்த கணேசருக்குத் தேவர்கள் பல்வேறுவிதமான பரிசுகளைக் கொடுத்தனர். பிரம்மா கமண்டலத்தைக் கொடுத்தார், பிருதுவி எலி வாகனத்தைக் கொடுத்தாள், தாயான பார்வதிதேவி இனிப்புப் பலகாரங்களையும், கொழுக்கட்டை, பால், தேன், பழம், நெய், தாம்பூலம் என்பவற்றைக் கொடுத்தாள். தேவர்களான இந்திரன், சந்திரன், யமன் போன்றோர் பெறுமதியான ஆபரணங்களைக் கணேசருக்குச் சூடி அழகு பார்த்தனர். இவானும், மேனகையும், பார்வதியும் சந்தணம், குங்குமம், பால், தயிர், மலர்களை நிவேதித்துப் பூசித்தனர்.



கணேசருக்குப் பல பெயர்கள் உண்டு. கஜம் என்றால் யானை, ஆனம் என்றால் முகம். அதனால் யானைமுகமுடைய கணேசர் 'சுயானனன்' ஆனார். அவரது வயிறு பெருத்து நீண்டிருப்பதால் அவரை 'லம்போதரன்' என்று அழைப்பர். பரசுராமன் அவரது ஒரு தந்தத்தை ஒடித்துவிட்டதால் அவரை 'ஏக தந்தன்' என்றும் 'ஒற்றைக் கொம்பன்' என்றும் அழைப்பர். தடைகள், தாமதங்கள், சிக்கல்கள் என்பவற்றை அகற்றிப் பக்தர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதால் அவரை 'விக்னஹரன்' என்றும், 'விக்னேசன்' என்றும், 'விக்னேஸ்வரன்' என்றும் அழைக்கப்படுகிறார். அதைவிட அவருக்கு 'ஏரம்பன்', 'விநாயகர்', 'சூர்ப்பகர்ணன்', 'கஜமுகன்', 'குகராஜன் எனப் பல்லாயிரக்கணக்கான பெயர்கள் உண்டு.

கணேசரை வந்து தரிசித்த விஷ்ணு, "கணேசா, நீதான் உலகோர்க்கு முதற்கடவுள் அதனால் உனக்குப் பூசை செய்து வணங்கிய பின்பே, ஏனைய தெய்வங்களுக்குப் பூசை செய்தல் வேண்டும். உன்னை வணங்காது செய்யப்படும் எந்தச் செயலும் பயன்தரமாட்டாது" என்று வாழ்த்தியருளினார்.

கணேசனுக்கு புஷ்ஷியையும், முருகனுக்குத் தேவசேனையையும் சிவபெருமானும் பார்வதியும் திருமணம் செய்து வைத்தனர்.



**நா**ராயணனைச் சந்தித்த நாரத முனிவர், "பகவானே, எனக்கொரு சந்தேகம் எழுந்துள்ளது. அதைத் தங்களைத் தவிர வேறு எவராலும் தீர்த்துவைக்க முடியாது" என்று நாரதர் கேட்கப் பகவான் சிரித்தார்.

"**ப**கவானே, கணேசர் எல்லாம் வல்லவர், விக்கிணங்களைத் தீர்ப்பவர், அவரை வணங்காது எச் செயலையும் செய்தால் அச் செயல் பூரணமாகாது. அவருக்குத் தான் முதன்முதலாகப் பூசை செய்ய வேண்டும் என்றெல்லாம் அவரது பெருமையைக் கூறினீர்கள். அப்படியிருக்கும் போது அவரது தலை எப்படி மறைந்தது? அத்துயரமான நிகழ்வு ஏன் நிகழ்ந்தது? என்று கேட்டார் நாரதர்.



"**நா**ரதரே, மாலியும் சுமாலியும் பெரும் சிவபக்தர்கள். தினமும் சிவபூசை செய்பவர்கள். பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி உச்சரிப்பவர்கள். எவ்வேளையிலும் சிவனை மறவாதவர்கள். அதனால் அவர்கள் மீது சிவன் பெரும் அன்பு வைத்திருந்தார். ஒரு சமயம் சூரியனுடனும் அவர்கள் இருவரும் முரண்பட்டுக் கொண்டனர். அதனால் கோபங்கொண்ட சூரியன் அவர்கள் இருவரையும் கொல்ல முயற்சித்தான். இதை அறிந்த சிவபெருமான் தனது பக்தர்களைக் காப்பாற்றுவதற்காகச் சூரியனது மார்பில் தனது சூலத்தால் குத்தினார். அதனால் சூரியன் ஆபத்தான நிலையில் இருந்தான். சூரியனுக்கு ஏற்பட்ட காயத்தால் அவன் வருந்துவதைக் கண்ட சூரியனது தந்தையான காசியப முனிவர் சிவனின் மீது பெருங்கோபங் கொண்டு, "எனது மகனைத் தனது சூலத்தால் குத்திக் காயப்படுத்திய சிவபெருமானுக்குப் பிறக்கும் குழந்தையான கணேசருக்குத் தலை வெட்டப்படும்" என்று சபித்தார். அந்தச் சாபத்தால் தான் கணேசரது தலை வெட்டப்பட்டது" என்றார் நாராயணன்.

"**ப**கவானே, நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொண்டேன். கணேசரது தலை மறைந்ததும் ஆற்றங்கரையில் படுத்திருந்த ஐராவதம் என்ற யானையின் தலையைத் தாங்கள் வெட்டி வந்து கணேசனுக்குப் பொருத்தினீர்கள். ஐராவதத்திற்கு இரண்டு தந்தங்கள் முழுமையாக இருந்தது. ஆனால் விநாயகனுக்குப் பொருத்தப்பட்ட ஐராவதத்தின் ஒரு தந்தம் உடைந்திருக்கிறது. இதற்கான காரணம் என்ன?" நாரதர் கேட்டார்.

**ஜ**மதக்கனி முனிவர் தவ பலம் மிக்கவர். அவருடைய மகன் பரசுராமன். ஜமதக்கனி முனிவர் தனியே தனது ஆச்சிரமத்தில் இருந்தபோது பரசுராமர் மீது நீண்டகாலமாகப் பெரும் பகை கொண்டிருந்த காத்தவீரியன் என்ற அரசன் பரசுராமரைப் பழிவாங்க முடியாததால்



அவரது தந்தையின் தலையை வெட்டிச் சென்றுவிட்டான். அதனால் கோபங்கொண்ட பரசுராமர் அரசபரம்பரையினரால் தான் தனது தந்தையின் தலை துண்டிக்கப்பட்டது என்று எண்ணி அரச வம்சம் முழுவதையும் அழிக்க வேண்டுமென்று முடிவுகட்டி ஒவ்வொரு அரசர்களைக் கொன்று தனது கொடூர எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தார். ஒருநாள் தனது குருவான சிவபெருமானைத் தரிசிப்பதற்காகப் பரசுராமர் கைலாயத்திற்குச் சென்றார். கைலாய வாசலில் அமர்ந்திருந்த கணேசர், பரசுராமரைப் பார்த்து, "எனது தந்தையாகிய சிவபெருமான் தற்பொழுது நித்திரை செய்து கொண்டிருக்கிறார். நித்திரை செய்பவரை எழுப்புவது பாவம். அதனால் அவர் விழித்ததும் உள்ளே செல்லுங்கள்" என்றார். கணேசர் சொன்னதைப் பரசுராமர் ஏற்கவில்லை, "அவர் எனது குரு அவரை நான் உடனே தரிசிக்க வேண்டும்" என்று கோபத்துடன் கூறியவாறு உள்ளே செல்ல முயன்றார்.

**மீ**ண்டும் அமைதியாகக் கணேசர் எதையோ கூற முற்படப் பரசுராமர் அவரைத் தாக்க முயன்றார். அதனால் கோபங்கொண்ட கணேசர் பரசுராமரைத் தாக்குவதற்காகத் தனது தந்தத்தில் ஒன்றை கீளமாக்கினார். தந்தம் பரசுராமரைத் தாக்க வந்தபோது, பரசுராமர் தனது கோடரியால் தன்னைத் தாக்க வந்த கணேசரின் கொம்பை வெட்டிப் பூமியில் விழுத்தினார். அதனால் தான் கணேசர் ஒற்றைக் கொம்பரானார்.

**ப**ரசுராமரும், கணேசரும் வெளியே முரண்பட்டதால் திடுக்கிட்டு எழுந்த சிவபெருமான் வெளியே வந்து பார்த்த போது கணேசர் அமைதியாக இருந்தார், "பரசுராமா, உன்னைவிடப் பலமடங்கு பலம் மிக்கவன் கணேசன். அவன் பத்துப் பரசுராமர்கள் வந்தாலும் அனைவரையும் கொன்றுவிடுவான். என்னைத் தரிசிக்க வந்த எனது மாணவனைக் கொல்லக் கூடாதென்பதற்காகவே உன்னைக் கொல்லாது விட்டான்" என்றார் சிவபெருமான்.

**த**னது தவறை உணர்ந்த பரசுராமன் கணேசரை மலர்கள், இனிப்புப் பண்டங்கள், மோதகம், கொழுக்கட்டை முதலியவற்றை நைவேத்தியமாகப் படைத்துத் தீபதூபம் காட்டி வணங்கினார்.



**அ**ப்போது நாரதர் பரந்தாமனைக் கேட்டார், "பகவானே, விநாயகரை வழிபடும் போது துளசியிலையால் ஆராதிக்கக் கூடாது என்று சொல்லியுள்ளீர்கள். இது ஏன் என்று எனக்குச் சொல்லுங்கள்".

**ஒ**ருநாள் கணேசர் கங்கைக் கரையில் அமர்ந்திருந்தார். கங்கை நீரில் பட்டு வீசிய காற்று அவரது உடலெங்கும் பரவி ஒருவிதமான இன்பத்தைக் கொடுத்தது. கரையில் நின்ற மரங்களின் குளிர்மை அவரைத் தாலாட்டியது. மிக்க மகிழ்வுடன் கங்கைக் கரையில் கண்களை மூடி மனதுள் மகிழ்ந்து கொண்டிருந்தார் கணேசர். அப்போது மன்னனான தர்மத்வஜனின் மகள் துளசி அங்கு வந்தாள். மிகவும் வித்தியாசமான தோற்றத்துடன் அமர்ந்திருந்த கணேசர், சிவபெருமானின் மகன் என்பதையும் உணர்ந்து கொண்டாள். அதனால் அவளது மனதுள் இனம்புரியாத ஒரு புதிய உணர்வு பிறந்து அதிகரித்து அது காதலாக மாறியது. அதனால் கணேசரை வணங்கி, "எம்பிரானே, உம்மைக் கண்டு எனது மனம் உம்மை விரும்பிவிட்டது. அதனால் என்னை மணந்து கொள்ளுங்கள்" என்று வெக்கத்தைவிட்டுக் கேட்டாள்.

"**பெ**ண்ணே, நான் திருமணம் செய்து கொள்ளாது பிரம்மச்சாரியாகவே வாழ விரும்புகிறேன். திருணம் என்பது துன்பங்களும், துயரங்களும் நிறைந்தது. அதனால் உனது விருப்பத்தை என்னால் ஏற்க முடியாது" என்றார்.



**து**ளசி மிக்க கவலையடைந்து தன்னை மணந்து கொள்ளும்படி வற்புறுத்தினாள். கணேசர் அவளது காதலை ஏற்காது புறக்கணித்துவிட்டு எழுந்து சென்றார். தான் வற்புறுத்திச் சொல்லியும் தன்னை விரும்பாத கணேசர் செல்வதைக் கோபத்துடன் பார்த்துக் கொண்டு நின்ற துளசி, "என்னைத் திருமணம் செய்யவிரும்பாத நீ எப்பொழுதும் பிரம்மச்சாரியாகவே இரு" என்று சாபமிட்டாள்.

**அ**தனால் கோபங்கொண்ட கணேசர், "நீ ஓர் அரக்களுக்கு மனைவியாவாய். ஈற்றில் துளசிப்புதராக மாறுவாய்" என்று சபித்தார். அதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த துளசி கணேசரை வணங்கித் தனக்கு சாபவிமோசனம் தருமாறு வேண்டினாள். அதனால் மனமிரங்கிய கணேசர், "கடவுள்களுக்கு அர்ச்சிக்கப்படும் பூக்களிலெல்லாம் துளசி இலை சிறந்தது என்றும், விஷ்ணுவைப் பூசிப்போர் துளசியிலையால் அர்ச்சித்தால் அவர்களுக்கு வைகுந்தவாசம் கிட்டும். ஆனால் என்னைப் பூசிப்பவர்கள் எக்காரணம் கொண்டு துளசியிலையால் அர்ச்சிக்கக்கூடாது" என்று சொன்னார். என்று கூறிய பகவான் கிருஷ்ணர், "இப்புராணத்தை உபன்யாசம் செய்பவர்களுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட பூநூலும், வெண்குடையும், குதிரையும், பூக்களும், பழங்களும், இனிப்புப் பலகாரங்களும் தானமாகக் கொடுக்க வேண்டும்" என்றார்.

**23. கிருஷ்ணன் பிறப்பு**



**தே**வகிக்குப் பிரவச காலம் வந்தது. நள்ளிரவு நேரம் பகவான் தேவகியின் கர்ப்பத்தில் இருந்து பூமிக்கு அவதரித்தார். குழந்தையை மிக்க மகிழ்வுடன் பார்த்த வாசுதேவர் அதை வணங்கினார். பின்பு, "பகவானே, உன்னை நீ காப்பாற்றிக் கொள்வாய் என்று எனக்குத் தெரியும். அசுரரை அழித்துப் பூமாதேவியின் பாரத்தைக் குறைக்க அவதரித்த உன்னை யாரால் என்ன செய்ய முடியும்" என்று நினைத்த போது, "வாசுதேவரே, இக் குழந்தையை எடுத்துச் சென்று கோகுலத்தில் வாழும் யசோதையிடம் கொடுத்துவிட்டு, அவளுக்குப் பிறந்த பெண்குழந்தையை எடுத்துவந்து தேவகியிடம் கொடு" என்றொரு அசரீதி எழுந்தது. அசரீதியின் உத்தரவுப்படி வாசுதேவர் குழந்தையை எடுத்துக் கொண்டு கோகிலத்திற்குப் புறப்பட்டார். அப்போது வாயிற் காப்போர் எல்லோரும் பகவானின் அருளால் ஆழ்ந்து உறங்கிவிட்டனர். சிறைக் கதவுகள் தாமே திறபட்டன. யமுனைநதி அவர்களுக்கு வழிவிட்டது. ஆதிசேஷன் அவர்களுக்குக் காவலாக வந்தார்.

**ய**சோதையும் அப்பொழுது தான் பெண்குழந்தையைப் பிரசவித்துவிட்டு மயக்கநிலையில் இருந்தாள். அதனால் அவளுக்குத் தெரியாது குழந்தையை மாற்றிவைத்து விட்டு, யசோதையின் பெண்குழந்தையைக் கொண்டு வந்து தேவகியிடம் ஒப்படைத்தார்.



**தே**வகிக்குக் குழந்தை பிறந்துவிட்டதை அறிந்த கம்சன் மிகுந்த ஆத்திரத்துடன் வந்து அக்குழந்தையின் இரண்டு கால்களையும் பிடித்துத் தூக்கி அதை ஏனைய குழந்தைகளைக் கொன்றதுபோலக் கொல்லக் கல்லில் அடிக்க முயன்றபோது, அக்குழந்தை அவனது கைகளில் இருந்து நழுவி ஆகாயத்தை அடைந்தது. அது எட்டுக் கைகளுடன் பட்டாடைகள் உடுத்தி கம்சனின் முன் காட்சியளித்தது. அதன் எட்டுக் கைகளிலும் சூலம், சங்கு, வில், சக்கரம், கதை போன்ற எட்டு ஆயுதங்கள் இருந்தன. அதைக் கண்ட சித்தர்கள், முனிவர்கள், கின்னர்கள், தேவர்கள் எல்லோரும்

துதித்தனர். அப்போது தேவி, “மூடனே, உன்னைக் கொல்லப் பகவான் இன்னொரு இடத்தில் அவதரித்து விட்டார். உனக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது” என்றாள்.

**அ**தனால் பயந்த கம்சன், வாசு தேவரினதும், தேவகியினதும் கால்களைப் பற்றிப் பிடித்து, “சகோதரியே, மைத்துணரே, நான் உங்களுக்குப் பெரும் கொடுமைகளைச் செய்துவிட்டேன். அத்துடன் உங்கள் பிள்ளைகளையும் கொன்றுவிட்டேன். அதனால் என்னை மன்னியுங்கள்” என்று சொல்லி அழுதான்.

**க**ம்சன் செய்த குற்றங்களை வாசுதேவரும் தேவகியும் மன்னித்தனர்.

**வரலாறு**

**கோ**லோகத்தில் ஸ்ரீதாபன் ராதையை, “ஒரு யாதவப் பெண்ணாகப் பிறந்து கிருஷ்ணனைப் பிரிந்து வாழ்ந்து பலவகையான துன்பங்களை அனுபவித்த பின்பு மீண்டும் கிருஷ்ணனை அடைவாய்” எனச் சபிக்க ராதை பூலோகத்தில் இடையர் குலத்தில் பிறந்தாள். அவ்வேளை பூமாதேவி தன்னால் பூமியின் பாரத்தைத் தாங்க முடியவில்லை என்று பகவான் கிருஷ்ணனிடம் முறையிடக் கிருஷ்ணன் பூமியில் பிறந்தான்.

**அ**ப்போது அந்நாட்டின் அரசனான கம்சன் பூந்தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் வானில் இருந்து ஓர் அசரீதி வாக்கு ஒலித்தது. இவ்வாக்கு ஏனைய புராணங்களில் ஒலித்த அசரீதி வாக்கைவிட மாறுபட்டதாக இருந்தது. இவ்வாக்கு மாயையானது குழந்தை வடிவம் பெற்று வந்து சொன்னதாகும். கம்சன் வாசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்த குழந்தைகளைக் கொல்வது வழக்கம். அதன்படி கடைசியாகப் பிறந்த குழந்தையைக் கொல்லக் கொண்டு சென்றபோது அது திடீரென மறைந்து வானில் தோன்றி இவ்வாறு சொன்னது.



“**மு**ட்டாளான கம்சனே, வீணாக அந்தப் பெண் குழந்தையைக் கொல்லாதே. உன்னைக் கொல்ல வேண்டியவன் வேறு இடத்தில் பிறந்து வீரியத்துடன் வளர்ந்து கொண்டிருக்கிறான். விதிப்படி உரிய வேளையில் வந்து உன்னைக் கொல்வான். இதிலிருந்து நீ ஒருபோதும் தப்ப முடியாது. அதனால் கொல்லவெனக் கையில் வைத்திருக்கும் பெண் குழந்தையைத் தேவகியிடம் கொண்டு சென்று கொடு. அப் பெண் குழந்தை திருமண வயது வந்ததும் ஏகநம்ஷா என்ற பெயருடன் துர்வாச முனிவரைத் திருமணம் செய்யும்” என்று கூறியதும் கம்சன் பெருங்கோபங் கொண்டு அப் பெண் குழந்தையைக் கொண்டு சென்று தேவகியிடம் கொடுத்தான்.

**முற்பிறவி :-** நந்தன் என்ற வசுதுரோணர் என்ற பெயருடன் கோகுலத்தில் வாழ்ந்து வந்தான். அவனது மனைவி யசோதை. துரோணனின் மனைவி தாரை. அவர்களின் விருப்பப்படி கோகுலத்தில் கிருஷ்ணன் அவர்களுக்கு மகனாகப் பிறந்தான். அத்துடன் காசியப முனிவர் வாசுதேவராகவும், அதிதி தேவகியாகவும், கத்துரு ரோகினியாகவும் கோகுலத்தில் அவதரித்தனர்.

## பூதனை வதம்



முனிவர்கள் ஒரு யாகம் செய்தபோது விஷ்ணு வாமனனாகத் தோன்றினார். அப்போது பூதனை வாமனனைக் குழந்தையாக்கி அவனுக்குப் பாலூட்ட விரும்பினாள். அது இவ்வாறு நிறைவேறியது. கிருஷ்ணனால் கொல்லப்பட்ட திருணாவர்த்தனன் என்னும் அரக்கன் முற்பிறப்பில் சகஸ்ராசன் என்னும் பாண்டிய மன்னனாக இருந்தவன். அவன் ஒரு முனிவரின் சாபப்படி அரக்கனானான்.

நந்தன் தனக்குக் குழந்தை பிறந்ததும் பெருமகிழ்வுடன் கார்க்க முனிவரிடம் சென்று அவரை வணங்கித் தனது குழந்தைக்கு ஒரு நல்ல பெயரிடுமாறு கூற, கார்க்க முனிவர் அக் குழந்தைக்குக் கிருஷ்ணன் எனப் பெயரிட்டார். ஏனைய புராணங்கள் கிருஷ்ணன் என்றால் கரிய நிறமுடையவன் என்று கூற, பிரமவைவர்த்த புராணம் கிருஷ்ணன் என்றால் உயர்ந்த மேன்மையான மோட்சத்தை அளிப்பவன் என்று கூறுகிறது.



ஏனைய புராணங்கள் கிருஷ்ணனது குறும்புகளைத் தாங்க முடியாத யசோதை அவனை கயிற்றால் உரலோடு சேர்த்து கட்டியதாகக் கூறுகின்றன. அதனால் கிருஷ்ணனுக்குத் தாமோதரன் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. தாம என்றால் கயிறு உதரன் என்பது வயிறு கிருஷ்ணனது வயிற்றுப் பகுதியில் கயிற்றால் கட்டிய அடையாளம் இருப்பதால் தான் தாமோதரன் என்ற பெயர் ஏற்பட்டது. ஆனால் இப்புராணம் கிருஷ்ணனை நீண்ட துணியால் மரத்தோடு சேர்த்துக் கட்டியதாகக் கூறுகிறது.

**கோபிராதை :-** ஒருநாள் காலையில் நந்தனுடன் கிருஷ்ணன் மாடுகளை மேய்ப்பதற்காகக் கொண்டு சென்றான். அவன் அவசரமாக ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்ததால் அங்கு நின்ற ராதையுடன் கிருஷ்ணனைவிட்டு விட்டுச் சென்றான். நந்தன் சென்ற பின் ராதையும் கிருஷ்ணனும் ஆடிப் பாடி மகிழ்ந்தனர். அதன்பின் கிருஷ்ணன் நந்தனுடன் சென்றுவிட்டான்.

அதனால் ராதை மிகுந்த கவலையுடன் இருந்தாள். அதன்பின் கிருஷ்ணன் இரவில் ராதையின் இருப்பிடத்திற்கு வந்து அவளுடன் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தான். அவன் ராதையுடன் இரவில் ஆடிப்பாடி மகிழும் போது அவனது நிழல் அவனது வீட்டில் தங்கிருந்ததால் யாரும் கிருஷ்ணனைக் காணவில்லை எனத் தேடவில்லை.



**பா**ர்வதி, சித்திரா என்ற ஏரிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்தாள். அவள் செய்யும் பூசைக்குத் தேவையான மலர்களை அருகில் இருக்கும் ஏரிக்கரையில் பறித்துப் பூசை செய்வாள். அவ் ஏரிக்கரையில் மலரும் மலர்களை வேறு எவரும் பறித்துப் பூசை செய்ய முடியாது. மாறிப் பறித்தால் பறிப்பவர்கள் அரக்கர்களாகிவிடுவார்கள் என்று ஒரு சாபம் இருந்தது. இதை அறியாத கந்தர்வர்கள் சித்திரா ஏரிக்கரையில் உள்ள மலர்களைப் பறித்தனர். அவர்கள் கிருஷ்ணனின் பக்தர்கள், இருப்பினும் அம் மலர்களைப் பறித்த மூன்று கந்தர்வர்களும் பகாசுரன், பிரலம்பாசுரன், கேசி என்ற மூன்று அரக்கர்களாகினர். பார்வதி சித்திரா நதிக்கரையில் அனுஷ்டித்த விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்கள் மிகவும் தைரியமான கணவனை அடைவார்கள்.

**பிருந்தாவன் :-** கிருஷ்ணனது மகிழ்வான இருப்பிடங்களில் முக்கியமானது பிரிந்தாவனமாகும். அங்கு வசிக்கும் கோபியர்கள் ஓர் ஆலமர நிழலில் சண்டிகாதேவியை ஸ்தாபனம் செய்து வணங்குவது வழக்கம். அன்று இரவும் சண்டிகாதேவியை வணங்கிவிட்டுக் கோபியர்கள் நித்திரையில் ஆழ்ந்தனர். அவர்கள் அயர்ந்து தூங்கிய பின்பு தேவர்களின் சிற்பியான விசுவகர்மா, பிருந்தாவனத்திற்கு வந்து அங்கு வசிக்கும் ஒவ்வொருவருக்கும் சகல வசதிகளையும் கொண்ட வீட்டை அமைத்துக் கொடுத்துவிட்டு இன்னாருக்கு அவ் வீடு உரியது என்று அங்கு வசிக்கும் கோபர்களின் பெயரைச் சுவரில் எழுதிவிட்டுச் சென்றுவிட்டார். மறுநாட் காலை நித்திரைவிட்டெழுந்த கோபர்கள் தத்தமது பெயர்கள் வீட்டுச் சுவரில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு மிக்க ஆச்சரியம் அடைந்தனர். பின் தத்தமக்கெனக் குறிப்பிடப்பட்ட வீடுகளில் மகிழ்வுடன் குடியேறினர்.

**சு**வயம்புவ மனுவின் வம்சத்தவன் கேதாரமன்னன். அவனுடைய மகள் பிருந்தை. மகளின் மீது அதீத அன்பு கொண்ட கேதாரமன்னன் அவனின் பெயரில் அழகிய நகரம் ஒன்றை அமைத்து அதற்குப் பிருந்தாவம் எனப் பெயரிட்டான் என்று ஏனைய புராணங்கள் பிருந்தாவனத்தின் வரலாற்றைக் கூறப் பிரம்மவைவர்த்த புராணம் அதன் வரலாற்றை வேறுவிதமாகக் கூறுகிறது. ராதைக்குப் பல பெயர்கள் உண்டு. அதில் ஒரு பெயர் பிருதை. கிருஷ்ணனுக்குப் பிருந்தையின் மீது பிரியம் அதிகம் அதனால் தானும் பிருந்தையும்

ஆடிப்பாடிக் கூடி மகிழ்ந்த இடத்தைப் பிருந்தாவனம் எனப் பெயரிட்டதாக இப் புராண வரலாறு கூறுகிறது.

## பிராமணப் பெண்கள்



ஒரு சமயம் கிருஷ்ணனுக்கும் அவரது தோழர்களுக்கும் கடும் பசி எடுத்தது. அதனால் அவர்கள் அந்தணர்களும், அவர்களது பத்தினிகளும் வாழும் வீடுகளுக்குச் சென்று தமக்குப் பசிக்கிறது ஏதாவது உணவு தாருங்கள் என்று கேட்க அந்தணர்களது பத்தினிகள் அவர்களுக்கு உணவு கொடுக்கவில்லை. அதனால் பசிக்களையுடன் பிருந்தாவனத்திற்குச் சென்று அங்குள்ள கோபர்களை அழைத்துத் தமக்குப் பசிக்கிறதென்றும் அந்தணர்களது வீட்டுக்குச் சென்று உணவு வேண்டி வருமாறு கூறக் கோபியர்கள் சென்று கிருஷ்ணன் கூறியதை அந்தணர்களின் பத்தினிமாருக்குக் கூற அவர்கள் வேண்டியளவு உணவை எடுத்து வந்து கிருஷ்ணன் இருந்த இடத்தில் வைத்துக் கொடுத்தனர். கிருஷ்ணனும் அவனது தோழர்களும் உணவை உண்டபின், "பகவானே, தங்களின் அருகிலேயே நாம் எப்போதும் இருக்க அருள் செய்ய வேண்டும்" என்று கேட்டனர். அதை மகிழ்வுடன் கிருஷ்ணன் ஏற்றுக்கொண்டார். அதன்பின் வானில் இருந்து இறங்கி வந்த விமானம் வரங்கேட்ட பிராமணப்பெண்களை ஏற்றிச் சென்று கோலோகத்தில் இறக்கியது. கிருஷ்ணனுக்கு உணவளித்த அத்தனை பெண்களும் கோலோகத்தில் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்தனர். அவர்களது நிழல்கள் பிராமணர்களது வீட்டில் இருந்து பிராமணர்களுடன் வாழ்ந்தன.

## காளியனது நடனம்



மிகக் கொடிய விசமுடைய பாம்பான காளியன் தனது குடும்பத்தவர்களுடன் ஒரு குளத்தில் வாழ்ந்து வந்தது. அது மிகவும் கொடிய நஞ்சைக் கக்குவதால் குளத்திற்கு அண்மையில் உள்ள மரம், செடி, கொடி, புற்கள் யாவும் எரிந்து கொடுமையான நஞ்சுடைய நீரைக் கொண்டிருந்தது. கால்நடைகள் தாகமேற்பட்டால் அக் குளத்தருகே சென்று நீரைக் குடிக்குமுன் அவை எரிந்து இறந்துவிடும். அங்கு குடியிருந்த ஏராளமான மக்கள் காளியனின் விஷநஞ்சால் தாக்கப்பட்டு இறந்தனர். அதனால் எஞ்சியுள்ளோர் தமது வீடுகளை விட்டு வேறு

இடங்களுக்குச் சென்று மிகவும் கஷ்டத்துடன் வாழ்கின்றனர். கோகுலவாசிகள் அந்தக் குளக்கரையில் செழித்து வளரும் புற்களை மேய்ப்பதற்காக அங்கு கால்நடைகளைக் கொண்டு சென்று மேயவிடுவது வழக்கம். பசுக்கள் நன்றாக மேய்ந்த பின் அந்தக் குளத்து நீரைக் குடித்துவிட்டு படுத்திருந்து இரைமீட்கும். பசுக்களை மேய்ப்பவர்கள் குளக்கரையில் செழித்து வளர்ந்திருக்கும் பழமரங்களிலும் காய்த்துக் கனிந்து தூங்கும் விதம்விதமான பழங்களைப் பறித்து உண்பர். குளத்து நீர் மிகவும் தெளிந்து கண்ணாடிபோல இருந்ததால் கோகுவாசிகள் அந்நீரைக் குடிநீராகப் பயன்படுத்தி வந்தனர்.

**கா**ளியன் வந்து அக்குளத்தில் குடியேறிய பின்பு அந்தக் குளப்பக்கம் யாரும் வருவதில்லை. அதனால் கோகுலவாசிகளின் பசுக்களுக்குப் புற்களும், நீரும் இல்லாது போய்விட்டது. அதனால் அவர்கள் மனம் வருந்தினர். அதைத் துயரத்துடன் கிருஷ்ணனுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டுக் கவலையடைந்த கிருஷ்ணன் தனது நண்பர்களை அழைத்துக் கொண்டு காளியன் வசிக்கும் குளக்கரைக்குச் சென்றான்.




**கா**ளியின் குளத்தின் நடுவே படமெடுத்து ஆடிய வண்ணம் கிருஷ்ணனை விழுங்க வந்தான். கிருஷ்ணன் குளக்கரையில் நின்று பட்டுப்போன ஒரு மரத்தின் மீது ஏறிக் காளியனின் தலைமீது குதித்தான். உடனே காளியன் கிருஷ்ணனைத் தனது வாலால் சுருட்டி வாய்க்குள்ப் போட்டு விழுங்கினான். மறுகணம் காளியனால் வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. கிருஷ்ணனது உடலில் இருந்து வெளியேறிய அக்கினியை விட மோசமான வெப்பம் அவனது வயிற்றைச் சுட்டது. அதனால் வெப்பத்தைத் தாங்க முடியாத காளியன், "கிருஷ்ணனைக் கக்கிவிட்டான். அதனால் காளியன் தன்னைச் சுதாகரிக்குமுன் கிருஷ்ணன் பாய்ந்து காளியனின் தலைக்குமேல் குதித்த கிருஷ்ணன் நடனமாடத் தொடங்கினான். அவன் துள்ளிக் குதித்து ஆடியமையால் காளியன் களைத்து வேதனையால் முனகினான்.

**கா**ளியன் வேதனையால் அவதிப்பட்டு அலறுவதால் அவன் இறக்கப்போகிறான் என்று அவனது மனைவியான சுரரை கிருஷ்ணன் மீது பக்தி கொண்டவள். காளியன் விஷத்தைக் கக்கி மரணமடைந்ததும் சுரசை கரங்குவித்து கிருஷ்ணனை வணங்கி, "பகவானே, நான் தங்களுக்குப் பிரியமான பக்தை. எனது கணவன் கொடியவன், நானும் பல முனிவர்களும் அவருக்குக் கெட்ட செயல்களைச் செய்தால் பகவானால் தண்டிக்கப்படுவாய் என்று பலமுறை வேண்டியும் அளவுக்கதிகமான ஆணவத்தால் தங்களைவிட தான் உயர்ந்தவன் என்ற அறியாமையால் கொடூரமாக நடந்து கொண்டார். அதற்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். அவரைக் கொன்றுவிடாதீர்கள்" என்று அழுதாள். அதனால் மனம் மகிழ்ந்த கிருஷ்ணன் காளியனது மயக்கத்தைப் போக்கி அவனை எழுப்பி அக் குளத்தைவிட்டு ரமண

சமுத்திரத்திற்குச் செல்லுமாறு கட்டளையிட அவன் அதற்குச் சம்மதித்து தனது மனைவியான சுரசையின் நிழலுடன் ரமண சமுத்திரத்திற்குச் சென்றான். அப்போது வானிலிருந்து ஒரு விமானம் அங்கு வந்து சுரசையை ஏற்றிக் கோலோகத்திற்குக் கொண்டு சென்றது.

## கோவர்த்தன மலையைத் தூக்குதல்



**யா**கத்தைச் செய்ய வேண்டாம் என்று கிருஷ்ணன் தடுத்ததை அறிந்த இந்திரன் பெருங்கோபங்கொண்டு, சம்வர்த்தம் என்ற மேகக்கூட்டத்தை அழைத்து பெருமழை பெய்யுமாறு கட்டளையிட்டான்.

**இ**ந்திரனது கட்டளைப்படி கோகுலத்திற்குச் சென்ற மேகக்கூட்டம் மழையைப் பொழிய ஆரம்பித்தது. சிறிய தூறலாக ஆரம்பித்த மழை விடாது பொழிந்தமையால் கோகுலம் வெள்ளக்காடானது.

**கு**ளிரையும், மழையையும் தாங்கமுடியாது கோகுலவாசிகள் அல்லற்பட்டனர். அவர்களது குடியிருப்புக்கள் அனைத்திலும் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் உணவு சமைக்கவில்லை. கோகுவவாசிகள் குடும்பம் குடும்பமாக வெளியேறினர். அவர்களுடன் அவர்கள் வளர்ந்த மாடுகளும் வெளியேறின. அவை கிருஷ்ணனிடம் சென்று தம்மைக் காப்பாற்றுமாறு இரந்தன.

**கி**ருஷ்ணன் அவர்களுக்கு ஆறுதல் கூறி, "அஞ்ச வேண்டாம். நான் உங்களைக் காப்பாற்றுவேன்" என்று கூறினான். பின்பு கோவர்த்தனமலையைக் குடைபோல மேலே தூக்கிப்பிடித்தான். கோகுலவாசிகளும் அவர்களது வளர்ப்பு மிருகங்களும் கோவர்த்தன மலையின் கீழ் வந்து நின்றன. ஏழு நாட்கள் மழை விடாது பெய்தது. அந்த ஏழு நாட்களும் கிருஷ்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்தபடி நின்றான்.

**தொ**டர்ந்து ஏழு நாட்கள் பெருமழையைப் பெய்வித்த போதும் கோகுலவாசிகளுக்குப் பாதிப்புகள் ஏற்படாததால், இந்திரனுக்குப் பயமாக இருந்தது. கிருஷ்ணன் மாய விளையாட்டுகள் செய்வதில் மன்னன். அதனால் ஏதாவது செய்து விடுவானோ எனப் பயந்தான்.

**கோ**பர்கள், நந்தகோபரிடம் சென்று கிருஷ்ணனைப் பாராட்டி, "ஏழு வயதில் மலையைத் தூக்கும் தன்மை எவ்வாறு ஏற்பட்டது?" என்று கேட்டனர்.

“**கோ**பர்களே, பகவான் நாராயணர் பூமியில் இப்போது கிருஷ்ணனாக அவதாரம் எடுத்திருக்கிறார். அதனால் தான் அவர் யாராலும் செய்ய முடியாத செயல்களைச் செய்கிறார்” என்றார். அதன்பின் கோகுலவாசிகள் கிருஷ்ணனைத் தெய்வம் எனக்கருதிப் போற்றி வணங்கினர்.

**க**ர்வம் அடங்கிய இந்திரன் கோகுலத்திற்கு வந்து கிருஷ்ணனை வணங்கி மன்னிப்புக் கேட்டான். பசுக்களைக் காப்பாற்றியதால் கிருஷ்ணனைக் கோவிந்தன் என்று மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

**கோ**வத்தன மலையைக் கிருஷ்ணன் சுண்டு விரலால் தூக்கினான் என்று ஏனைய புராணங்கள் கூற இப் புராணம் இடது கையால் கிருஷ்ணன் தூக்கினான் என்று கூறுகிறது. அத்துடன் கோவர்த்தன மலை மீது கோபங் கொண்ட இந்திரன் அம் மலையை உடைக்கத் தனது வஜ்ராயுதத்தைப் பயன்படுத்தினான் என்றும் இப் புராணம் கூறுகிறது.

## உவை



**ப**லிச்சக்கரவர்த்தியின் மகனான சகசிகன் தனது மனைவியான திலோத்தமையுடன் கந்தமாதனபர்வதத்திற்கு வந்தான். அங்கு துர்வாசக முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் தவம் செய்வதைச் சகசிகனும் அவனது மனைவியான திலோத்தமையும் காணவில்லை. அழகான அந்த மலைச்சாரலில் உள்ள மரங்களில் வெண்முகிற்கூட்டம் படிந்திருந்தது. அதனூடாக வந்த சூரியஒளி சகசிகனுக்கும் திலோத்தமைக்கும் காதல் உணர்வை ஊட்டிப் படிப்படியாக வளர்ந்தது. அது யாருமில்லாத ஏகாந்தமான மலைப்பரப்பு என நினைத்த இருவரும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இருவரும் இறுக அணைத்தும், முத்தமிட்டும், காதல் சேட்டைகள் புரிந்தும் மகிழ்ந்தனர். அவர்களது செயலால் துர்வாசக முனிவரது தவம் குழம்பியது. அதனால் கோபங்கொண்ட துர்வாசக முனிவர் சகசிகனைக் கழுதையாகப் பிறந்து கிருஷ்ணனால் கொல்லப்படுவான் என்று சபித்தார். அத்துடன் திலோத்தமை பாணாசுரனின் மகளாகப் பிறந்து கிருஷ்ணனின் பேரனான அநிருத்தனை மணப்பாள் என்றும் சபித்தார்.

**ச**கசிகனையும் திலோத்தமையையும் சபித்ததால் மனக்குழப்பமடைந்த துர்வாசக முனிவர் அலைந்துகொண்டிருந்த போது அவுரவ முனிவரின் மகளான கந்தவியைக் கண்டார். அவளது அழகில் மயங்கிய துர்வாசக முனிவர் அவுரவ முனிவரைச் சந்தித்து வணங்கினார். பின்பு

தான் அவரது மகளான கந்தவியை விரும்புவதாகவும், அவளைத் திருமணம் செய்து தரும்படியும் கேட்டார்.

“**து**ர்வாசக முனிவரே, உம்மைக் கணவனாக அடைய அவள் கொடுத்துவைத்திருக்க வேண்டும். ஆனால் அவள் சண்டைக்காரி, திமிர்பிடித்தவள். யாரையும் மதிக்கமாட்டாள். உம்மைத் திருமணம் செய்தால் நீர் கடுங்கோபக்காரர். அவள் உமக்கு விருப்பமில்லாதவாறு நடந்தால் அவளை நீர் சபித்துவிடுவீர். நீர் தவவலிமைமிக்கவர். எதையும் ஆராயாது முற்கோபத்திற்கு அடிமையாகிவிடுவீர். அதனால் தயவுசெய்து அவளை மறந்துவிடும்” என்றார் அவுரவ முனிவர்.

**க**ந்தகியின் அழகில் காமம் கொண்ட துர்வாசக முனிவர் அவுரவ முனிவரின் வார்த்தையைக் கேட்கவில்லை, “முனிவரே, நீர் பயப்படவேண்டாம். உமது மகளின் நூறு தீய நடவடிக்கைகளை நான் பொறுப்பேன். அத்துடன் அவளின் மீதுள்ள காதல் என்னை அவளுக்குத் துன்பங்கள் செய்யவிடாது. இதைத் தாங்கள் நம்பலாம்” என்றார் துர்வாசக முனிவர்.

**சி**ல நாட்கள் கழிந்தன. திருமணமான புதிதில் அவள் துர்வாசக முனிவரின் அன்புக்குக் கட்டுப்பட்டு அவருடன் மகிழ்வுடன் கூடி மகிழ்ந்தாள். பின் அவளுக்கு முன்னைய குணம் உண்டாகியதால் துர்வாசகருடன் முரண்பட்டாள். நூறுமுறை பொறுமையாக அவளுக்குப் புத்திமதி கூறிய துர்வாசகர் அவள் நூறு முறைகளைக் கடந்து திட்டியபோது பெருங்கோபங் கொண்டு அவளை எரிந்து சாம்பலாகும் படி சபித்தார். அதன்பின் அவுரவ முனிவர் அவளது குணங்களைப் பற்றிக் கூறியபின்பே திருமணத்திற்குச் சம்மதித்தார். அதனால் அவளைச் சபித்துச் சாம்பலாக்கியது பிழை என்று உணர்ந்து மிக்க வேதனையுடன் விஷ்ணுவை மறந்து அலைந்து திரிந்தார்.



**து**ர்வாசக முனிவர் மிக்க வேதனையுடன் தன்னையும் மறந்து பைத்தியக்காரனைப் போல அலைந்து திரிவதை விரும்பாத கிருஷ்ணன் ஒரு சிறுவனின் வடிவெடுத்துத் துர்வாசக முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து, “முக்காலத்தையும் உணர்ந்த மாமுனிவரான நீங்கள் விதியின் தன்மையைப் புரியாது வேதனை கொள்ளலாமா. கடவுள்களுக்கும் விதி உண்டு என்பதை மறந்துவிட்டீர். உமது பாவபுண்ணியங்கள் தான் உம்மை இயக்குபவை என்று உமக்குத் தெரியாதா? கிருஷ்ணனை நினையும். யாவும் அவனது திருவிளையாடல் என்பதை உணரும்” என்று கூறிவிட்டு மறைந்துவிட்டான். சிறுவனாக வந்தவர் கிருஷ்ணர் என்பதையும், உலக தர்மம் எவை என்பதையும் அறிந்த துர்வாசகரின் மனம் சாந்தமடைந்தது.

**தா**ன் சொல்லச் சொல்லக் கேளாது வற்புறுத்தித் தனது மகளைத் திருமணம் செய்த துர்வாசக முனிவரின் சாபத்தால் தனது மகளை எரித்ததை அவுரவ முனிவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் அவர் கோபங்கொண்டு, “துர்வாசக முனிவர் பெரும் பெரும் தோல்விகளைச் சந்திப்பார்” என்று சபித்தார்.

**அ**ம்பரீசன் பெரும் விஷ்ணுபக்தன். அவன் எவ்வேளையிலும் விஷ்ணுவின் நினைவாகவே இருப்பான். விஷ்ணுவுக்குரிய விரதங்கள் அனைத்தையும் முறைப்படி அனுஷ்டிப்பான். விஷ்ணுவுக்குப் பிரியமான துளசியிலையால் மாலைகட்டி அவருக்குச் சார்த்தி மகிழ்வான். தான் குடிக்கும் நீரில் துளசித் தளிர்களைப் போட்டு ஊறவைத்துப் பின் விஷ்ணுவுக்குப் பூசை செய்துவிட்டு உணவை அருந்தித் துளசித் தீர்த்தத்தைக் குடிப்பான்.

**ஒ**ரு சமயம் துர்வாசக முனிவர், அம்பரீஷன் மீது பொறாமை கொண்டு ஒரு பெரும் வீரனை வாளுடன் உருவாக்கி அம்பரீஷனைக் கொல்லுமாறு அனுப்பிவைத்தார். அந்த வீரன் அம்பரீசனை சென்றடைந்து தாக்கமுற்பட்ட போது அம்பரீஷன் விஷ்ணுவைப் பிரார்த்தித்தான். அப்போது விஷ்ணுவின் சக்கரம் தோன்றித் துர்வாசகர் அனுப்பிய வீரனின் தலையை வெட்டிச்சாய்த்து விட்டுத் துர்வாசக முனிவரைக் கொல்வதற்காகத் துரத்தியது.




**வி**ஷ்ணுவின் சக்கரம் தான் அனுப்பிய வீரனைக் கொன்றுவிட்டுத் தன்னைக் கொல்லத் துரத்துவதைக் கண்ட துர்வாசக முனிவர் மிக்க பயம் கொண்டு பிரம்மலோகத்திற்குச் சென்று பிரமனிடம் தன்னைக் காப்பாற்றும் படி கெஞ்சினார்.

“**வி**ஷ்ணுவை ஆராத்தித்தால் அவர் மன்னிப்பார். அடைக்கலம் தருவார். அத்துடன் தேவையான ஆலோசனைகளையும் கூறுவார். சக்கரம் அப்படியானதல்ல. அது ஏவியதைச் செய்யாமல்விடாது. அத்துடன் தன்னைத் தடுக்க யார் வந்தாலும் அது யாரையும் மதியாது. யாரின் சொல்லையும் கேளாது. அதனால் என்னால் உமக்கு அடைக்கலம் தரமுடியாது” என்றார் பிரமன்.

**அ**தைக்கேட்டு மிக்க பயம் கொண்ட துர்வாசக முனிவர் கைலாயத்திற்குச் சென்று சிவனிடம் முறையிட்டுத் தன்னைக் காப்பாற்றுமாறு இரந்தார், “முனிவரே, நீர் சாபமிட்டால் அச்சாபத்தை உம்மால் நீக்க முடியாது. அதற்குப் பிராயச்சித்தத்தைத் தேட வேண்டும். அதுபோன்றது தான் இது. விஷ்ணுவின் சக்கரம் விஷ்ணுவின் சொல்லைக் கேட்டுமே தவிர வேறுயாரின் சொல்லையும் கேளாது. அதனால் விஷ்ணுவிடம் சென்று முறையிடும்” என்றார் சிவபெருமான்.

**அ**தனால் கலக்கமுற்ற துர்வாசகர் வைகுந்தத்திற்குச் சென்று விஷ்ணுவைச் சரணடைந்தார். முனிவரின் முற்கோபத்தால் காரணமின்றி அவர் பலரைச் சபித்துள்ளார். அதை அவருக்கு உணர்த்த வேண்டும் என்று உணர்ந்த விஷ்ணு சொன்னார், "முனிவரே, ஒருவன் என்மீது கொள்ளும் உறுதியான பக்தி, எனது ஆயுதங்களை விடப் பலமானது. எனது பெரும்பக்தனான அம்பரீசனை யாரும் கொல்லவோ, சபிக்கவோ முடியாதவாறு துர்வாசகரைத் தண்டிப்பாயாக" என்று ஆணையிட்டுத் தான் நான் எனது சக்கரத்தை ஏவினேன். அதனால் அவனது பக்தியின் மகிமையை உலம் அறிதல் வேண்டும். அத்துடன் என்மீது உறுதியான பக்தர்களை யாரும் தாக்கவோ, சபிக்கவோ கூடாது என்பதை இச்சம்பவம் உலகோர்க்கு உணர்த்த வேண்டும். அதனால் நீர் சென்று அம்பரீசனைச் சரணடையும்" என்றார்.

**வே**று வழியின்றி துர்வாசக முனிவர் அம்பரீசனிடம் சென்று தன்னை மன்னிக்குமாறு கூற அம்பரீசன் அவரை மன்னித்தான். அவன் மன்னித்ததும் விஷ்ணு ஏவிய சக்கராயுதம் வேகம் தணிந்து திரும்பிச் சென்று விஷ்ணுவை அடைத்தது. அன்று முதல் துர்வாசக முனிவர் விஷ்ணுவின் பக்தர்களைச் சபிப்பதில்லை.



**ஒ**ரு சமயம் ராதையும் கோபியர்களும் தமது ஆடைகளைக் களைந்து யமுனை ஆற்றங்கரையில் வைத்துவிட்டுக் கங்கையில் இறங்கி நீந்தி விளையாடினர். குறும்புகள் செய்வதை விளையாட்டாகக் கொண்ட கிருஷ்ணன் கோபியர்களது ஆடைகளை எடுத்துக் கொண்டு, ஒரு மரத்தில் ஏறி இருந்தார் நீராடி முடித்த கோபியர்கள் ஆற்றங்கரையில் தாம் களைந்து வைத்திருந்த ஆடைகளைக் காணாது திகைத்தனர். அவற்றை விளையாட்டாகக் கிருஷ்ணன் எடுத்துச் சென்றிருப்பான் என நினைத்து சுற்றிவரப் பார்த்தனர் கதம்ப மரத்தின் மீது தமது ஆடைகளுடன் அமர்ந்திருந்த கிருஷ்ணன் அவர்களைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தான்.

"**கி**ருஷ்ணா, விளையாடுவதை விட்டு விட்டு எமது ஆடைகளைத்தா எனக்குக் கூச்சமாகவும், வெக்கமாகவும் இருக்கிறது. தயவு செய்து ஆடைகளைக் கீழே போடு" என்று கோபியர் இரந்தனர்.

**நீ**ங்கள் திரும்பவும் யமுனை ஆற்றில் இறங்கி ராதை பிரார்த்தித்தால் தான் உங்களது ஆடைகளைத் தருவன்" என்றான் கிருஷ்ணன்.

**அ**தைக் கேட்ட ராதை யமுனை ஆற்றில் இறங்கிக் கண்களை மூடிக் கிருஷ்ணனைப் பிரார்த்தித்துக் கோபியரின் ஆடைகளைக் கொடுக்குமாறு கேட்டாள். அதைக் கேட்ட

கிருஷ்ணன் மிக்க மகிழ்வடைந்து கோபியரின் ஆடைகளைக் கொடுத்தான். கோபியர்கள் மகிழ்ந்து சிரித்தவாறு ஆடைகளை அணிந்து தமது இருப்பிடங்களுக்கு சென்றனர்.

## அஷ்டாக்கிரர்

**அ**தன் பின் கிருஷ்ணன் ராதையுடன் பல இடங்களுக்கும் சென்று அங்குள்ள ரம்மியமான இடங்களைப் பார்த்து ரசித்து வந்தான். அவ்வாறு இன்பமாகச் சுற்றித் திரிந்த ராதையும் கிருஷ்ணனும் மலயை மலையடிவாரத்தை வந்து ஓர் ஆலமரத்தின் அடியில் கேதகிப்புதர்கள் இருந்தன. அப்புதர்களின் அருகே இருவரும் மிக நெருக்கமாக அமர்ந்திருந்தது மகிழ்வுடன் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்.



**அ**வர்கள் மிக்க மகிழ்வுடன் அப் பிரதேசத்தின் அழகைப் பார்த்து மெய்மறந்திருந்த வேளை அங்கே அஷ்டவிக்கிர முனிவர் வந்தார். அவரது கோலத்தைக் கண்ட ராதைக்கு சிரிப்பு வந்தது. அதைக் கவனித்த கிருஷ்ணன் அவளைச் சிரிக்கக் கூடாதென்று சைகை மொழியில் கூற ராதை பொங்கி வந்த சிரிப்பை மிகவும் சிரமப்பட்டு அடக்கினாள்.

**அ**ஷ்டவக்கிர முனிவர் வந்து கிருஷ்ணனையும் ராதையையும் வணங்கினார். அப்போது அவரது வக்கிரமான உடல் பழைய நிலையை அடைந்தது. அதனால் முனிவர் மீண்டும் அவர்களை வணங்கிவிட்டு அவர்களிடமிருந்து விடைபெற்றார்.

**அ**வர் சென்ற பின் ராதை கிருஷ்ணனைப் பார்த்து, "பகவானே, அந்த முனிவர் தங்களை வணங்குமுன் அவரது உடல் வக்கிர நிலையில் இருந்தது. ஆனால் அவர் உங்களை வணங்கிய பின்பு புதுப்பொலிவு பெற்றது. இது ஏன்?" என்று கேட்டாள் ராதா.



**அ**ஷ்டவக்கிர முனிவரது முற்பிறப்பைப் பற்றி ராதைக்குக் கிருஷ்ணன் கூறினான். அஷ்டவக்கிர முனிவர், முற்பிறப்பில் ஓர் அந்தணக் குடும்பத்தில் பிறந்து தனது மனைவியுடன் ஒழுக்கமாக வாழ்ந்து வந்தார். அவர் தனது மனைவியைத் தவிர வேறெந்தப் பெண்ணுடனும் காம உறவு கொள்ளாது மிகவும் நேர்மையானவராகவும், உண்மையானவராகவும் எனது பக்தனாகவும் வாழ்ந்து வந்தார். எதை அவர் மறந்தாலும் என்னைப் பிரார்த்திக்க மறந்ததில்லை. இவ்வாறு அவர் ஒழுக்கமாக வாழ்ந்து வரும்போது ஒருநாள் தேவலோகத்தில்

இருந்து பூமியின் அழகைப் பார்க்கவென வந்த ரம்பை என்ற அழகி இவரைக் கண்டு காமங்கொண்டாள். பின் தன்னை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தினாள். அவர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் கோபங்கொண்ட அவள், “வக்கிரபுத்தியுள்ள அந்தணனே, உனது வக்கிரபுத்தியைப் போல உனது உடலும் வக்கிரமாகி அலங்கோலமடையட்டும். அத்துடன் இதுவரை காலமும் நீ செய்த புண்ணியங்கள் அனைத்தும் அற்றுப் போகட்டும்” என்று சாபமிட்டாள். அதைக் கேட்ட அவர் வேதனையைத் தாங்க முடியாது தீக்குளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இதை அறிந்த நான் அவரிடம் சென்று அவரைச் சமாதானம் செய்தேன். அத்துடன் அவருக்கு அஷ்டவக்கிரன் என்ற பெயரையும் சூட்டினேன். அதன்பின் நெடுங்காலம் தவம் செய்த அவர் என்னையும், உன்னையும் தரிசித்து வணங்கியதால் சாபவிமோசனம் பெற்றார்” என்றான் கிருஷ்ணன்.

## பிரம்மனும் மோகினியும்

**பி**ரம்மனின் மீது அப்சரஸ்சான மோகினி காதல் வசப்பட்டாள். எந்தநேரமும் அவள் பிரம்மனையே நினைத்திருந்தாள். ஒருநாள் அவள் தனது காதலை வெளிப்படுத்தியபோது பிரம்மனுக்கு கடுங்கோபம் வந்தது. அதனால் அவர் மோகினியை எச்சரித்தார். அதனால் கோபங்கொண்ட மோகினி, “இனிமேல் பிரம்மனை யாரும் துதிக்கக் கூடாது” என்று சாபமிட்டாள். அதனால் மிக்க கவலை கொண்ட பிரம்மன் நாராயணனிடம் முறையிடுவதற்காகக் கோலோகத்திற்குச் சென்றார். அங்கு அவர் கண்ட காட்சி அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அங்கே அவருக்கு எதிரே பத்துத்தலைகளைக் கொண்ட பிரம்மனைக் கண்டார். அவனின் பின்னால் நூறு தலைகளைக் கொண்ட பிரம்மனும், அவனுக்குப் பின்னால் ஆயிரம் தலைகளைக் கொண்ட பிரமன்களும் நின்றனர். அதைக்கண்ட பிரம்மன், அதுபற்றி வியப்புடன் நாராயணனைக் கேட்டார். அதற்கு நாராயணன், “பிரம்மதேவரே, இப் பேரண்டத்தில் பல உலகங்கள் உள்ளன. அவற்றிலெல்லாம் பல பிரம்மாக்கள் இருக்கிறார்கள். இது உமக்குத் தெரியாதா?” என்று கேட்டார். நாராயணன் அவ்வாறு கூறியதும் பிரம்மனின் அகம்பாகம் முற்றாக அகன்றது. அப்போது நாராயணன், “பிரம்ம தேவரே கங்கையில் சென்று நீராடுங்கள். கங்கையின் புனிதநீர் பாவங்களை மட்டுமல்லச் சாபங்களையும் நீக்கும்” என்றார். பிரம்மனின் அகம்பாவத்தை நீக்கவே விஷ்ணு இவ்வாறான ஒரு நாடகத்தை ஆடினார்.

## சிவனின் பணிவு



**வி**ருகாசுரன் என்ற கொடிய அரக்கன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். நெடுங்காலம் அவன் ஊன் உறக்கமின்றித் தவம் செய்ததால் மிக்க மகிழ்வடைந்த சிவபெருமான் அவனின் முன்தோன்றி, "விருகாசுரா, உனது தவத்தால் நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அதனால் நீ விரும்பிய வரத்தைக்கேள்" என்றார்.


**அ**தனால் மிகவும் மகிழ்ந்த விருகாசுரன், "எம்பெருமானே, நான் யாரின் தலையில் எனது கையை வந்தாலும், நான் கைவைப்பவர் உடனே எரிந்து சாம்பல் ஆகிவிட வேண்டும்" என்று கேட்டான்.

**அ**தைக்கேட்ட சிவபெருமான், அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தார். உடனே அவன் சிவபெருமானுக்கு அருகே சென்று அவரின் தலையின் மீது கை வைத்துச் சிவபெருமான் தந்த வரம் செயற்படுமா எனப் பரீட்சிக்க விரும்பினான். அதை உணர்ந்த சிவபெருமான் அவனிடம் தப்பிப்பதற்காக பல இடங்களுக்கு ஓடிச் சென்றார். விருகாசுரன் சிவபெருமானைப் பின் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தான். இவ்வாறு பல்வேறுபட்ட லோகங்களுக்கும் ஓடிய சிவபெருமான் இறுதியாக வைகுந்தத்திற்குச் சென்று விஷ்ணுவைச் சரணடைந்தார். விருகாசுரனும் சிவபெருமானைப் பின் தொடர்ந்து சென்று வைகுந்தத்தை அடைந்தான்.

**மி**குந்த களைப்புடன் வந்த சிவபெருமானை ஒரு மறைவிடத்தில் இருத்திய விஷ்ணு, விருந்தாசுரனை இன்முகத்துடன் வரவேற்றுவிட்டுச் சொன்னார், "விருந்தாசுரா, சிவன் யாருக்கும் நல்ல வரங்களை அளிப்பதில்லை. பலருக்கு அவர் பொய்யான வரத்தையே ஆராயாது கொடுத்துள்ளார். அவர் உனக்குத் தந்த வரம் சக்தியற்றது. வேண்டுமானால் உனது கையை உனது தலையில் வைத்துப்பார். அது பொய் என்று தெரிந்து கொள்வாய்" என்றார். அதைக் கேட்ட விருந்தாசுரன் சிவனின் மீது நம்பிக்கையை இழந்து தனது கையைத் தனது தலையின் மேல் வைத்தான். அவன் தனது கையைத் தனது தலைமீது வைத்ததும் அவன் உடனே எரிந்து சாம்பலானான். இதனால் ஆராயாது மனம் போனபடி வரமளித்து வந்து சிவபெருமான் விஷ்ணுவைப் பணிந்து கொண்டார். இக்கதை வேறு புராணங்களில் மாறுபாடாகச் சொல்லப்பட்டுள்ளது. அவற்றில் கிருஷ்ணன் மோகினி உருவெடுத்து வர விருத்தாசுரன் அவளின் அழகில் மயங்கி அவளிடம் சென்று தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்க, அவள் தன்னை நடனமாடி வென்றால் அவனைத் திருமணம் செய்வதாக வாக்களித்தாள்.

இருவரும் நடனமடினர். மோகினி ஒரு கட்டத்தில் தனது தலை மீது தனது கையை வைத்து ஆட அசுரனும் அதுபோல ஆட அவன் எரிந்து சாம்பலானான். அப்போது மோகினியின் அழகில் மயங்கிய சிவபெருமானுக்கும் மோகினியான விஷ்ணுவுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அது ஐயப்பன் என அழைக்கப்படுகிறது.

## இந்திரனின் கர்வத்தை அடக்கியது



**இ**ந்திரன் தன்னைவிடப் பெரிய தேவர்கள் யாருமில்லை என்ற எண்ணமுடையவன். தான் தான் தேவர்களின் தலைவன் என்ற திமிரும் அவனுக்கு உண்டு. ஒரு சமயம் பிரகிருதிதேவியின் மீது காரணமின்றி வெறுப்படைந்து அவளை அவமானப்படுத்தினான். அதனால் மிக்க கோபங்கொண்ட பிரகிருதிதேவி, “இந்திரலோகத்தின் அழகு பெருமையாவும் அற்றுப் போகட்டும்” என்று சாபமிட்டாள். அதனால் இந்திரலோகம் தனது பொலிவை இழந்தது.

**த**னது பொலிவும், அழகும், இந்திரலோகத்தின் அழகும் அழிந்ததால் இந்திரன் மிகவும் மனம் வருந்தி தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்துத் தனது நகரமான அமரவதி நகரம் தனது பொலிவை இழந்துவிட்டது. அதனால் அதை முன்பை விட அழகான லோகமாகப் புனரமைக்கும்படி கட்டளையிட்டான்.



**வி**ஸ்வர்மா அமரவதி நகரைப் புதுப்பொலிவுடன் அமைத்தான். அது இந்திரனுக்குத் திருப்திலளிக்கவில்லை. அதனால் இந்திரன் அதைப் புனரமைக்குமாறு கேட்டான். விஸ்வகர்மா பலமுறை மிகவும் அழகாக அமராவதி நகரத்தை திருத்திப் பொலிவும், அழகும் உடையதாக மாற்றியும் இந்திரன் திருப்தியடையவில்லை. அதனால் களைப்படைந்த விஸ்வகர்மா பிரமனிடம் சென்று அதை முறையிட்டான். பிரம்மன் அவனை விஷ்ணுவிடம் அழைத்துச் சென்று நடந்தவற்றை விபரித்தால் இந்திரனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணிய விஷ்ணு ஒரு சிறுவனின் வடிவமெடுத்து இந்திரனிடம் சென்றார். சென்று அமராவதி நகரைப் பார்த்துவிட்டு, “இது மிகமிக அழகான பட்டணமாக இருக்கிறது. முன்பைவிட அழகும், பொலிவும் கூடியுள்ளது. விஸ்வகர்மாவை விட வேறு எவராலும் இப்படியான அழகுமிக்க நகரை அமைக்க முடியாது. விஸ்வகர்மா கட்டிடக் கலையில் பெரும் நிபுணன் நீ எதற்காக விஸ்வகர்மாவின் வேலையில் குற்றம் காண்கிறாய்?” என்று அந்தச் சிறுவன் கேட்டான்.

**அ**ப்படி அச்சிறுவன் சிரித்தவாறு கேலியாகக் கேட்டதும் இந்திரனுக்குக் கடுங்கோபம் வந்தது, "உனக்குக் கட்டிடக் கலையைப் பற்றியோ, இல்லை என்னைப் பற்றியோ என்ன தெரியும். நான் தேவர்களின் தலைவன் இந்திரன் என்பதை அறியாது பேசுகிறாய்" என்றான் இந்திரன்.

**சி**றுவன் பலமாகச் சிரித்தான். பின், "மணல் துளிபோல எண்ணற்ற இந்திரர்கள் உள்ளனர். இந்தப் பேரண்டத்தில் ஒவ்வொரு உலகத்திலும் ஒவ்வொரு இந்திரன் இருக்கிறான். அத்துடன் ஒரு இந்திரனின் ஆயுட்காலம் எழுபத்தொரு யுகங்கள். அதன் பின் இன்னோர். இந்திரன் வந்துவிடுவான். அதை விட நூறு அஸ்வமேதயாகம் செய்து முடித்த அரசனும், இந்திரனாகி விடுவான்" என்றான் அச்சிறுவன். அத்துடன் பிரம்மனின் ஒருநாள்க் கணக்கில் இருபத்தெட்டு இந்திரர்கள் தோன்றி மறைவர்" என்றான் அச்சிறுவன்.

**அ**ப்போது இலட்சக்கணக்கான எறும்புகள் ஓர் எறும்புக்குப் பின்னால் வரிசையாக அணிவகுத்துச் சென்றன. "தேவர்களின் தலைவா, இந்த எறும்புக் கூட்டத்தைப் பார். இவையாவும் முற்பிறப்பில் இத்திரர்களாக இருந்தவை. ஆனால் இப்போது எறும்புகள். இவற்றையெல்லாம் படைப்பது நானே" என்று கூறிச் சிறுவன் மறைந்தான். சிறுவன் மறைந்தபின் சிறுவனாக வந்தவர் விஷ்ணு என்று அறிந்து விஸ்வகர்மாவை அழைத்து, "நீ இனிப்போகலாம்" என்றான் இந்திரன்.

## அக்கினியின் பணிவு



**ஒ**ரு சமயம் அக்கினி தேவன் மிகவும் கர்வங்கொண்டு, "நான் நினைத்தால் மூவுலகையும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்" என்று கூறி பூவுலகை முதலில் எரிக்க ஆயுத்தம் செய்தான். இதை அறிந்த விஷ்ணு ஒரு சிறுவனின் வடிவம் தாங்கி அக்கினி பகவானுக்கு அருகில் வந்து, "அக்கினி பகவானே, உனது மகிமையால் மூவுலகையும் ஒரு நொடியில் எரித்துச் சாம்பலாக்கலாம். அவ்வளவு சக்திமிகுந்தவன் நீ. உனது சக்தியை இந்த நாணல் புல்லின் மேல் காட்டு" என்று கூறி நாணல் புல்லை நிலத்தில் போட்டார். உடனே அக்கினிபகவான் சிறுவனையும் நாணற்புல்லையும் எரிக்க நினைத்து இரண்டையும் சூழ்ந்து கொண்டார். நாணல் புல்லும் சிறுவனும் எந்தவிதமான பாதிப்பும் இன்றி அக்கினிச் சுவாலைக்குள் நின்றான. அதனால் கலவரமடைந்த அக்கினி பகவான் வந்த சிறுவன் விஷ்ணு என்றறிந்து தன்னை மன்னிக்குமாறு வணங்கினான். அதனால் அவனது கர்வம் அழிந்தது.

## இராமனின் கதை




இப்புராணம் இராமனின் கதையையும் மிகச் சுருக்கமாகக் கூறுகிறது. சூதமுனிவர், தனது ஆச்சிரமத்திற்கு வந்திருந்த முனிவர்களுக்கு இராமனின் கதையைக் கூறத்தொடங்கினார், "முனிவர்களே, இஷ்வாகு குலத்தில் தோன்றிய தசரதன் கோசல நாட்டின் மன்னன். நீதிநெறி தவறாது அந்நாட்டை ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் மக்கள் தேவர்களைப் போல மிகுந்த மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். ஆனால் மன்னனான தசரதன் மிகுந்த கவலையுடன் வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பல மனைவியர் இருந்தனர். மூன்று பட்டத்துக்குரிய மனைவியரும் இருந்தனர். ஆனால் இவர்கள் எவருக்கும் பிள்ளைகள் பிறக்கவில்லை. பிள்ளை வரம் வேண்டித் தசரதச் சக்கரவர்த்தி கோவில்களுக்குச் சென்று பூசைகள் செய்தான். தானதருமங்கள் செய்தான். எனினும் பிள்ளைகள் பிறக்கவில்லை.

அதனால் அவன் வசிட்ட முனிவரிடம் சென்று தனக்குப் பிள்ளை பிறக்க ஒரு யாகம் செய்யுமாறு கேட்டான். வசிட்டர் அதை மகிழ்வுடன் ஏற்று புத்திர காமேஷ்டிக யாகம் செய்தார். முனிவர்கள் அந்தணர்கள், அயல்நாட்டரசர்கள் எல்லோரும் யாகத்திற்கு வந்து தசரதச் சக்கரவர்த்தியை வாழ்த்தினர். அப்போது யாக அக்கினிக் குண்டத்தில் இருந்து தோன்றிய தேவபுரிவுன் ஒருவன் பாயசம் நிரம்பிய ஒரு கலசத்தைக் கொண்டு வந்து தசரதச் சக்கரவர்த்திக்குக் கொடுத்தான். மிக்க மகிழ்வடைந்த தசரதச் சக்கரவர்த்தி அவனை வணங்கிப் பாயசயக் கலசத்தை வாங்கிக் கொண்டு அந்தப்புரத்திற்கு சென்று தனது மனைவியான கோசலை, கைகேகி, சுமித்திரை ஆகியோருக்கு பாயசத்தைக் கொடுத்தான். மிக்க மகிழ்வுடன் அதைப் பெற்ற மூவரும் அதைப் பருகினர். பத்து மாதங்களின் பின் கோசலை இராமனையும் கைகேகி பரதனையும், சுமித்திரை இலட்சுமணன், சத்ருக்கன் என்ற பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர்.

தசரதனது பிள்ளைகள் நால்வரும் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் சேர்ந்து கற்க வேண்டிய கல்வி, ஆயுதப் பயிற்சி, போர் முறைகள் யாவற்றையும் முறைப்படி கற்று வல்லவர்களானார்கள். அப்போது விசுவாமித்திர முனிவர் தசரதனது அரண்மனைக்கு வந்தார். அவரை மன்னன் சகல மரியாதைகளுடன் வரவேற்று ஆசனத்தில் இருத்தினான். முனிவர் மிகவும் மகிழ்வுடன் இருந்தார்.

“மன்னா, நாட்டின் நன்மைக்காக நான் காட்டில் ஒரு பெரிய யாகத்தைச் செய்யவுள்ளேன். அக் காட்டில் வசிக்கும் ஒரு அரக்கியும் அவளது வீரர்களும், முனிவர்களுக்குப் பெரும் துன்பங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். நான் தம்மை அழிப்பதற்காகத் தான் யாகம் செய்கிறேன் என்று நினைத்து அந்தக் கொடிய அரக்கி யாகத்தைக் குழப்புவாள். அக் கொடிய அரக்கியைக் கொல்ல இராமனால் மட்டுமே முடியும். அதனால் அவனை என்னுடன் அனுப்பு” என்று கேட்ட போது தசரதன் மிகுந்த கவலை கொண்டான். எனினும் வேறு வழியின்றி இராமனையும் இலட்சுமணனையும் முனிவரோடு அனுப்பிவைத்தான்.




விசுவாமித்திர முனிவருடன் இராமனும் இலட்சுமணனும் வருவதைக் கண்ட கொடிய அரக்கியான தாடகி அவர்களைத் தாக்க இராமன் அவளைக் கொன்று விட்டு முனிவர் யாகத்தைச் சிறப்பாகச் செய்ய உதவினான். பின் முனிவர் யாகம் செய்த போது தாடகியின் வீரர்களான சுபாகுவும், மாரீசனும் இராமலட்சுமணர்களைத் தாக்க வந்தனர். போரில் சுபாகு கொல்லப்பட்டான் மாரீசன் தப்பி ஓடிவிட்டான்.

யாகம் சிறப்பாக நடைபெற்று முடிந்தமையால் மிக்க மகிழ்வடைந்த விசுவாமித்திர முனிவர் இராமனையும் இலட்சுமணனையும் அழைத்துக் கொண்டு கோசல நாட்டிற்குத் திரும்பி வரும் போது வழியில் தனது கணவனின் சாபத்தால் கல்லாக மாறியிருந்த அகலிகைக்கு இராமன் சாபவிமோசனம் அளித்துவிட்டு அவளை அவளது கணவனான கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்று கௌதம முனிவரிடம் ஒப்படைத்து விட்டு மிதிலை நகரை அடைந்தனர்.

மிதிலை நகரை அடைத்ததும் இராமன் முனிவரைக் கேட்டான், “முனிவரே, நாம் எமது நாட்டிற்குச் செல்லாது இங்கு ஏன் வந்தோம்” அதற்கு விசுவாமித்திர முனிவர் கூறினார், “இராமா, மிதிலாபுரி மன்னனான ஜனகன் இன்று தனது மகளான சீதைக்குச் சுயம்வரம் நடத்தப் போகிறான். உலகில் உள்ள அரசர்கள் எல்லோரும் அத் திருமணத்திற்கு வருவார்கள். அங்கு ஒரு வில் வைக்கப்பட்டுள்ளது அதை எடுத்து நாணேற்றி, குறித்த இலக்கை அடித்து விழுத்துபவனுக்குத் தான் சீதை மனைவியாவாள். அதனால் அங்கு சென்று போட்டியில் கலந்து கொள்ளவே இங்கு வந்துள்ளோம்” என்றார் முனிவர்.

சுயம்பர மண்டபத்தில் ஏராளமான இராஜகுமாரர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவராக வந்து வில்லைத் தூக்கினர். பலரால் வில்லைத் தூக்க முடியவில்லை. வில்லைத் தூக்கிய சிலரால் நாணைத் தொடுக்க முடியவில்லை. இராமன் சென்று இலகுவாக வில்லைத் தூக்கி நாணை ஏற்றி குறிப்பிட்ட இலக்கை அடித்துவிழுத்தி விட்டு சீதையைத்

திருமணம் செய்து கொண்டான். அதன் பின் தனது மூன்று தம்பிமாருக்கும் திருமணம் செய்துவைத்தான். அனைவரும் மிக்க மகிழ்வுடன் அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.



**வ**ழியில் அவர்கள் பரசுராமரைச் சந்தித்தனர். பரசுராமர் தவம் செய்து சிவபெருமானிடம் அரியபல வரங்களைப் பெற்றவர். அவரைக் கண்டால் அரசர்கள் கூட நடுநடுங்குவார்கள். அவரை மதிக்காவிட்டால் அவர் எவ்வேளையிலும் கையில் வைத்திருக்கும் கோடரியால் தாக்கிவிடுவார். பரசுராமரைக் கவனிக்காது இராமன் சென்றான். அதைக் கண்டு மிகுந்த கோபங்கொண்ட பரசுராமன், இராமனின் அருகில் சென்று, "இராமா நீ சிவதனுசு என்ற வில்லை உடைத்ததாகக் கேள்விப்பட்டேன். அதை உடைத்ததன் மூலம் நீ பலசாலியாகிவிட முடியாது. சிவதனுசை விடப் பல மடங்கு சக்தியுள்ள 'விஷ்ணுதனுசு' என்ற வில் உள்ளது அதை உடை பார்ப்போம்" என்றார். இராமன் சிரித்தவாறு 'விஷ்ணுதனுசு' என்ற வில்லைத் தூக்க அது உடைந்து பொடிப்பொடியானது. அதைக் கண்ட பரசுராமன், "நீ உண்மையான வீரன். உன்னை வெல்ல யாராலும் முடியாது" என்று வாழ்த்தினார். இராமன் அவரை வணங்கி விடைபெற்றான்.


**நா**டு திரும்பிய இராமனுக்கு தசரதர் முடிசூட்டவிரும்பி அதற்கான ஏற்பாடுகளை மிகவும் விமர்சையாகச் செய்து கொண்டிருந்தார். இதை அறிந்த கைகேகி தசரதனைச் சந்தித்து அவரை வணங்கி முன்பு அவர் தனக்களித்த வரங்கள் இரண்டையும் அப்போது தருமாறு வேண்டினாள். முன்பு ஒரு சமயம் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் மிகவும் கொடூரமான போர் நடைபெற்றது. அப்போரில் தசரதன் தேவர்களுக்காகக் கடுமையாகப் போரிட்டு வென்றான். போருக்குச் சென்ற தசரதனின் தேரின் சில்லில் இருந்த அச்சு ஒன்று கழன்று விழுந்ததைக் கண்ட கைகேசி தனது சுட்டுவிரலை அச்சின் துவாரத்துள் விட்டுத் தேர் கவிழாது காப்பாற்றினாள். அதனால் மகிழ்ந்த தசரதன், அவளைப் பாராட்டி, "உனக்கு விரும்பிய இரண்டு வரங்களைக் கேள்" என்றான். அப்போது கைகேகிக்கு எதுவும் தேவைப்படாததால் "சமயம் வரும்போது கேட்கிறேன்" என்றாள்.



"**மி**க்க மகிழ்ச்சி இப்போதே கேள்" என்றான் தசரதன். அதைக் கேட்டு மிக்க மகிழ்வடைந்த கைகேகி, "ஒரு வரத்தால் இராமன் அரசைத் துறந்து பதின்நான்கு ஆண்டுகள் காட்டுக்குப் போக வேண்டும் என்றும்", மறு வரமாகத் தனது மகன் நாட்டை ஆள வேண்டும் என்றும் கேட்டாள். அதனால் அதிர்ச்சியடைந்த தசரதன் வேறு இரண்டு வரங்களைக் கேள் என்றபோது கைகேகி

மறுத்தமையால் தசரதன் மரணமானான். கைகேகியின் சொற்படி இராமன் காட்டுக்குச் சென்றான். அவனுடன் சீதையும் இலக்குவணனும் காட்டுக்குச் சென்றனர்.

**கா**ட்டின் கரையில் ஓடிய கங்கைக் கரைக்கு வந்தனர். கங்கைக் கரையில் ஏராளமான படகுகள் நின்றன. அப்பிரதேசம் குகனின் ஆதிக்கத்தில் இருந்தது. இராமபிரானின் பெருமைகளை முன்பே அறிந்திருந்த குகன், தனது வீரர்களுடன் வந்து இராமரைத் தரிசித்து வணங்கினான். வீரர்கள் காட்டில் உள்ள அரிய பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தனர். அவற்றை உண்டு இளைப்பாறிய இராமனும் சீதையும் இலட்சுமணனும் பின் குகனின் உதவியுடன் மறுகரையை அடைந்தனர். அங்கு தங்கியிருந்தபோது இலங்கை மன்னனின் சகோதரியான அரக்கி சூர்ப்பனகை வந்து இலக்குணனை மோகமூட்ட அதனால் பெருங்கோபங்கொண்ட இலக்குவணன் சூர்ப்பனகையின் மூக்கை அறுத்துவிட்டான்.



**ஆ**தனால் கோபங்கொண்ட இராவணன் தங்கையின் சொற்படி சீதை மீது மோகங் கொண்டு மாரீசனுடன் அவர்கள் தங்கியிருந்த ஆச்சிரமத்திற்கு வந்தனர். சீதையின் அழகில் மயங்கிய இராவணன் போரில் தப்பியோடிய மாரீசனை ஒரு அழகான மானுருக் கொள்ளுமாறு கூற மாரீசன் அழகான மானாக மாறிச் சீதையின் முன் உலாவினான். அம் மானின் அழகிய தோற்றத்தில் மயங்கிய சீதை அம் மானைப் பிடித்துத் தருமாறு இராமனை வேண்டினாள். இராமன் மானைப் பிடிப்பதற்காகச் சென்றபோது அம் மான் தப்பி ஓடியது. இராமன் அதைத் துரத்திச் சென்றான். அவனால் மானைப் பிடிக்க முடியவில்லை. அதனால் வில்லை எடுத்து நாணேற்றி அம் மானைக் குறிவைத்து அம்பை விட்டான். அம்பு பட்டதும் மானுருவில் இருந்த மாரீசன் இராமனின் குரலில், "இலட்சுமணா என்னைக் காப்பாற்று" என்று அலறியவாறு உயிரைவிட்டான். அதைக்கேட்டுப் பயந்த சீதை இலக்குவணனைச் சென்று இராமனைக் கண்டு வருமாறு அனுப்பினாள். அதேவேளை மாமத்துறவி வேடத்தில் வந்த இராவணன் சீதையைத் தனது புஷ்பக விமானத்தில் பலாத்காரமாக ஏற்றிக் கொண்டு வானில் பறந்தான். அதைக் கண்ட பறவைகளின் அரசனான சடாயு இராவணனோடு போராட இராவணன் தனது வாளால் சடாயுவின் இறக்கைகளை வெட்டினான்.



**இ**ராமனின் அவலக் குரல் கேட்டுச் சென்ற இலட்சுமணன் அது மாயக்குரல் என அறிந்து இராமனையும் அழைத்துக் கொண்டு வருகையில் சடாயு குற்றுயிராகக் கிடந்து சீதையை இராவணன் இலங்கைக்குக் கடத்திச் சென்றதைக் கூறிவிட்டு இறந்துபோனாது. அதன்பின் இராமன் காட்டிற்கு வந்திருப்பதை அறிந்த சுக்கிரீவனும், அனுமானும்

இராமனைத் தரிசிக்க வந்தனர். நடந்தவற்றை அறிந்து கவலைப்பட்ட சுக்கிரீவன் அனுமானை அழைத்து இலங்கைக்குச் சென்று சீதை அங்கிருக்கிறாளா என அறிந்துவரச் சொல்ல, அனுமான் வானவீதியூடாகச் சென்று இலங்கையில் உள்ள அசோக வனத்தில் இருந்த சீதையைக் கண்டு தான் இராமனின் தூதுவன் என்று கூறி இராமன் கொடுத்த மோதிரத்தைக் கொடுத்துவிட்டு, சீதையிடமிருந்து விடைபெற்று வந்து சீதை இலங்கையில்



சிறைவைக்கப்பட்டிருப்பதைக் கூறினான். இராமர் வானரசேனைகளுடன் சென்று இராவணனைக் கொன்று சீதையைச் சிறைமீட்டார். பின் சேதுவில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரமகத்தித் தோசத்தை நீக்கிய பின்பு கோசல நாட்டுக்குச் சென்று முடிசூட்டி அரசனானான். அவனது ஆட்சியில் கோசலநாடு சகல வழிகளிலும் முன்னேறியது. எப்பொழுதும் அனுமான் இராமரது திருவடியில் அமர்ந்து கொண்டான். அங்கதன் உடைவாளை ஏந்தியவாறு இராமனுக்கு அருகில் நின்றான். பரதன் வென்கொற்றக் கொடியைப் பிடித்தபடி நின்றான். இலட்சுமணனும் சத்துருக்களும் இராமனுக்கும் சீதைக்கும் சாமரை வீசினர்.

## 28. கம்சன் ராதை கண்ட கனவு



**க**ம்சனுக்குச் சமீபகாலமாகத் தூக்கம் வரவில்லை. இரவில் மிகமிகப் பயங்கரமான கனவுகள் வந்து அவனது மனதைக் கலக்கிக் கொண்டிருந்தன. யாரோ தன்னைக் கொல்வதாக அடிக்கடி கனவு கண்டு கொண்டிருந்தான். தினமும் மிகவும் பயங்கரமான கெட்ட கனவுகளால் நிம்மதியை இழந்த கம்சன் புரோகிதரான சாக்கியனை அழைத்துத் தான் காணும் பயங்கரமான கனவுகள் பற்றிக் கூறி அதற்குப் பரிகாரம் காணுமாறு சொன்னான். அதைக்கேட்ட புரோகிதரான சாக்கியர், “மன்னா, சிவதனுசை வைத்து ஒரு பெரும் யாகம் செய்தல் வேண்டும். யாகம் செய்யும் போது இடைநடுவே அந்தத் தனுசான வில் உடைந்துவிட்டால் உனக்கு மரணம் வருவது நிட்சயம். அதைத் தடுக்க முடியாது அந்த யாகத்தைச் சிறப்பிப்பதற்காகக் கிருஷ்ணனை அழைத்து சூட்சிகள் செய்து அவனைக் கொன்றுவிட வேண்டும்” என்றார்.

**பு**ரோகிதர் சொன்னதற்கமையக் கம்சன் அக்ரூரரை அழைத்து தந்திரமாகப் பேசி கிருஷ்ணனை அழைத்து வருமாறு துவாரகைக்கு அக்ரூரரை அனுப்பினான்.



**அ**க்ரூரர் துவாரனைக்குப் புறப்பட்ட போது ராதை மிகவும் பயங்கரமான கனவுகளைக் கண்டார். உலகம் இருளில் மூழ்கியிருப்பது போலவும், வானில் பிரகாசித்துக் கொண்டிருந்த சந்திரன் திடீரென்று பூமியில் விழுவது போலவும் கனவு கண்டாள். அதனால் மிகுந்த பயம் அடைந்த ராதை கிருஷ்ணனிடம் தனது கனவு பற்றிச் சொன்னாள், "ராதா, கனவுகள் நமக்குப் பிற்காலத்தில் நடைபெறவுள்ள நன்மை தீமைகளைக் குறிப்பன. அவை சில சமயம் நடக்காமலும் போகலாம். முன்பு கோலோகத்தில் ஸ்ரீராமன் என்னோடு முரண்பட்டுக் கொண்டு நீயும் நானும் நூற்றாண்டு காலம் பிரிந்திருப்பீர்கள் என்று சாபமிட்டான். அதைத் தான் நீ கனவாகக் கண்டாய். சாபப்படி நூறாண்டின் பின் இருவரும் சேர்ந்து மிக்க மகிழ்வுடன் வாழலாம். இதற்காகக் கவலைப்படாதே" என்று ராதையைச் சமாதானப்படுத்திவிட்டுக் கிருஷ்ணன் பலராமனுடன் புறப்பட்டு கம்சனைக் கொல்வதற்காக மதுரைக்குச் சென்றான்.

**ம**துரைக்குச் செல்லும் வழியில் மிக்க அழகுடைய ஒரு பெண் கூனியவாறு நடந்து சென்று கொண்டிருந்தாள். அவளின் மீது இரக்கப்பட்ட கிருஷ்ணன் அவளின் அருகில் சென்று அவளது விபரங்களைக் கேட்டான். அவள்தான் கம்சனுக்குக் குளிப்பதற்கு வாசனைப் பொடிகளைச் சேர்த்து அரைத்துக் கொடுப்பவள் என்று கூறிக் கிருஷ்ணனுக்கு வாசனைப் பொடியைப் பூசிவிட்டாள். அதனால் மகிழ்ந்த கிருஷ்ணன் அவளது கூனலைப் போக்கிவிட்டான் அவள் முற்பிறவியில் இராவணனின் சகோதரியான சூர்ப்பனகை என்று அவளது முற்பிறப்பைப் பற்றிக் கூறிவிட்டுக் கிருஷ்ணன் சென்றான்.



**அ**டுத்த காவலரனில் யானைகள் சிலவற்றைக் கட்டிவைத்திருந்தான் கம்சன். கிருஷ்ணன் வந்ததும் யானைகளை ஏவி அவனைக் கொல்லும்படி கட்டளையிட்டிருந்தான். கிருஷ்ணன் வந்ததும் பாகர்கள் யானைகளைக் கிருஷ்ணன் மீது ஏவினர். அவை மிகுந்த சினத்துடன் கிருஷ்ணனைத் தாக்கியபோது கிருஷ்ணன் சக்கராயுதத்தை ஏவி அவற்றைக் கொன்றுவிட்டு அப்பாற் சென்ற போது பல மல்யுத்த வீரர்கள் அவனைத் தாக்க வந்தனர். அவர்களையும் தாக்கி அழித்துவிட்டுக் கம்சனின் அரண்மனைக்குள்ப் புகுந்த கிருஷ்ணன், கம்சன் சிங்காசனத்தின் மீது அமர்ந்திருந்தான். அசுரர்கள் கிருஷ்ணனைத் தாக்க வந்தனர். அவர்களைத் தாக்கிய கிருஷ்ணன் சக்கராயுதத்தை ஏவ, அது கம்சனின் தலையைத் துண்டித்தது. கிருஷ்ணனைத் தேடி மதுரைக்கு வந்த நந்தனிடம் இனிமேல் தன்னை அவரது மகனாக நினைக்க வேண்டாம்

என்றும், ராதை உண்மையான கோபிகை அல்லவென்றும் அவளைத் தனது தேவைக்காகத் தானே தோற்றுவித்தேன் என்றும் அவள் ராதை அல்ல. அவள் பிரகிருதி தேவி என்றும் கூறியதோடு நானே விஷ்ணு, பிரம்மா, சிவன், சூரியன், அக்கினி, வாயு என்றும் கூறினார். உலகெங்குமுள்ள பொருட்கள் யாவற்றிலும் நானே உள்ளேன். எல்லாம் என்னிலிருந்தே உற்பத்தியாகி வெளிப்படுகின்றன. அதனால் நானே பரமாத்மா. நானே பரப்பிரமம் என்றும் கூறினார். அத்துடன் அன்றாடம் நடைபெறும் சடங்குகள், சகுணங்கள், கனவுகள், தானதருமங்கள், கிரகணங்கள், மக்களின் பல்வேறு வகையான கடமைகள், ஒழுக்கங்கள் பற்றியும் கிருஷ்ணன் நந்தனுக்குக் கூறினார்.

## உத்தவர் தூது



**ம**துரையில் தங்கியிருந்த உந்தவரை கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் தங்கியிருக்கும் ராதையிடம் தூது சொல்லி அனுப்பினான். உத்தவர் மிக்க மகிழ்வுடன் சென்று ராதையைச் சந்தித்தார். அப்போது ராதை கிருஷ்ணனைப் பிரிந்த சோகத்தில் மிகவும் மெலிந்து கறுத்து பெரும் துயரத்துடன் இருந்தாள். பட்டாடையை அவள் உடுத்தவில்லை. ஆபரணங்கள் எவற்றையும் அணியவில்லை. மிகவும் எளிமையான உடையில் அவளைக் கண்ட உத்தவர் வேதனைப்பட்டார். ஆனால் ராதை கிருஷ்ணனைப் பற்றிக் கேட்டு அவரது சுகநலன்களை அறிந்து மகிழ்ந்து அவருக்குப் பெறுமதியான ஆபரணங்களையும், நவரத்தின மாலைகளையும், பட்டாடைகளையும் பரிசாக வழங்கினாள். அதனால் உத்தவர் பெருமகிழ்ச்சியடைந்தார்.

**உ**த்தவர் வந்து ராதையைச் சந்தித்து கிருஷ்ணனைப் பற்றிக் கூறியபின்பு கிருஷ்ணன் கோகுலத்திற்கு வந்து ராதையைச் சந்தித்துக் கூடி மகிழ்ந்த பின்பு இருவரும் சித்தாஸ்சிரமத்திற்கு வந்து கணேசரை வழிபட்டனர். அப்போது அங்கு வந்த பார்வதிதேவி இருவரையும் மிக்க மகிழ்வுடன் பார்த்து, “உங்களுக்கு ஸ்ரீராமன் இட்ட சாபம் நீங்கிவிட்டது. இனி இருவரும் கூடி வாழலாம்” என்று கூறி வாழ்த்தினாள்.

**இ**ருவரும் கோகுலத்திற்கு வர கோகுலவாசிகள் மிக்க மகிழ்வுடன் அவர்களை வரவேற்றனர். அது ஒரு பெரும் விழாவாக அமைந்தது. அதன் பின் அவர்கள் இருவரும் பிருந்தாவனத்திற்கு வந்தனர். கோகுலத்தில் உள்ள ஓர் ஆலமர நிழலில் பிருந்தாவன

வாசிகள் அனைவரையும் அழைத்து, "கலியுகம் பிறக்கப் போகிறது. கலியுகம் மிகமிகக் கொடுமையானது. அதனால் நீங்கள் எல்லோரும் கோலோகத்திற்குச் செல்லுங்கள்" என்றார்.



**கி**ருஷ்ணன் நூறு ஆண்டுகள் மதுரையிலும் துவாரகையிலும் இருந்தார். நந்தனது வீட்டில் பதினொரு ஆண்டுகள் தங்கியிருந்தார். ராதையுடன் பிருந்தாவனத்தில் பதின்நான்கு ஆண்டுகள் சேர்ந்திருந்தார். பகவதத்தில் கிருஷ்ணன் ஒரு வேடனால் கொல்லப்பட்ட பின் அவர் வைகுந்தத்தை அடைந்து தனது அவதாரத்தை முடித்துக் கொண்டார். இவ்வாறு ஏனைய புராணங்கள் கூற பிரம்மவைவர்த்த புராணம் வேறு விதமாகக் கூறுகிறது. அவதார முடிவில் லட்சுமி துவாரகையை விட்டுச் சென்றுவிட்டாள் என்றும், பூகம்பம் ஏற்பட்டது என்றும், யாதவர்கள் தம்முள் முரண்பட்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொன்றனர் என்றும், ஐரா என்ற வேடன் தவறுதலாக அம்மை எய்ய, அவ் அம்பால் தாக்கப்பட்ட கிருஷ்ணனைக் காணத் தேவர்களும், பிரம்மாவும் வந்தனர் என்றும், எல்லோரையும் கிருஷ்ணர் சமாதானப்படுத்திவிட்டு வேடனைக் கிருஷ்ணர் கோலோகத்திற்கு அனுப்பிவைத்தார் என்றும் இப் புராணம் கூறுகிறது.

**ப**லராமரின் உடல் சேஷநாகத்துடன் இணைந்து வாசுதேவர் காசியப முனிவரோடும், தேவகி, காசியப முனிவரின் மனைவியான அதிதியின் உடலோடும் சேர்ந்தனர். துவாரகை கடலில் மூழ்கிவிட்டது. கிருஷ்ணனது உடலில் இருந்து ஓர் உருவம் சங்கு, சக்கரம், கதை, தாமரைப் பூக்களைக் கொண்ட நான்கு கைகளுடன் வெளிப்பட்டுச் சென்று விமானத்தில் ஏறி பாற்கடலை அடைந்தது. அதன்பின் கிருஷ்ணனது இடது பக்கத்தில் இருந்து யாதவச் சிறுவன் கோபாலர்களின் உருவில் வெளிப்பட்டான். இந்நிகழ்வு ஸ்தேத்வீபத்தில் நடைபெற்றதாகவும். பிரம்மவைவர்த்த புராணம் கூறுகிறது.

**நா**ன்கு கரங்களுடனும் அக்கரங்களில் சங்கு, சக்கரம், கதை, தாமரை மலருடனும் தோன்றிய நாராயணன் வைகுந்தத்தை அடைந்தார். கோபாலன் குழலை ஊதிக்கொண்டு கோலோகத்திற்குச் சென்றான். எல்லோரும் 'ஹரி ஹரி' என்று நாராயணனின் நாமத்தை உச்சரித்தனர்.

**கோ**லோகத்தில் கிருஷ்ணன் ராதையுடன் ரத்தினங்களால் அமைக்கப்பட்ட சிங்காசனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது, "ராதா நாதா ராதே சா" என்ற நாமம் ஒலித்தது.


## 29. நாராயணனும் நாரதரும்



**வை**குந்தத்தில் நாராயணனைச் சந்தித்த நாரதர், "பகவானே, இனி நான் தவம் செய்ய விரும்புகிறேன். அதற்காக இமயமலை செல்லலாம் என நினைக்கிறேன். அங்கு செல்லாமா? என்று கேட்டார்.

"**நா**ரதரே, நீர் இப்போது தவம் செய்ய இயமமலைக்குச் செல்ல முடியாது. ஏனென்றால் நீர் கந்தர்வனாக இருந்தபோது மணந்த ஐம்பது மனைவியர்களுள் ஒருத்தி சிவனருள் பெற்ற மன்னனான சிரிஞ்ஜயனின் மகளாகப் பிறந்து உமக்காகக் காத்திருக்கிறாள். அவளை மணக்க வேண்டியது உனது கடமை" என்றார்.

**அ**வளை மணந்த பின்பு நாரதன் பகவானை மறந்துவிட்டான். அவள் கொடுத்த இன்பம் பகவானை மறக்கச் செய்துவிட்டது. அதை அறிந்த சனத்குமாரர் நாரதனை அவளது மோகமயக்கத்தில் இருந்து மீட்டெடுத்து உண்மையை விளக்கிக் கூறி முன்புபோல பகவானின் நாமத்தை உச்சரித்தவாறு மூவுலக்கத்தையும் வலம் வருமாறு கூற நாரதன் மெய்யுணர்வு பெற்றுப் பகவானின் நாமங்களைப் பலகாலம் உச்சரித்துப் பகவானோடு இணைந்து கொண்டான்.



**- முற்றும் -**